கல்வெட்டும் கல்வெட்டியலும்

வினா-விடை

ஆக்கியோன்,
தா. ம. வெள்ளைவாரணம்

மோகன் பதிப்பகம்
4 பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி
சென்னை-600 005.



உ
சிவ சிவ

கல்வெட்டும் கல்வெட்டியலும்

வினு விடை

ஆக்கியோன் :

மதுரகவி,
திருமுறைச்செம்மல், வித்துவான்
தா. ம. வெள்ளைவாரணம்,
தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

வெளியீடு :
மோகன் பதிப்பகம்
சென்னை—600 005.

விலை ரூ. 5—00

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

—ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

ஜீவன் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5. (2286)

36/2

முன்னுரை

தமிழன்பர்களே! மாணவர்களே!!

நன்கு கற்றுத் திறம்படைத்த மாணவர்களாய் இருப்பவர்களில் சிலர் தேர்வு எழுதுங்கால் பல பகுதிகளேயும் நன்கு கற்று மனப்பாடம் செய்திருக்கும் திறத்தால், வினவிற்கு உரிய பகுதியை மட்டுமேயன்றி வேண்டாத பகுதிகளேயும் ஒன்றுவிடாமல் எழுதிவிடுகின்றனர்கள். மற்றும் பலர் தம் பாடப்பகுதியை மட்டுமே கற்றறிந்திருப்பதால் ஆய்வுரைகளாகக் கேட்கப்படும் வினக்களுக்கு விடையளிக்க முடியாமல் நின்றுவிடுகிறுர்கள்.

எனவே, நான் கல்லூரியில் முப்பது ஆண்டுகளாகப் பாடம் சொல்லிய பழக்க அறிவினேக் கொண்டும், மாணவர்களின் நடைமுறையை நன்கு அறிந்தும், வினவிற் கேற்ப விடையளிக்கும் திறம் மாணவர்களுக்குப் பெருக வேண்டும் என்னும் நோக்கத்துடன்

புலவர் தேர்வு வினவிடை

(தொல், எழுத்து, இளம்பூரணம்)
(தொல், எழுத்து, நச்சினர்க்கினியம்)
(தொல், சொல், சேனவரையம்)
(தொல், பொருள், இளம்பூரணம்)
(தொல், பொருள், நச், பேரா.)
(நன்னூல் விருத்தி)
(நன்னூல் காண்டிகை)
(அகப்பொருள் விளக்கம்)
(புறப்பொருள் வெண்பா மாலே)
(யாப்பருங்கலக்காரிகை)
(தண்டியலங்காரம்)

என்பன வெளியிட்டுள்ளேன். இப்போது கல்வெட்டும் கல்வெட்டியலும் வினாவிடை என்ற இந்நூல் முதற் பதிப்பாக வெளிவருகிறது.

மாணவர்கள் இவ் வினா விடை நூலைக் கற்றறிவதோடு பிற வினாவிடைகளையும் கற்றறியக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

இந்நூலை வெளியிடும் உரிமையை **மோகன் பதிப்பகத்தார்க்கு** வழங்கியுள்ளேன். இதேபோல் என்னுடைய வினாவிடைகள் பிறவும் மோகன் பதிப்பகத்தின் வாயிலாகத் தொடர்ந்து வெளிவரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்ஙனம் மோகன் பதிப்பகத்தின் வாயிலாக வெளிவரும் என்னுடைய வினாவிடைகளை வழக்கம் போல் வாங்கி ஆதரிக்கும்படி மாணவர்களையும் தமிழன்பர்களையும்கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பனந்தாள்,
1—2—1980

இங்ஙனம்,
தா. ம. வெள்ளைவாரணம்

36/2

கல்வெட்டும் கல்வெட்டியலும்

வினு விடை

1. கல்வெட்டு (ஓர் அறிமுகம்)

1. பல்லவ மன்னன் சிம்ம வர்மனின் பள்ளன் கோயிற் செப்பேடுகள் பற்றி விவரிக்க.

தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி வட்டம் பள்ளன் கோயில் என்னும ஊரில் மேட்டு நிலத்தைப் பயிரிடுவதற்காகச் செப்பனிட்டபோது ஒரு செப்பேடு கிடைத்தது. இது, கிடைத்த இடத்தின் பெயரால் பள்ளன் கோயிற் செப்பேடு என அழைக்கப் படுகிறது.

இச்செப்பேடு முத்திரையுடன் கூடிய செப்பு வளையத்தில் கோக்கப்பெற்ற 5 ஏடுகளை உடையது. இவற்றில் முதல் ஏடு உடைந்துபோய் அதன் ஒரு பகுதி மட்டும் இருக்கிறது. இச் செப்பேட்டின் முற்பகுதி வட மொழியாகவும் பிற்பகுதி தமிழ்மொழியாகவும் அமைந்துள்ளன.

தமிழ் நாட்டில் இது வரை கிடைத்துள்ள செப்பேடு களில் தமிழ் மொழியில் அரச ஆணையைக் கொண்டிருப் பவற்றில் இச் செப்பேடுதான் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

இச் செப்பேட்டின் வடமொழிப் பகுதி, 1. சிம்ம விஷ்ணு பல்லவன் தனது ஆட்சியை காவிரிக் கரை வரை விரிவு செய்ததையும், 2. திருப் பருத்திக் குன்றில் வாழ்ந்த வச்சிர நந்திக் குரவர் என்ற சமணப் பெரி யார்க்கு அமண் சேர்க்கை என்ற ஊரைப் பள்ளிச் சந்த மாகக் கொடுத்ததையும் கூறுகிறது. தமிழ்ப் பகுதி, 1. சிம்ம வர்மன் தனது 6ம் ஆட்சி ஆண்டில் வசசிர நந்திக் குரவர்க்கு அமண்சேர்க்கை என்ற ஊரைப்

பள்ளிச் சந்தமாகக் கொடுத்து ஆணை பிறப்பித்ததையும், 2. பெருநகர நாட்டார் அவ்வாணைப்படி அறையோலை செய்து கொடுத்ததையும், 3. அமண் சேர்க்கையின் நான்கெல்லைகளையும், 4. பெருநகர நாட்டார் வச்சிர நந்திக் குரவர்க்குத் தாமாகவே தாமர் என்ற ஊரில் 16½ பட்டி நிலம் கொடுத்ததையும், 5. அந் நிலத்தின் எல்லைகளையும் கூறுகிறது.

இச் செப்பேட்டின் காலம் ஏறத்தாழக் கி.பி. 550; ஆணத்தி—நரபயன்.

2. வஜ்ஜிர நந்திக் குரவர்க்கு நிலதானம் செய்தவர்கள் யார் யார்? அவர்கள் செய்த நிலதானம் பற்றிய விபரமும் தருக.

பருத்திக்குன்றில் வாழ்ந்த வஜ்ஜிர நந்திக் குரவர்க்கு நிலதானம் செய்தவர்கள் சிம்ம வர்மப் பல்லவனும் பெருநகர நாட்டாரும் ஆகிய இருவருமாவர்.

நிலதானம் பற்றிய விவரம் : 1. சிம்ம வர்மன் தனது 6ம் ஆட்சி ஆண்டில் வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டார்க்கு ஒரு ஆணை அனுப்பினுன். அந்த ஆணையில், "பருத்திக் குன்றில் வாழும் வஜ்ஜிர நந்திக் குரவர்க்கு அமண் சேர்க்கை என்ற ஊரைப் பள்ளிச் சந்தமாகக் கொடுத்தோம்; தாங்களும் படாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறையோலை செய்து கொடுத்து விடுக்க.' என்று எழுதப்பட்டிருந்தது. அந்த ஆணை எழுதிய திருமுகத்தை நரபயன் என்ற ஆணத்தி பெருநகர நாட்டாரிடம் சேர்ப்பித்தான். நாட்டாரும் திருமுகம் கண்டு தொழுது தலைமேல் வைத்து அதிற கண்டபடி படாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறையோலை செய்து, அநத அறையோலையை ஆணத்தியின் வாயிலாக அரசனுக்கு அனுப்பி வைத்தனர்.

அறையோலையில் கண்டபடி தானம் செய்யப்பட்ட ஊரின் நான்கெல்லை யாவன:—**கீழ்பால் எல்லை:** 1. ஏந்தலேரியின் கீழைக் கடறு, 2. ஓமைக் கொல்லை

எல்லை. **தென்பால் எல்லை :** 1. வேள்வடுகன் கேணி, 2 கடற்றின் எல்லை, 3. நீலபாடி எல்லை, 4. விலாடன் குற்றேத்தத்து எல்லை. **மேல்பால் எல்லை:** 1. மாவேத்தத்தின் வதி, 2. மும்மூலை ஏத்தத்து எல்லை, 3. ஆற்றெல்லை. **வடபால் எல்லை:** 1. பெருங்கொல்லை, 2. பாண்டியன் கயத்து எல்லை, 3. முருக்கங்கேணி எல்லை.

இப்பெருநான்கெல்லையகத்து அகப்பட்ட நீர் நிலமும் புன்செயும் களரும் கன்று மேய்பாழும் காடும் பீடிலிகையும் கிடங்கும் கேணியும் மனையும் மனைப் படப்பும் உடும்போடி ஆமை தவழ்ந்த தெலலாம் உள் நிலம் ஒழிவின்றிக் கோவும் பொறியும் மாற்றிக் குடி நீக்கி இவ்வூரை வஜ்ஜிர நந்திக் குரவர் பெற்றுக் கொண்டார்.

நிலதானம் பற்றிய விவரம் : 2. பருத்திக் குன்றில் வாழ்ந்த வஜ்ஜிர நந்திக் குரவர்க்கு வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டார் தாமர் என்ற ஊரில் 16½ பட்டி நிலத்தைப் பள்ளிச் சந்தமாகக் கொடுத் தனர். (ஒரு பட்டி என்பது 1200 குழி நிலம்.)

இந்த நிலத்தின் நான்கெல்லையாவன : **கீழ்பால் எல்லை**—புலி கிழார் பட்டி. **தென்பால் எல்லை**—முள்ளெறி பாக்கத்து எல்லை. **மேல்பால் எல்லை**—போக்குவாய்ச் செறு. **வடபால் எல்லை**—பல்லாங்குழிக்கா.

3. பல்லவர் காலத்தில் அரச ஆணை எவ்வாறு அளிக்கப் பட்டது என்பதையும் அவ்வாணையைச் சபையார் எவ்வாறு நிறைவேற்றினர் என்பதையும் பள்ளன் கோயில் செப்பேட்டின் வாயிலாக விளக்குக.

பல்லவர் காலத்தில் அரசன் தனது ஆணையை ஓர் ஓலையில் எழுதச் செய்வான். அவ் வோலை திருமுகம் எனப்படும். அந்தத் திருமுகம் ஆணத்தி என்பவன் வழியாக ஊர்ச் சபையார்க்கு அனுப்பப் பெறும். சபையார் அத் திருமுகத்தை வாங்கித் தலைக்குமேல் வைத்து மரியாதை செய்வர். பின்பு அதிற் கண்ட ஆணைப்படி நிலமுள்ள இடத்துக்குச் சென்று நிலத்தின்

எல்லேகளை அளந்து கல்லும் கள்ளியும் நடுவர். அவ்வெல்லேகளை எழுதிக் கையொப்பமிட்டு அறையோலை செய்வர். அறையோலையை ஆணத்தி வாயிலாக அரசனுக்கு அனுப்பி வைப்பர்.

இச் செய்திகளைஎல்லாம் பள்ளன் கோயில் செப்பேட்டால் விளக்கமாக அறிய முடிகிறது. அச் செப்பேட்டில் உள்ள விபரம் வருமாறு:—[விபரத்தை விடை 2-னுள் நிலதானம் பற்றிய விபரம் 1-என்பதில் காண்க.]

4. முதலாம் பரமேச்சுவரனின்கூரம் செப்பேடுகள் பற்றி விவரிக்க.

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டத்தில் உள்ள கூரம் என்ற ஊரில் உள்ள கோவிலின் அறங்காவலர் ஒருவரிடமிருந்து ஒரு செப்பேடு கிடைத்தது. இது, கிடைத்த இடத்தின் பெயரால் கூரம் செப்பேடு என அழைக்கப்படுகிறது. இச்செப்பேடு தற்போது சென்னைப் பொருட்காட்சியகத்தில் இருக்கிறது.

இச்செப்பேடு முத்திரையுடன் கூடிய செப்பு வளையத்தில் கோக்கப்பெற்ற 7 ஏடுகளை உடையது. இவற்றில் இறுதி ஏடு உடைந்துபோய் அதன் ஒரு பகுதி மட்டும் இருக்கிறது. இச்செப்பேட்டின் முற்பகுதி வடமொழியாகவும் பிற்பகுதி தமிழ் மொழியாகவும் அமைந்துள்ளன.

வடமொழிப் பகுதியில் பல்லவரது வரலாறும், முதல் நரசிம்ம வர்மன் இரண்டாம் மகேந்திரன் முதலாம் பரமேஸ்வரன் ஆகியோரது வெற்றியும், விச்சா விநீதப் பல்லவ பரமேசுரன் கூரத்தில் கோயில் கட்டியதும், பரமேஸ்வர மங்கலம் என்ற ஊரைத் தேவதானமாகக் கொடுத்ததும் கூறப்பட்டுள்ளன. மேலும், முதல் நரசிம்ம வர்மன் சேர சோழ பாண்டியர்களையும் களப்பிரர்களையும் மீண்டும் மீண்டும் முறியடித்தான் என்றும், அவன் இரண்டாம் புலிகேசியைப் பரியளம்

மணிமங்கலம் சூரமாரம் முதலிய இடங்களில் புறங்கண்டான் என்றும், அவன் வாதாபி நகரையும் அழித்தான் என்றும், பரமேஸ்வர வர்மன் சாளுக்கிய விக்கிரமாதித்தனை வென்ருன் என்றும் கூறப்பட்டுள்ளன.

தமிழ்ப் பகுதியில் விச்சாவிநீதப் பல்லவரசன் கூரத்தில் விச்சா விநீதப் பல்லவ பரமேஸ்வரகரம் என்ற கோயிலைக் கட்டிப் பாரதம் வாசிக்க ஒரு மண்டபமும் கட்டி வழிபாடு செய்பவர்க்கு மனையும் வகுத்து இறைவனுக்குப் படைக்கும் அவி உணவுக்காக நிலமும் வழங்கிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் தேவ கருமம் நவகருமம் பாரதம் வாசித்தல் வேதமோதல் ஆகியவற்றுக்காகப் பரமேஸ்வர மங்கலம் என்ற ஊரை அளித்த செய்தியும், அவ்வூரின் வருவாயை 25 பங்காக்கி இன்னின்னுர் இத்தனை பங்கு பெற வேண்டும் என்ற விபரமும், அவ்வூரில் வாங்கப் பெற்ற வரிகள் இன்னின்ன என்பதும் கூறப்பட்டுள்ளன.

இச் செப்பேட்டின் காலம் கி.பி. 675.

5. கூரம் செப்பேட்டால் அறியப்படும் அறச்செயலை விவரித்து எழுதுக.

கூரம் செப்பேட்டால் அறியப்படும் அறச்செயல்

விச்சா விநீதப் பல்லவரசன் என்பவன் விலைக்காணம் கொடுத்துக் கூரம் என்ற ஊரில் 5¼ பட்டிநிலம் வாங்கினுன். இந்நிலத்தில் சூளைமேட்டுப்பட்டி என்ற இடத்தில் ஓடு (செங்கல்) சுட்டுக்கொண்டு வந்து ஊரில் விச்சாவிநீதப் பல்லவ பரமேச்சுவரகரம்என்றகோயிலைக் கட்டினுன். கோயிலின் அருகே ஏரி ஒன்றும் தோண்டினுன். ஊருள்ளே பாரதம் வாசிக்க மண்டபம் ஒன்று கட்டினுன். தளிவழிபாடு செய்வார்க்கு மனையும் மனைப் படப்பும் வகுத்துக் கொடுத்தான். இவைகளுக்கு உரிய நிலம்போக எஞ்சிய நிலத்தையும் சூளை மேட்டுப் பட்டியையும் இறைவனுக்குப் படைக்கும் அவிஉணவுக்கு விளைநிலமாக வகுத்தான்.

மேலும், மணயிற் கோட்டத்துப் பன்மா நாட்டுப் பரமேஸ்வரமங்கலம் என்ற ஊரை இக்கோயிலுக்கு வேண்டிய தேவகருமம் நவகருமம் செய்வதற்கும் பாரதம் வாசிப்பதற்கும் வேதமோதுவதற்கும் பிரம தேயமாக்கினுன். அதாவது இவ்வூரின் நிலத்தை இருபத்தைந்து பங்காக்கினுன். இவற்றில் கூரத்துத் தளிக்குத் தேவகருமம் நவகருமம் செய்வதற்கு மூன்று பங்கும், கூரத்து மண்டபத்தில் பாரதம் வாசிக்கும் போது தேவைப்படும் தண்ணீர்க்கும் தீக்கும் (விளக்கிற்கும்) ஒரு பங்கும், இம்மண்டபத்தில் பாரதம் வாசிப்பவர்க்கு ஒரு பங்கும், வேதம் ஓதுவதற்காக இருபது சதுர்ப்பேதிகளுக்கு இருபது பங்கும் உரியதாக வகுத்தான்.

மற்றும் பரமேஸ்வர மங்கலத்தில் கிடைக்கும் வரிகளான மனை மனைப்படப்பு ஊராட்சி செக்கு தறி கூலம் தரம் கத்திக்காணம் முதலியவற்றை எல்லாம் இருபத்தைந்து பங்காக்கி மேற்கூறப்பட்ட பங்குப் படியே பங்கிட்டு அனுபவிக்க வேண்டும் என்று வகுத்தான்.

6. விச்சாவிநீதப் பல்லவரசன் செய்த தர்மத்தை விபரமாக எழுதுக.

விடை: 5—னுள் காண்க.

7. கூரம் செப்பேட்டால் அறியப்பெறும் வரிகளை இன்னின்ன எனக் குறிப்பிட்டு விளக்கமும் தருக.

கி. பி. ஏழாம் நூற்ருண்டில் வழக்கிலிருந்த பல்லவர் கால வரிகளைப் பற்றிக் கூரம் செப்பேட்டால் அறிந்துகொள்ள முடிகிறது. அவ்வரிகளாவன:— மனை, மனைப்படப்பு, ஊராட்சி, செக்கு, தறி, கூலம், தரம், கத்திக்காணம்.

விளக்கம்

1. மனை—குடியிருக்கும் வீட்டுமனைக்காக வாங்கப்பட்ட வரி.

2. மனைப்படப்பு—வீட்டின் கொல்லைபுறத் தோட்டத்துக்காக வாங்கப்பட்ட வரி.

3. ஊராட்சி—ஊராட்சி நடத்துவதற்காக வாங்கப்பட்ட வரி.

4. செக்கு—செக்காட்டும் வாணியரிடம் வாங்கப்பட்ட வரி.

5. தறி—தறியில் நெசவு செய்வாரிடம் ஆடையாக வாங்கப்பட்ட வரி.

6. கூலம்—தானியங்கள் விற்பாரிடம் தானியமாக வாங்கப்பட்ட வரி.

7. தரம்—நிலத்தின் உயர்தரத்துக்காக வாங்கப்பட்ட வரி.

8. கத்திக்காணம்—கத்தி முதலான போர்க்கருவிகளைச் செய்வோரிடம் வாங்கப்பட்ட வரி.

8. கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வழக்கிலிருந்த பல்லவர் கால வரிகளைப் பற்றி எழுதுக.

விடை: 7—ல் காண்க.

9. பாண்டியன் பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரச் செப்பேடுகள் பற்றி விபரம் தருக.

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி வட்டத்தில் உள்ள தளவாய்புரம் என்ற ஊரின் புறவெளியிலிருந்து ஒரு செப்பேடு கிடைத்தது. இது கிடைத்த இடத்தின் பெயரால் தளவாய்புரச் செப்பேடு என அழைக்கப்படுகிறது.

இச்செப்பேடு முத்திரையுடன் கூடிய செப்பு வளையத்தில் கோக்கப்பெற்ற 7 ஏடுகளை உடையது. முத்திரையில் இரட்டை மீனும் புலியும் இவற்றின் கீழே ஒரு வில்லும் இவற்றைச் சுற்றி விளிம்பில் ஒரு வடமொழிச் சுலோகமும் பொறிக்கப்பட்டுள்ளன. இச்செப்பேட்டின் முற்பகுதி வடமொழியாகவும் பிற்பகுதி தமிழ்மொழியாகவும் அமைந்துள்ளன.

இச்செப்பேட்டின் வடமொழிப் பகுதியில் 39 வட மொழிச் சுலோகங்கள் உள்ளன. இந்த வடமொழிப் பகுதியான பிரசஸ்தியை ஸ்ரீவல்லப மங்கலத்துக் கணஸ்வாமி பட்டனின் மகனும் யோகேசுவரபட்டனின் தம்பியுமான ஸ்ரீ மாதவன் என்பவன் இயற்றினன்.

இச்செப்பேட்டின் தமிழ்ப்பகுதி வட்டெழுத்தால் எழுதப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள தமிழ் வாசகத்தைப் பாண்டிமாராயப் பெருங்கொல்லனுகிய சிரீவல்லவன் என்பவன் எழுதினன். இத்தமிழ்ப்பகுதி "ஓங்குதிரை வியன் பரப்பில்" எனத் தொடங்குகிறது. இத்தொடக்கமும் பத்துப்பாட்டில் ஆருவதான மதுரைக் காஞ்சியின் தொடக்கமும் ஒன்ருக அமைந்துள்ள செய்தி ஈண்டு ஒப்புநோக்கி இன்புறத்தக்க ஒன்ருகும்.

மேலும் இத்தமிழ்ப்பகுதியில் புராணகாலப் பாண்டியரது மரபும் வரலாற்றுக்காலப் பாண்டியரது மரபும், அவர்களது அருஞ்செயல்களும், வெற்றிச் செயல்களும், பாண்டியன் பராந்தக வீரநாராயணனிடம் நாராயணங்கேசவன் விண்ணப்பித்துக் கொண்டதும், விண்ணப்பத்தின்படி திருமங்கலம் சோமாசிக்குறிச்சி என்ற ஊர்களைப் பெற்றுக் கொண்டதும், அவ்வூர்களின் பெருநான்கெல்லைகளும், பிரசஸ்தி செய்தவன் தமிழ் தொடுத்தவன் எழுத்துப் பொறித்தவன் ஆகியோரது பெயர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களின் விபரமும் கூறப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டின் விஞ்ஞாபதி—ஸ்ரீநாராயணங்கேசவன். ஆணத்தி—இளையான் நக்கன். மத்தியஸ்தன்—சேந்தங்கிழான் எழுத்துப் பொறித்தவன்—நிருபசேகரப் பெருங்கொல்லனான நக்கன். காலம்—கி. பி. 9ம் நூற்றுண்டு.

10. தளவாய்புரச் செப்பேட்டில் கூறப்பட்ட புராண காலப் பாண்டியரது மரபை எழுதி அப்பாண்டியர்களைப் பற்றிச் சிறுகுறிப்பும் வரைக.

புராண காலப் பாண்டியரது மரபு

1. திருமால் 2. பிரமன் 3. அத்திரி 4. இந்து கிரணன் (சந்திரன்) 5. புதன் 6 புரூரவன் 7. வடிம் பலம்பநின்ற பாண்டியன் 8. உக்கிரகுமாரபாண்டியன்

சிறுகுறிப்பு

1. திருமால்: இவர், திருப்பாற்கடலை ஆலயமாகக் கொண்டு, திசைமகளிர்கள் மெய்காவலராக இருக்க, மேகமாகிய விதானத்தின்கீழே, ஆயிரம் பணமணிகள் விளக்காக ஒளிவிட்டு இமைக்கத், தும்புரு நாரதர் ஆகியோரின் யாழிசை செவியிலே விழப், பூமிதேவியும் திருமகளும் திருவடிகளை வருட, ஆதிசேடனாகிய படுக் கையில் கண்படுக்கும் கார்வண்ணர் ஆவார்

2. பிரமன்: இவன், திருமாலின் உந்தியிலிருந்து எழுந்த பொற்றாமரை மலரின்மேல் சடைமுடி கமண் டலம் அக்ஷமாலை என்பவற்றோடு தோன்றியவன்; நான்கு புயமும் நான்குமுகமும் எட்டுக்கண்களும் உடையவன்; நான்கு வேதமும் ஓதுபவன்.

3. அத்திரி: இவர், பிரமனின் மனத்திலிருந்து பிறந்த முனிவராவார்.

4. இந்துகிரணன் (சந்திரன்): இவன் அத்திரி முனிவரது கண்ணிலிருந்து பிறந்தவன்.

5. புதன்: இவன் சந்திரனின் மகன்.

6. புரூரவன்: சிவபெருமானது வழியில் வந்த இளன் என்பவன் ஒருநாள் ஈசனது சாபத்தால் பெண்ணாக மாறினான். அப்பெண்ணுக்கும் புதனுக் கும் பிறந்தவன் புரூரவன் ஆவான்.

7. வடிம்பலம்ப நின்ற பாண்டியன்: இவன், வான ளாவிப் பொங்கிய கடல் சினம் தணிந்து தனது சேவ டியில் பணியுமாறு நின்றவனாவான்.

8. உக்கிரகுமார பாண்டியன்: இவன் இந்திரனது ஆரத்தைப் பூண்டவன்; இந்திரனது முடியை வளையால் உடைத்தவன்; பொங்கிய கடலைத் தனது வேலால் அடக்கியவன்; மேருமலையை வென்று கயலிணையைப் பொறித்தவன்.

11. தளவாய்புரச் செம்பேட்டில் கூறப்பட்ட வரலாற்றுக் காலப் பாண்டியரது மரபை எழுதி அப்பாண்டியர்களைப் பற்றிச் சிறுகுறிப்பும் வரைக.

வரலாற்றுக் காலப் பாண்டியரது மரபு

1. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், 2. கடுங்கோன், 3. ஸ்ரீபராந்தகன், 4. ஸ்ரீவல்லபன் 5. கோவரகுணன், 6. ஸ்ரீபராந்தக வீரநாரணன்.

சிறுகுறிப்பு

1. **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்:** இவன் தலையாலங்கானம என்னும் இடத்தில் தன்னை எதிர்த்த சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன் இருங்கோவேண்மான், பொருநன் என்ற எழுவரையும் ஒருசேர வென்றவன்.

2. **கடுங்கோன்:** இவன் களப்பாளரது குலத்தைக் களைந்தவன். பாண்யடிரது மரபை மீண்டும் தலைதூக்கச் செய்தவன்; ஆசிநாடடுப் பிரமதேயமான திருமங்கலம் என்ற ஊரை 12 வேதியர்களுக்குத் தானமாகக் கொடுத்தவன்.

3. **ஸ்ரீபராந்தகன்:** இவன் களிறுகைத்துச் சென்று கருவூரில் காடவனை வென்றவன்.

4. **ஸ்ரீவல்லபன்:** இவன் ஸ்ரீபராந்தகனின் மகன்; வேய்போலும் தோளியர்க்குக் கணவன்; வித்யாதர ஹிரண்யகர்ப்பன் என்ற பட்டப் பெயருடையவன்; குண்ணூர், ஈழம், விழிஞம், கடலாணூர் என்ற இடங்களில வெற்றி பெற்றவன். குடகுட்டுவர், குணசோழர், தென்கூபகர், வடபுலவர் ஆகியவரை வென்றவன்.

5. **கோவரகுணன்:** இவன் ஸ்ரீவல்லபனின் முதல மகன்; பிள்ளைபபிறை சடைக்கணிந்த பினகபாணி எம்பெருமானை உள்ளத்தில் இனிது இருவி உலகம் காத்தவன்.

6. **ஸ்ரீபராந்தக வீர நாரணன்:** இவன் ஸ்ரீ வல்லபனின் இரண்டாம் மகன்; கோவரகுணனுக்குத் தம்பி; ஆயிரம் தலைகளால் அரவரசன் பொறுக்கின்ற மண்மகளைத் தனது தொடித் தோளில் எளிதாகத் தாங்கிய தொண்டியர்கோன். ஸ்ரீகண்டராசனின் மகளான அக்கள நிம்மடி என்பவளின் வயிற்றிற் பிறந்தவன்; செந்நிலம் குன்றை குடகொங்கு தென்மாயல் வெண்கை பராந்தகம் என்ற இடங்களில் பகைவரை வென்று அவர்களது வஸ்து வாகனங்களைக் கவர்ந்துகொண்டவன்; விழிஞநகரைக் கைப்பற்றியவன்; கொங்கினின்று தேனூர்வரை குடகொங்கரை வென்றவன்;வீரதுங்கனை வென்றவன்; பல ஆறுகள் ஆலயங்கள் பிரமதேயங்கள் தேவதானங்கள் தடாகங்கள் ஆகியவற்றை இயற்றுவித்தவன்; புகழாலும் கொடையாலும் வெற்றியாலும் மேம்பட்டவன்; கலிப்பகை என்றும் கண்டருள்கண்டன் என்றும சிறப்பிக்கப்பட்டவன். நாராயணங்கேசவனின் விண்ணப்பத்தின்படி திருமங்கலம், சோமாசிக்குறிச்சி என்ற ஊர்களைச் சாசனம் செய்து கொடுத்தவன்.

12. பாண்டியர் ஆற்றிய அருஞ்செயல்களாகச் செப்பேடுகள் கூறும் செய்திகள் யாவை? (78 Apl)

தளவாய்புரச் செப்பேட்டில் கூறப்பட்ட பாண்டியர்தம் அருஞ்செயல்கள்

1. பொங்கி எழுந்த கடல் தனது சேவடியில் பணியுமாறு நின்றது, 2. மலயத்து மாமுனியான அகத்தியனைப் புரோகிதனகக் கொண்டது, 3. கடல் கடைந்து அமிர்தம் கொண்டது, 4. கயலிணையை வட வரையில் பொறித்தது. 5. ஹரிஹயனது (இந்திரனது) ஆரத்தைப்பூண்டு அவன் தலையில் வளையை உடைத்தது, 6. விரிகடலை வேலால் அடக்கியது,

7. தேவாசுரப்போரில் வெற்றி கொண்டது, 8. அகத்தியனேடு தமிழை ஆராய்ந்தது, 9. தசவதனன் சார்பாகச் சந்து செய்விததது, 10. பாரதப் போரில் பகடு ஓட்டியது, 11. வானரத்துவசனின் (அருச்சுனனின்) வசு சாபத்தை அகல்வித்தது, 12. அரிச்சந்திரனது நகரை அழித்து அவனது பரிச் சின்னங்களைக் கவர்ந்தது, 13. தென்மதுராபுரம் செய்தது, 14. தமிழ்ச் சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தது, 15. தலையாலங் கானத்துப்போரில் வெற்றி கொண்டது, 16. களப்பிரரது குலத்தைக் களைந்தது.

சிவகாசிச் செப்பேட்டில் கூறப்பட்ட பாண்டியர்தம் அருஞ்செயல்கள்

1. இந்திரன் முடியில் வளையை உடைத்தது. 2. இமயமலையில் கயலைப் பொறித்தது, 3. போர்க்களத்தில் ஆயிரம் ஆனைகளைக் கொன்று கொற்றவைக்குப் பலியாக ஊட்டியது, 4. அகத்தியனேடு தமிழை ஆராய்ந்தது, 5. இந்திரனது நாட்டுக்குத் தூது சென்றது, 6. பொங்கி எழுந்த கடலின் வரவினை மாற்றியது, 7. பாற்கடலைக் கடைந்தது.

13. பாண்டியர்தம் அருஞ்செயல்களாகத் தளவாய்புரச் சாசனத்துக் கூறப் பெற்றுள்ளவை யாவை? (78 Apl)

விடை: 12—னுள் காண்க.

14, ஸ்ரீ பராந்தக வீரநாராயனனின் முன் ஸ்ரீநாராயணங் கேசவன் விண்ணப்பித்துக் கொண்டது என்ன?

பாண்டியன் ஸ்ரீபராந்தக வீரநாராயணன் தனது 45ம் ஆட்சி ஆண்டில் ஒருநாள் களக்குடி என்ற ஊரில் தங்கி இருந்தான். அப்போது அவன்முன் நாராயணங் கேசவன் என்ற அந்தணன் ஒரு விண்ணப்பம் செய்து கொண்டான். அந்த விண்ணப்பம் வருமாறு:

"தேர்வேந்தே! களப்பாளர்களைக் களைகட்ட பாண்டியன் கடுங்கோன் ஆசிநாட்டுப் பிரமதேயம்

திருமங்கலமான ஊரைப் பன்னிரண்டு சதுர்வேதிகளுக்கு அளித்துச் செப்பேடு செய்து கொடுத்தான். மற்றும் மனுசமானனும் கழுதூரில் சித்தி செய்தவனுமான (இறந்தவனுமான) பாண்டியன் ஒருவன் சோமாசிகுறிச்சி என்ற ஊரைச் சோமபான மனேசுத்தராகிய காடக சோமயாஜியார்க்கு ஏகபோகமாக்கிச் செப்பேடு செய்து கொடுத்தான் இவ்விரண்டு செப்பேடுகளும் மறக்கேட்டினுல் இழக்க நேர்ந்தது. கடல் திருக்கைக்கிழவன் என்பவன் இச்சோமாசி குறிச்சியின் நிலங்களை மதுரதர நல்லூர் என்று பேரிட்டுக்கொண்டு தனது குடிநிலனுக ஆக்கிக்கொண்டு விட்டான். எனவே, இந்நிலங்களை அவன் குடி நிலத்தினின்று நீக்கிச் சோமாசி குறிச்சி என்று பெயரிட்டுப் புரவேற்றித் தர வேண்டும். மேலும் திருமங்கலம், சோமாசிகுறிச்சி என்ற இரண்டு ஊர்களின் எல்லையும் இன்னதெனத் தெரியாதபடி கலந்து கிடப்பதால் அவ்விரண்டு ஊர்களையும் ஒன்ருகக் கூட்டிப் புரவெழுதிப் பிடிசூழ்வித்துச் சாசனம் செய்து நன்கருள வேண்டும்.''

15. குறிப்புவரைக. (அ) நாராயணங்கேசவன் (ஆ) தளவய்ப்புரச் செப்பேட்டிற்குப் பிரசஸ்தி செய்தவன், (இ) பாண்டிமாராயப் பெருங்கொல்லன், (ஈ) கற்பமைந்த கரதலத்துச் சிற்பமார்த்தாண்டன்

(அ) நாராயணங் கேசவன் : இவன் ஆசிநாட்டுப் பிரமதேயமான திருமங்கலத்தில் பிறந்தவன்; சோமாசி குறிச்சி என்ற பதிக்குக் காவலன்; வானகோத்திரத்துப் பௌதாயன கல்பத்தில் பிறந்தவன் ; மாயானம்பிப் பட்டர்க்கு மகன்; பெருந்தகையன்; திசைமுகனே அவதாரம் செய்தது போன்றவன் ; தர்ம வத்சலன்; அதர்மகோபி; கல்விக் கடலுக்குக் கரை கண்டவன்; க்ஷத்திரியானுமதம் உணர்ந்தவன்; சொற்களில் வித்தகன்; சுத்த சீலானுசாரன்; பாண்டியன் வீர நாராயணனுக்கு விசுவாச காமங்களுக்கு உரியவன்.

கடல் திருக்கைக் கிழவனுல் கைப்பற்றிக் கொள்ளப் பட்ட திருமங்கலம் சோமாசிகுறிச்சி என்ற இரண்டு

ஊர்களையும் மீட்டுத் தரவேண்டும் என்று பாண்டியன் வீர நாராயணனிடம் விண்ணப்பம் செய்து அவ் விரண்டு ஊர்களையும் பெற்றுக் கொண்டவன்.

(ஆ) தளவாய்புரச் செப்பேட்டிற்குப் பிரசஸ்தி செய்தவன்: இவன் ஸ்ரீமாதவன் என்னும் பெயருடையவன்; சாண்டில்ய கோத்திரத்துச் சந்தி காத்யாயன சூத்திரத்தைச் சார்ந்தவன்; திருமங்கலத்தில் பிறந்தவன்; கணஸ்வாமி பட்டரின் மகன்; திருவடி சோமாசியின் மகளுக்கு மகன்; ஸ்ரீ மாதவசரண சேகரன் என்ற சிறப்புப் பெயர் உடையவன்; வேதவேதாந்தங்களும் விவித சாத்திரங்களும் பிறர் உணரும்படி உரைக்கும் ஆசார்யன்; தளவாய்புரச் செப்பேட்டின் வடமொழிப் பகுதியான பிரசஸ்தியாக 39 சுலோகங்களை இயற்றிக் கொடுத்தவன்.

இங்ஙனம் இவன் பிரசஸ்தி செய்து கொடுத்ததற்காகப் பெருவளால், பருத்தி வயக்கல் என்ற இரண்டு நிலத்திலுமுள்ள இரண்டு கிணறுகளும் அக் கிணறுகளால் விளையும் நிலங்களும் இவனுககுக் கொடுக்கப் பட்டன.

(இ) பாண்டி மாராயப் பெருங்கொல்லன்: இவன் தென்வையை வள நாட்டில் குண்டூர் நகரில் பிறந்தவன்; நிருப சேகரப் பெருங்கொல்லன் நக்கனின் மகன்; பாண்டிமாராயப் பெருங் கொல்லனுகிய ஸ்ரீ வல்லபன் என்ற பெயருடைவன்; சிவபெருமான் வேண்டியபடி பரசு செய்து கொடுத்தவன்; மநுவழி வந்தவன், பண்டிததாசன், பாண்டித் தமிழாபரணன் எனப் பல சிறப்புப் பெயர் பெற்றவன்; தளவாய்புரச் செப்பேட்டிற்கு உரிய வாசகத்தை ஆரியம் விராய்த் தமிழ் தொகுத்த மதியோன்.

இங்ஙனம் செப்பேட்டிற்குத் தமிழ் வாசகம் செய்து கொடுத்த இவனுக்கும், செப்பேட்டில் எழுத்துப் பொறித்த இவன் தந்தைக்குமாகக் கண்ணங்கீரன் வயக்கல் சோமாசி வயக்கல் என்ற வயல்களில் உள்ள

மூன்று கிணறுகளும் அக்கிணறுகளால் விளையும் நிலங்களும் இறையிலியாகக் கொடுக்கப்பட்டன. மேலும் இம் மூன்று கிணறுகளுக்கும் இடைக்கிடந்த நிலம் வீடு கட்டும் நிலமாகவும் தோட்டமாகவும் கொடுக்கப்பட்டது.

(ஈ) கற்பமைந்த கரதலத்துச் சிற்பமார்த்தாண்டன்: இவன் நிருபசேகரப் பெருங்கொல்லன் நக்கன் என்ற பெயருடையவன்; தென்னவர்தம் ஆணைக்கு அடையாளமாகச் சிலை புலி கயலிணைகளை இமயமலையில் பொறித்தவரது மரபில் வந்தவன்; தமிழ்வாசகம் செய்த ஸ்ரீ வல்லபனுக்குத் தந்தை; தளவாய் புரச் செப்பேட்டில் சாசன எழுத்துக்களைப் பொறித்தவன்.

இங்ஙனம் எழுத்துப் பொறித்ததற்காக இவனுக்கும் தமிழ்வாசகம் செய்ததற்காக இவன் மகனுக்குமாக நிலங்கள் கொடுக்கப்பட்டன. இதன் விபரத்தை விடை: 15-ல் இ-பிரிவில் காண்க.

16. மாணிக்க வாசகர் காலத்தை உறுதி செய்வதற்குத் தளவாய்புரச் செப்பேடு எவ்வாறு உதவுகிறது?

மாணிக்க வாசகர் தாம் இயற்றிய திருக்கோவையாரில் "வரகுணன் ஏத்து சிற்றம்பலம்" என்று தங்காலத்தில் இருந்த பாண்டியன் பெயரைக் குறிக்கின்றார்.

பாண்டியரது மரபில் வரகுணன் என்ற பெயரில் இருவர் இருந்தனர். இவர்களில் முதல் வரகுணன் பாட்டன்; இரண்டாம் வரகுணன் பேரன். இவ்விருவரில் மாணிக்க வாசகர் குறிப்பிட்டது எந்த வரகுணனை என்று உறுதி செய்யவேண்டும். "முதல் வரகுணனே மாணிக்கவாசகர் காலத்தில் இருந்தவன்" என்று டி. வி. சதாசிவ பண்டாரத்தார் தாம் எழுதிய பாண்டியர் வரலாற்றில் குறித்துள்ளார். ஆனால் அவன் அத்துணைச் சிறந்த சிவபக்தன் என்று கூறச் சான்றில்லை.

தளவாய்புரச் செப்பேட்டில் பராந்தக வீர நாராயணனின் தமையனுன இரண்டாம் வரகுணன் "பிள்ளைப்பிறை சடைக்கணிந்த பிஞகபாணி எம்பெரு மானை உள்ளத்தினில் இனிதிருவி உலகம் காக்கின்ற நாளில்" என்று குறிக்கப்படுகிருன். எனவே இரண் டாம் வரகுணன் தான் சிறந்த சிவபக்தன் என்பதற்கு இச் செப்பேடு சான்றுபகர்கின்றது. இச் சான்றினுல் இரண்டாம் வரகுணனின் காலமாகிய கி பி. 862-ஐ ஒட்டி அதாவது 9-ம் நூற்றுண்டில் மாணிக்கவாசகர் வாழ்ந்தார் என்று முடிவு செய்யலாம்.

17. சிவகாசிச் செப்பேடு பற்றிக் குறிப்பு வரைக.

திருநெல்வேலி மாவட்டம் சிவகாசியில் உள்ள ஒர கண்டே கனகைய நாயுடுவின் குடும்பத்தாரிடமிருந்து ஒரு செப்பேடு கிடைத்துள்ளது. இது, கிடைத்த இடத்தின் பெயரால் சிவகாசிச்செப்பேடு என அழைக்கப்படுகிறது. இச்செப்பேடு தற்போது சென்னைப் பொருட் காட்சியகத்தில் இருக்கிறது.

இச்செப்பேடு முத்திரையுடன் கூடிய செப்பு வளையம் இல்லாமல் உதிரியாக 5 ஏடுகளாக மட்டும் கிடைத்திருக்கிறது. இவற்றுள் 3-ம் ஏடும் 5-ம் ஏடும் சில துண்டுகளாக உடைந்துள்ளன. இச் செப்பேட்டின் முற்பகுதி வடமொழியாகவும் பிற்பகுதி தமிழ்மொழி யாகவும் அமைந்துள்ளன.

வடமொழிப் பகுதியில் 26 சுலோகங்கள் உள்ளன. இவற்றில் பாண்டியரது மரபும், கொடைச் சிறப்பும் கூறப்பட்டுள்ளன.

தமிழ்ப் பகுதியில் வீர பாண்டியன் வாசுதேவ பீதாம்பர பட்டனுக்கு விளைநிலமாக மூவேலி நிலத் தையும் குடியிருப்புக்காகப் பத்துமா நிலத்தையும் சாசன மங்கலம் எனப் பெயரிட்டு ஏக போகப் பிரம தேயமாகக் கொடுத்த செய்தியும், இக் கொடை பல அதிகாரிகளின் மேற்பார்வையில் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்ட விபரமும், நிலத்தின் நான்கெல்லை களும் கூறப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டின் காலம் 11—ம் நூற்றுண்டாகும். எல்லை குறிக்கும்போது பிடியை (பெண் யானையை) நடத்தினவர் பெயர் குறிக்கப்பட்டிருப்பது இச் செப்பேட்டின் சிறப்புக்களில் குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

18. வீர பாண்டியனின் அறச்செயலை விவரித்து எழுதுக.

வீரபாண்டியன் மணிமுடி கவிழ்த்து மகாபிஷேகம் கொண்டு மகிழ்ந்த நாளில், அவன் முள்ளி நாட்டுத் தென் வீர தர மங்கலத்து வாசுதேவ பீதாம்பர பட்டனை நோக்கிச் சாஸன ஸ்லோகம் செய்க என்ருன். பீதாம்பர பட்டனும் அவ்வாறே ஸ்லோகம் செய்து சொன்ஞன். அச் சுலோகத்தின் அனுஷ்டுப்பின் (தொடக்கத்தின்) விழுப்பம் நோக்கிப் பாண்டியன் மிகவும் மகிழ்ந்தான். பிறகு வீரபாண்டியன் தனது 3-ம் ஆட்சி ஆண்டில் வீரபாண்டிய புரமான செல் லூரில் தங்கி இருந்தபோது மேல்வேமபநாட்டு நல புரத்துக் கொப்பத்தில் வாழைக் கோடு உட்பட இரு பூ (இரண்டு போகம்) விளைவதான நீர் நிலன் மூவேலி யையும், குடி இருக்க முது நிலத்தில் பத்துமாவையும் சேர்த்துச் சாஸனமங்கலம் என்று பெயரிட்டு ஏக போகப் பிரமதேயமாகக் கொடுக்க ஆணையிட்டான்.

அவ் வாணையின்படி விண்ணப்பம், ஆணத்தி, திருந்ததிகாரி, கண்காணி, புறவுவரி என்னும் அதிகாரி களின் மேற் பார்வையில், அனுத்தரப் பல்லவ அரசு என்ற மாறஞ்சோலை ஆகியவன் மால்களிற்றின் நாயகஞக இருக்க, முள்ளிநாட்டுக் குளத்தூர் அரையன் திருச்சிராப்பள்ளிஎன்பவன் யானையை நடத்தி வர, மேல்வேம்பநாட்டாரும் பிரமதேயக் கிழவரும் நலபுரத்து ஊராரும் உடனிருந்து பிரமதேய நிலத்துக்குக் கல்நாட்டி எல்லை தெரிவித்து அர சாணையை நிறைவேற்றினர்.

19. வீர பாண்டியனின் சிவகாசிச் செப்பேட்டுச் செய்தியை விவரிக்க. (79 Sep.)

விடை: 18-ல் காண்க.

20. வீர பாண்டியனின் ஆணை எந்தெந்த அதிகாரிகளின் மேற் பார்வையில் எவ்வாறு நிறைவேற்றி வைக்கப்பட்டது?

வீரபாண்டியன் தனது 3-ம் ஆட்சி ஆண்டில் வாசுதேவ பீதாம்பர பட்டனுக்கு நீர்நிலன் மூவேலியையும், குடியிருக்கப் பத்துமா நிலத்தையும் கொடுக்குமாறு ஆணை பிறபபித்தான். இந்த ஆணையானது, விண்ணப்பம், ஆணத்தி, திருந்ததிகாரம், கண்காணி, புறவு வரி என்னும் அதிகாரிகள் மேற் பார்வையில் நிறை வேற்றி வைக்கப் பட்டது.

அதாவது போர்க் கூற்றத்து இரண சிங்க மங்கலத்துத் தென்னவன் பிரம்மஸ்ரீ துங்கராஜன் ஆயின வனத்தன் என்பவன் **விண்ணப்பம்** ஆகவும் மந்திர ஓலை நாயகன் கணையர்பள்ளி தென்னவன் உத்தர மந்திரி ஆயின இயக்கஞ் செல்வன் என்பவன் **ஆணத்தி** ஆகவும், ராஜசிம்ஹறன் என்னும் தமிழ்ப் பேரரையன் **திருந்ததிகாரம்** ஆகவும், அணுக்கப்பிள்ளை தென்பருத்திக் குடி நாட்டுச் செந்நிலக்குடி சடையங்காளியும், வெள்ளப்ப நாட்டுக் கேசவங் கணவதியும் ஆகிய இருவரும் **கண்காணி** ஆகவும், புறத்தாய நாட்டு நற்றராயக்குடி அரையன் விரையாச் சிலையும், திருக்கானப்பேர்க் கூற்றத்துச் சிறுசேவூர்க் காடம் படாலகனும், சோழநாட்டு மாங்குடிச் சோலைக்கிழவனும், விக்கிரமகாமவள நாட்டுக் கண்ணனூர் இளவளம் புல்லனும் ஆகிய நால்வரும் **புரவு வரி** ஆகவும் நின்று மேற்பார்வை செய்தனர். அனுத்தரப் பல்லவ அரைசு என்ற மாறஞ் சோலை மால்களிற்றின் நாயகமாக (யானை மேல்) வீற்றிருந்தான். முள்ளி நாட்டுக் குளத்தூர் அரையன் திருச்சிராப்பள்ளி என்பவன் யானையைக் கீழிருந்து நடத்தினன். மேல் வேம்ப நாட்டு நாட்டாரும் பிரம்ம தேயக் கிழவரும் நலபுரத்து ஊராரும் உடனிருந்து நிலமளந்து பிடி சூழ்ந்து கல் நாட்டி எல்லை தெரிவித்து வீரபாண்டியனின் ஆணையை நிறைவேற்றி வைத்தனர்

21. பார்த்திவ சேகரபுரச் செப்பேடு பற்றி விவரிக்க.

திருவனந்தபுரத்துத் தலைமைக் காரியாலயமான ஹுசூர் அலுவலகத்திலிருந்து ஒரு செப்பேடு கிடைத்

துள்ளது. இச் செப்பேட்டில் பார்த்திவ சேகரபுரம் என்ற ஊர் தானம் செய்யப்பட்டதாகக் கூறப்படு கிறது. எனவே இது, தானம் செய்யப்பட்ட ஊரின் பெயரால் பார்த்திவ சேகரபுரச் செப்பேடு என அழைக் கப் படுகிறது.

இச் செப்பேடு முத்திரையுடன் கூடிய செப்பு வளையம் இல்லாமல் உதிரியாக 5 ஏடுகளாக மட்டும் கிடைத்திருக்கிறது. கிடைத்துள்ள ஏடுகளில் முதல் ஏட்டுக்கும் இரண்டாம் ஏட்டுக்கும் இடையே பொருள் தொடர்ச்சி இல்லாமையால் நடுவே ஓர் ஏடோ அன்றிப் பல ஏடுகளோ காணுமற் போயிருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

இச் செப்பேடு வடமொழிப் பகுதியின்றி முழுவதும் தமிழ்ப் பகுதியாகவே அமைந்திருக்கிறது. ஆயினும் இடை இடையே பல வடசொற்கள் கையாளப் பட்டிருக் கின்றன.

கோக்கருநந்தடக்கன் என்ற ஆய்குல மன்னன் தனது 9 வது ஆட்சியாண்டில் முன்சிறைச் சபை யார்க்கு நிலங்கொடுத்து அதற்கு ஈடாக உழக்குடிவிளை என்ற நிலத்தைப் பெற்று அதற்குப் பார்த்திவசேகர புரம் என்று பெயரிட்ட செய்தியையும், அங்கே ஸ்ரீகோயில் எடுத்து விஷ்ணு பட்டாரகரை (திருமால் விக்ரகத்தை)ப் பிரதிஷ்டை செய்து வழிபாட்டிற்காக நிலம் கொடுத்த செய்தியையும், அகநாழிகைப் பணி செய்வார் பூவிடுவான் பஞ்சகவ்யம் தெளிப்பான் ஆகி யோர்க்கு நிலம் கொடுத்த செய்தியையும், காந்தளூர்ச் சாலையைப் போல 95 சட்டர் (மாணவர்) பயில்வதற்கு ஒரு சாலை (பள்ளிக் கூடம்) அமைத்து அதற்கு நிலம் கொடுத்த செய்தியையும், இச்சாலையில் கலம் பெறு முறை, பிரவேசம் செய்யும் பரிசு, வாரம் ஓதும் பரிசு, சட்டர்க்கு உரிய கட்டுத் திட்டங்கள் என்பவற்றின் விபரங்களையும், வழிபாட்டுக்கு நீர் கொடுத்தல் பூமாலை கொடுத்தல் விளக்கெரித்தல் திருவிழா எடுத்தல் பங்குனி விழாவில் ஆறு நீதல என்பவற்றின் விபரங் களையும் இச்செப்பேடு விரிவாகக் கூறுகிறது.

இச்செப்பேட்டின் காலம் கி.பி- 865ஆகும். இச்செப்பேட்டில் கலியுக ஆண்டு குறிக்கப் பட்டிருப்பதும், அதுவும் நாட் கணக்கில் குறிக்கப்பட்டிருப்பதும் நிலத்தின் பரப்பு அந்நிலத்தில் விதைக்கும் விதையின் அளவால் குறிக்கப்பட்டிருப்பதும், கல்விச்சாலையின் கட்டுத்திட்டங்கள் குறிக்கப்பட்டிருப்பதும் இச்செப்பேட்டின் சிறப்புப் பகுதிகள் (அதாவது குறிப்பிடத்தக்க பகுதிகள்) ஆகும்.

22. ஆய்குல மன்னன் கோக் கருநந்தடக்கன் பார்த்திவ கேசரபுரச் செப்பேடுகளின் செய்தி யாது?

பார்த்திவ சேகரபுரச் செப்பேடுகளின் செய்திச் சுருக்கம் வருமாறு:—

கோக்கருநந்தடக்கன் என்ற ஆய்குல மன்னன் தனது 9வது ஆட்சி ஆண்டு 15ம் நாளில் (கி.பி865-ல்) முடால நாட்டுப் பசுங்தளத்து முன்சிறைச் சபையார்க்குச் சில நிலங்கொடுத்து அதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து உழக்குடிவிளை என்ற நிலத்தைப் பெற்றான். பெற்ற நிலத்துக்குப் பார்த்திவ சேகரபுரம் என்று பெயரிட்டான். அங்கே கோயில் ஒன்றைக்கட்டி விஷ்ணுபட்டாரகரைப் பிரதிஷ்டை செய்தான். அக்கோயிலின் அகநாழிகைச் சென்னடைக்காகவும் அதாவது வழிபாட்டுக்காகவும், நுந்தாவிளக்கு எரிப்பதற்காகவும், ஏழுநாள் திருவிழா பங்குனி விசாகத்தில் ஆறுடுதல் (தீர்த்தவாரி) ஆகிய காலங்களில் இரட்டை ஆனியம் (படிக்காசு) பெறுவதற்காகவும் நிலம் வழங்கினான். மேலும் அக்கோயிலின் பணிமக்கள், சாந்திசெய்வான், அகநாழிகைப் பணியாளர்கள், பஞ்சகவ்வியம் தெளிப்பான், பூவிடுவான் முதலியோர்க்குத் தனித்தனியாக நிலம் வழங்கினான்.

மேலும் அவ்வூரில் காந்தளூர்ச்சாலையைப் போல ஒரு கல்விச்சாலையை நிறுவினான். இச்சாலையில் 95சட்டர்கள் (மாணவர்கள்) பயில ஏற்பாடு செய்தான்.

அதாவது பவிஷியசரணத்தார் 45 கலமும், தைத்திரிய சரணத்தார் 36 கலமும் தலவகாரசரணத்தார் 14 கலமும் பெறுதற்கு உரியவராவர். இவர்கள் வையாகரணம் மீமாம்சை புரோகிதம் கற்றவர்களாய் இருக்கவேண்டும் தமக்கெனச் சொந்த நிலமும் சொத்தும் இல்லாதவர்களாக இருக்கவேண்டும்.

மேலும் அவர்கள் வேதம் ஓதவேண்டிய முறை இன்னது என்றும் வேதம் ஓதும்போது பிழைக்கப் பேசுதல் குட்டுதல் படைக்கலத்தால் புண் உண்டாக்கல் என்ற குற்றம் செய்யலாகாதென்றும் செய்தால் அவற்றுக்கு இன்னதண்டனை என்றும் இவை போன்ற வேறு பல கட்டுத்திட்டங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

23. காந்தளூர்ச்சாலை மாதிரியே அமைக்கப்பட்ட பிறிதொரு சாலை யாது? அதன் நடைமுறைகளை விளக்குக.

காந்தளூர்ச்சாலை மாதிரியே கோக்கருநந்தடக்கனால் பார்த்திவசேகரபுரத்தில் ஒருசாலை (வேதபாடசாலை) அமைக்கப்பட்டது. அதன் நடைமுறைகள் வருமாறு:—

உண்கலம் வகுத்தல்: பார்த்திவசேகரபுரச் சாலையில் 95சட்டர்க்கு (மாணவர்க்கு) உண்கலம் வகுக்கப்பட்டன. இவற்றில் பவிஷிய சரணத்தார் (ரிக்வேதம் பயில்வோர்) 45கலமும், தைத்திரிய சரணத்தார் (யசுர் வேதம் பயில்வோர்) 36கலமும், தலவகார சரணத்தார் (சாம வேதம் பயில்வோர்) 14 கலமும் பெறுவதற்கு உரியவராவர்.

பிரவேசம் செய்யும் பரிசு: (புகவு பெறுதல் அல்லது சாலையில் சேர்வதற்கான தகுதி) வையாகரணம், மீமாம்சை, புரோகிதம் ஆகிய படிப்புடையவன் என்றும், சொந்த நிலமும் சொந்த சொத்தும் இல்லாதவன் என்றும் திரைராஜ்ய வியவகாரத்துக்கு வேண்டிய ஒத்துடையவன் என்றும் இது சத்யம் என்றும் இச்சாலையில் உள்ளவர்களிடம் சத்தியம் செய்து கொடுத்து அங்குள்ள ஐந்து சட்டர்களிடம் பஞ்சக்கம் (ஐவர்

தீர்ப்புப்) பெற்றவனே இச்சாலையில் புகவுபெறும் தகுதி உள்ளவனுவான்.

வாரம் ஓதும் பரிசு: (வேதத்தை முறைப்படி ஓதும் தன்மை) சூத்திரத்திலும் சூத்திர ஆரணத்திலும் துருச் சொல்லி (திரும்பத்திரும்பச்சொல்லி)ஒன்பது புகவனில் இரண்டுமுறை அடுத்தடுத்து ஓதவேண்டும். பிறகு சாகையிலும் கற்பத்திலும் கணத்திலும் துருச்சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு முறை அடுத்தடுத்து ஓத வேண்டும். பிறகு நாலு பாதத்திலும் துருச் சொல்லி அகத்தூஹத்தில் (மனப்பாடமாக) இரண்டு முறை அடுத்தடுத்து ஓத வேண்டும்.

கட்டுத் திட்டங்கள்: மூன்று சரணத்தாரும் மூன்று வட்டமாக இருந்து வாரம் ஓதவேண்டும். இங்ஙனம் முக்கால் வட்டத்தில் இருக்கும்போது ஒரு சட்டனை மற்றொரு சட்டன் பிழைக்கப் பேசினுல் (திட்டினுல்) ஐந்துகாணம் பொன்தண்டம் இடவேண்டும்; குட்டினுல் ஒரு காசு தண்டம் இடவேண்டும்; குட்டுண்டானும் ஐந்து காணம் பொன் தண்டம் இடவேண்டும்; இத் தண்டம் இட்ட பின்பே சாலையில் உண்ண வேண்டும் படைக்கலத்தால் புண் செய்தால் அறத்துக்குப் புறத் தான் என்று சாலையிலிருந்து நீக்கப்பெறுவான். படைக் கலம் ஏந்திக் கூட்டத்துக்குச் செல்லக்கூடாது. முக்கால் வட்டத்தில் இருக்கும்போது எந்தச் சூதும் ஆடக்கூடாது; ஆடினுல் அன்றைக்குரிய உண்கலம் இழக்கவேண்டும். சட்டர்கள் வெள்ளாட்டிகளை (வேலைக்காரிகளை) மடத்தில் (உணவுச் சாலையில்) வைத்துக் கொள்ளக்கூடாது.

சந்தி முகம் (அரசனது ஆணைப்பத்திரம்) இன்றிச் சாலா போகமும் தேவதானமும் ஆகியவற்றின் பணியைச் செய்ய முடியாதென மறுக்கக் கூடாது. மறுத்தால் ஐந்து கழஞ்சு பொன் தண்டம் இடவேண்டும். சாலா போகத்திலும் தேவதானத்திலும் கட்டாயப் படுத்தி விளைவு வாங்கக் கூடாது. வாங்கினுல் ஒன்றுக்குப் பத்தாகத் தண்டம் இடவேண்டும். ஊர்ச்

சபையாரிடம் மூன்று சரணத்திலும் மூவர் சென்று உற்ற சேவை செய்யவேண்டும். செய்யத்தவறினுல் 54 காணம் பொன் தண்டம் இட்டு மீளவும் அக்கடமையைச் செய்தே ஆகவேண்டும். தேவர் சென்னடையும் (வழிபாடும்) பதினுழிச் சாலையும் (மடைப்பள்ளியும்) ஆன பணிகளை எவ்வழக்குச் சொல்லியும் விலக்கக் கூடாது. விலக்கினுல் ஙிசதி ஐந்துகழஞ்சு பொன் தண்டம் இடவேண்டும். இனிப் பணிமக்கள் சட்டர் களைப் பிழைக்கப் பேசினுல் ஒரு காசு தண்டம் இட வேண்டும்.

24. பெரிய லெய்டன் செப்பேடு (அல்லது ஆனை மங்கலச் செப்பேடு) பற்றி விவரிக்க.

ஹாலண்டு நாட்டில் லெய்டன் நகரில் உள்ள பொருட்காட்சியகத்தில் தமிழகச் செப்பேடுகள் இரண்டு இருக்கின்றன. அவற்றுள் ஒன்று பெரியது; மற்ருென்று சிறியது. பெரிய செப்பேடு இருக்கும் இடத்தின் பெயரால் பெரிய லெய்டன் செப்பேடு என அழைக்கப்படும். மற்றும் இச்செப்பேட்டில் ஆனை மங்கலம் என்ற ஊர் தானம் செய்யப்பட்டதாகக் கூறப் பட்டிருப்பதால், தானம் செய்யப்பட்ட ஊரின் பெய ரால் ஆனைமங்கலச் செப்பேடு எனவும் அழைக்கப் படுகிறது.

இச்செப்பேடு முத்திரையுடன் கூடிய செப்பு வளை யத்தில் கோக்கப் பெற்ற 21 ஏடுகளை உடையது. முத் திரையில் கீழ்ப்புறம் வில்லும் அதன் மேலே இடப்புறம் இரட்டைக் கயலகளும் வலப்புறம் ஒரு புலியும் பொறிக்கப்பட்டுள்ளன. இச்செப்பேட்டின் முற்பகுதி வடமொழியாகவும் பிற்பகுதி தமிழ் மொழியாகவும் அமைந்துள்ளன.

இச்செப்பேட்டின் வடமொழிப் பகுதியில், புராண கால மன்னர், சங்ககாலச் சோழர், பிற்காலச்சோழர் ஆகியோரின் மரபு கூறப்பட்டிருக்கிறது தமிழ்ப் பகுதியில் கடாரத்து அரசனுன சூளாமணிபன்மன்

நாகப்பட்டினத்தில் சூளாமணிபன்மவிகாரம் என்ற பெயரில் ஒரு பௌத்தப் பள்ளி எடுப்பித்ததும், அதற்கு முதலாம் இராசராசன் ஆனைமங்கலம் என்ற ஊரைப் பள்ளிச் சந்தமாக வழங்கியதும் கூறப்பட்டுள்ளன. மேலும் ஆனைமங்கலத்தில் உள்ள 97 வேலி நிலத்திலிருந்து தனக்கு இறையாகக் கிடைத்த 8943 கலநெல்லை அப்பௌத்தப் பள்ளிக்கு அளிக்குமாறு இராசராசன் உத்தரவிட்டதும், அந்த உத்தரவு ஒப்பு நோக்கப் பட்டதும், வரிக்கணக்கில் இடப்பட்டதும், திருமுகம் போக்கப்பட்டதும், அரசுஆணை நிறைவேற்றப் பட்டதும், தானம் செய்யப்பட்ட நிலங்களின் நான்கெல்லைகளும், வியவஸ்தைகளும், பரிகாரங்களும், அறவோலை செய்து கொடுத்தவர்களின்கையொபபங்களும், அறவோலை அரண்மனைககு அனுப்பப் பெற்றதும், அது புரவு வரியில் குறித்துக் கொள்ளப்பட்டதும் ஆகிய செய்திகள் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டில் முதலாம் இராசராசனது மெய்க் கீர்த்தி இடம் பெற்றுளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். மற்றும் திருமந்திரஓலை, திருமந்திரஓலைநாயகம் உடன்கூட்டத்து அதிகாரி, உள்படுகருமம் ஆராய்வார், நடுவிருக்கை, புறவுவரி, வரிப்பொத்தகம் என்னும் அதிகாரிகளும் அலுவலாகளும் சோழராட்சியில் இடம் பெற்றிருந்தனர் எனபதும் இவர்கள் வாயிலாக அரச ஆணை எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதும் இச்செப்பேட்டில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

25. இராசராசனது ஆணை எவ்வாறு நிறைவேற்றி வைக்கப்பட்டது என்பதை ஆனைமங்கலம் செப்பேட்டின் வழி நின்று விளக்குக.

முதலாம் இராசராசன் தனது 21-ம் ஆட்சி ஆண்டு 92-ம் நாளன்று தஞ்சாவூர்ப் புறம்படி மாளிகை ராஜாசிரயனில் தெற்கில் மண்டபத்தில் எழுந்தருளியிருந்தான். அக்காலத்தில் கிடாரத்தரசன் சூளாமணி பன்மன் நாகப்பட்டினத்தில் சூளாமணி பன்ம விகாரம் என்ற பெயரில் ஒரு பௌத்தப் பள்ளி கட்டினான். இராசராசன் அந்தப் பௌத்தப் பள்ளிக்கு ஆனை

மங்கலம் என்ற ஊரைப் பள்ளிச் சந்த இறையிலியாகக் கொடுக்க நினைத்தான். உடனே, "ஆனைமங்கலத்தில் உள்ள 97 வேலி நிலத்தினால் தனக்கு வரியாகக் கிடைத்து வருகிற 8943 கல நெல்லை அப்பௌத்தப் பள்ளிக்கு அளிக்க வேண்டும்" என்றும், "அவ்வூரைப் பள்ளிச் சந்த இறையிலியாக வரியிலிட்டுக் கொடுக்க" என்றும் க்ஷத்திரிய சிகாமணி வள நாட்டுப் பட்டினக் கூற்றத்து நாட்டார்க்கும் பிரம்மதேயக் கிழவர்க்கும ஆணை பிறப்பித்தான்.

அந்த ஆணையைத் திருமந்திர ஓலையான விளத்தூர் கிழவன் அமுதன் தீர்த்தங்கரன் என்பவன் ஓலையில் எழுதித் திருமந்திர ஓலை நாயகர்களிடம் சேர்ப்பித்தான். திருமந்திர ஓலை நாயகங்களான கிருஷ்ணன் ராமனான மும்முடி சோழப் பிரம்மராயன் முதலிய மூவர் சரிபார்த்துக் கையொப்பமிட்டனர். பின்பு உடன் கூட்டத்ததிகாரிகளிடம் அனுப்பி வைத்தனர்.

அவ்வாணையைச் சரிபார்த்து அரசனது உள்படு கருமம் ஆராய்கிறவர்களில் ஆரூரன் அரவணையான் முதலிய ஐந்து பேரும் நடுவிருக்கைகளில் பரமேஸ்வர பட்ட சர்வக்ரது யாஜி முதலிய நான்கு பேரும் கையொப்பமிட்டனர். பின்பு "இவ்வாணையை வரியிலிட்டுக் கொள்க" என்று புரவுவரித் திணைக் களத்தார்க்கு அனுப்பி வைத்தனர்.

அங்ஙனம் வந்த ஆணையைப் புரவு வரித் திணைக் களத்தாரில் புரவு வரிகளான கொற்றன் பொற்காரி முதலிய நான்கு பேரும், வரிப் பொத்தகம் என்ற அலுவலர்களான குமரனரங்கன், சிங்கன் வெண்காடன் என்ற இரண்டு பேரும் கையொப்பமிட்டு வரியிலிட்டுக் கொடுத்தனர்.

அதன் பின் அந்த ஆணை ஓலை மீண்டும் அரசனிடம் வந்து சேர்ந்தது. வெண்ணெய் நல்லூர்த் தம் மடி பட்டன் முதலிய அறுவரை நியமித்து "இவர்

களோடு உடன் நின்று எல்லை தெரிவித்துப் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறையோலை செய்து அனுப்புக" என்று இராசராசன் பட்டினக் கூற்றத்து நாட்டார்க்கு ஆணையிட்டான் முந்திய ஓலையில் இந்த ஆணையையும் திருமந்திரஓலை எழுதினான். திருமந்திரஓலை நாயகர்களும் கையொப்பம் இட்டனர்.

இவ்வாறாக ஆணை ஓலை, திருமுகமாக்கப்பட்டது. அந்தத் திருமுகத்தைத் தம்மடிபட்டன் முதலிய அறுவர் எடுத்துச் சென்று பட்டினக் கூற்றத்து நாட்டாரிடம் சோப்பித்தனர். நாட்டாரும் திருமுகம் கண்டு எதிரெழுந்து சென்று தொழுது வாங்கித் தலைமேல் வைத்து அதிற்கண்ட வண்ணம் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து எல்லை தெரிந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறவோலை செய்து கொடுத்தனர். அத்திருமுக ஓலையின் கீழ்ச் சம்பந்தப்பட்ட பறபலர் அறவோலை செய்து கையொப்பமிட்டனர்.

பிறகு அறவோலை அரசனுக்கு அனுப்பி வைக்கப் பட்டது. இராசராசன் "அந்த அறவோலைப் படியே வரியிலிட்டுக் கொள்க" என்று ஆணையிட்டான். அதன் வண்ணம் அறவோலையின் கீழ் உடன்கூட்டத்து அதிகாரிகள் சிலர் கையொப்பமிட்டுப் புரவுவரித் திணைக்களத்தார்க்கு அனுப்பினர். புரவுவரித் திணைக் களத்தார் வரியிலிட்டுக் கொடுத்தனர்.

இவ்வாறாக இராசராசனது ஆணை நிறைவேற்றி வைக்கப்பட்டது.

26. முதலாம் இராஜராஜன் லெய்டன் செப்பேட்டின் மெய்க் கீர்த்தியை விளக்குக. (79 Sep.)

[லெய்டன் செப்பேட்டில் தமிழ்ப் பகுதியில் பட்டினக் கூற்றத்து நாட்டாரிடம் அரச ஆணை வந்த காலத்தைக் குறிக்கும் இடத்தில் இராசராசனது மெய்க்கீர்த்தி இடம் பெற்றுள்ளது.]

மெய்க்கீர்த்தி வருமாறு :—

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
நுளமப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டு தன்
எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே
செழியரைத் தேசுகொள்
ஸ்ரீ கோ இராஜகேஸரி வர்மரான ஸ்ரீ ராஜராஜ
தேவர்க்கு யாண்டு இருபத்தொன்றுவது

கருத்து : அரசர்கள் யாவரும் திருமாலின் அவதாரம் என்று கூறுவது மரபாதலின், இராசராசன் அரசாட்சியாகிய திருமகளைப் பிறப்புரிமையால் பெற்றது போல உலகப் பெரு நிலமாகிய பூமி தேவியும் தனக்கே உரியவளாக வேண்டும் என்று மனத்துள் கருதினன். அதனல் காந்தளூரில் உள்ள கல்விச் சாலையில் உண்கலத்தை வரையறுத்தான். வேங்கை நாடு, கங்கபாடி, நுளம்ப பாடி, தடிகைபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஈழ மண்டலம் ஆகியவற்றைத் தனது தண்டால (சேணையால்) வென்று கைச்கொண்டான். பாண்டியரின் புகழையும் தனதாக்கிக்கொண்டான். அவன் கோஇராசகேசரிவர்மன் என்ற பட்டமுடைய இராசராசன். அவனுக்கு உரிய 21வது ஆட்சி ஆண்டு.

விளக்கம்

காந்தளூர்ச்சாலை கலமறுத்தது: திருவனந்தபுரத்துக்கு அருகில் கடற்கரை ஓரமாக வலியசாலை என்ற ஓர் ஊர் இருக்கிறது. அது அக்காலத்தில் காந்தளூர் என்று அழைக்கப்பட்டது. அவ்வூரில் இருந்த கல்விச்

சாலையில் இத்தனை மாணவர்க்கு உணவு தர வேண்டும் என்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த நியமம் சரிவர நடத்தப்படவில்லை. அந்நியமத்தை ஒழுங்குபடுத்தும் படி இராசராசன் சேரநாட்டு மன்னனாகிய பாற்கரரவி வர்மனிடம் ஒரு தூதுவனை அனுப்பினான். ரவிவர்மன் அத்தூதனை அவமதித்து உதகை என்ற இடத்தில் சிறை வைத்தான். எனவே தனது தூதனை மீட்பதற்காக இராசராசன் படையை அனுப்பினான். சோழர் படை ரவிவர்மனை வென்று தூதனை மீட்டது. பிறகு காந்தளூரில் இருந்த கல்விச்சாலையில் உண்கலம் சரியாக வரையறுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி கி. பி. 988ல் நடைபெற்றது.

வேங்கைநாடு என்பது கிருஷ்ணையாற்றுக்கும் கோதாவிரியாற்றுக்கும் இடையே கடற்கரையை அடுத்துள்ள நாடாகும். **கங்கபாடி** என்பது மைசூரின் தெற்கும் சேலத்தின் வடக்குமாகிய நிலபபரப்பாகும். **நுளம்பபாடி** என்பது மைசூரின் கிழக்கும் பெல்லாரி ஜில்லாவும் அடங்கிய நிலப்பரப்பாகும். **தடிகைபாடி** என்பது மைசூர் நிலப்பரப்பு. **குடமலைநாடு** என்பது குடகு. **கொல்லம்** என்பது சேர நாட்டில் உள்ள ஓர் ஊர். **கலிங்கம்** என்பது கோதாவிரிக்கும் மகாநதிக்கும் இடையே கடற்கரையை அடுத்துள்ள நாடாகும். **ஈழ மண்டலம்** என்பது இலங்கை. **தண்டு**—சேனை.

செழியரைத் தேசுகொள் என்பது பாண்டியர் ஐவரையும் வென்று அவரது புகழைத் தனதாக்கிக் கொண்டது **இராஜகேஸரி**—மாற்றரசர்க்கெல்லாம் சிங்கம் போன்றவன் சோழர்கள் பரகேசரி என்றும் இராசகேசரி என்றும் மாறி மாறிப் புனைந்து கொண்ட பட்டப்பெயர்களில் முதலாம் இராசராசன் இராசகேசரி என்ற பட்டம் புனைந்து கொண்டான்.

இம்மெய்க் கீர்த்தியினால் பாண்டிமண்டலம், சேர மண்டலம், கொங்குமண்டலம், தொண்டை மண்டலம், ஈழத்தின் வடபகுதி, கங்கைபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி என்பன இராசராசனது ஆட்சிக்குள் வந்து

விட்டன என்பதும், சோழராட்சி துங்கபத்திரை ஆறு வரை தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்தது என்பதும் தெரிய வருகின்றன.

27. லெய்டன் பட்டயத்தில் கூறப்பட்ட வ்யவஸ்தை, பரிகாரம் என்பவற்றை விவரிக்க.

ஆனைமங்கலமாகிய ஊர், பள்ளிச்சந்த இறையிலியாக வழங்கப்பட்டபோது அதன் சார்பாகச் சில வ்யவஸ்தைகளும் பரிகாரங்களும் லெய்டன் பட்டயத்தில் கூறப்பட்டுள்ளன. வ்யவஸ்தை என்பது தீர்மானிக்கப்பட்ட முடிவுகள் அல்லது விதிகள் என்று பொருள் படும். பரிகராம் என்பது தவிர்ப்புகள் அல்லது விலக்குகள் என்று பொருள்படும்.

பட்டயத்தில் கூறப்பட்ட வ்யவஸ்தைகள் வருமாறு: 1. ஆனை மங்கலத்தில் உள்ள நிலங்களுக்கு முன்பு நீர் பாய்ந்த ஆற்றிலிருந்து புதுவாய்க்கால் வெட்டி நீர் பாய்த்தவும் வாரவும் செய்யலாம். 2. இந்நிலங்களுக்கு நீர்பாயும் பழைய வாய்க்கால் வழியாகவும் நீர்பாயவும் வாரவும் செய்யலாம். 3. அன்னியர்கள் இவ்வாய்க்காலின் கரையை வெட்டிப் புதுவாய்க்கால் அமைத்தலும், வாய்க்கால்களின் குறுக்கே அடைத்தலும், சிறிய ஏற்றங்களால் நீர் இறைத்தலும் இறை கூடையால் நீர் இறைத்தலும் செய்யக்கூடாது. 4. வாய்க்காலின் நீரை வேறுவகையான பொது விணக்குப் பயன்படுத்தக் கூடாது. 5. உரிமை உடையவர்கள் பயிரிடுவதற்கு வாய்க்கால் நீரை அடைத்துப் பாய்ச்சிக் கொள்ளலாம். 6. ஆனைமங்கலத்தில் செங்கற்களால் மாடமாளிகைகளைக் கட்டிக் கொள்ளலாம். 7. துரவும் கிணறும் இறக்கிக் கொள்ளலாம். 8. தோப்புக்களில் தென்னைகளை நட்டுக் கொள்ளலாம். 9. தமனம், மரு, இருவேலி, செண்பகம், செங்கழுநீர், மா, பலா, கமுகு, பனை, கொடி முதலான பலன்தரு மரம் முதலியன நட்டுக் கொள்ளலாம். 10. பெருஞ்செக்கு அமைத்துக் கொள்ளலாம். 11. இவ்வூர் நிலத்து வழியாகச் சென்று புறவூர் நிலங்

களுக்கு நீர் பாயும் வாய்க்காலின் மேல் நடை நீர் பாயவும் வாரவும் விடலாம். 12. புறவூர் வழியாக வந்து இவ்வூர் நிலங்களுக்கு நீர்பாயும் வாய்க்காலின் மேல் நடைநீரைப் புறவூரார் பாயவும் வாரவும் விடலாம் 13. இவ்வூரில் பயிரிட்ட தென்னே, பனே மரங்களில் ஈழவர் (கள்ளிறக்குவோர்) ஏறக் கூடாது. அதாவது கள்ளிறக்கக் கூடாது. 14 இவ்வூரார் தம்குடிக்கேற்ப முரைசும் முப்படித் தோரணமும் அமைத்துக்கொள்ளலாம்.

பட்டயத்தில் கூறப்பட்ட பரிகாரம் வருமாறு: நாடாட்சி, ஊராட்சி, வட்டிநாழி, பிதாநாழி, கண்ணாலக்காணம், வண்ணாரப்பாறை, குசக்காணம், நீர்க்கூலி, ஓலேக் கூலம், தறிப்புடவை, தரகு, தட்டார்ப்பாட்டம், இடைப் பாட்டம், மாட்டுக்குஇறை, நல்லா, நல்லெருது, நாடு காவல், ஊடுபோக்கு, விற்பிடி, வாலமஞ்சாடி, உல்கு, ஓடக்கூலி, மன்றுபாடு, மரவிறை, தீஎரி, ஈழம்பூட்சி, கூத்திக்கால் முதலாக அரசன் பெற்று நுகரத்தக்கன வான எவ்வகைப்பட்ட வரிகளேயும் அரசன் பெற்றுக் கொள்ளக் கூடாது அவ்வரிகள் அனேத்தும் பள்ளிச் சந்தத்துக்கே உரியதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

28. லெய்டன் சாஸனத்தில் கண்ட வரிவகைகளே எழுதி விளக்குக. (அல்லது) இராசராசன் ஆட்சியில் வாங்கப் பெற்ற வரிவகைகளே எழுதி விளக்குக.

லெய்டன் சாஸனத்தில் நாடாட்சி முதலாக 27 வரிவகைகள் கோத்தொட்டு உண்ணற்பாலன (அரசன் பெற்று நுகரத்தக்கன, என்று குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றின் விளக்கம் வருமாறு:-

1. **நாடாட்சி**—நாட்டுச் சபையின் நடைமுறை செலவுக்காக வாங்கப்பட்ட வரி.

2. **ஊராட்சி**—ஊர்ச்சபையின் நடைமுறை செலவுக் காக வாங்கப்பட்ட வரி.

3. **வட்டிநாழி**—வட்டி வாங்குவோரிடம் அவ் வட்டிக்கு ஏற்ப வாங்கப்பட்ட வரி.

4. பிதாநாழி—(இது புதாநாழி என்பதன் மரூஉ) புதா என்னும் அளவு கொண்ட தானியம் விற்க ஒரு நாழி அளவு தானியம் வரி என்று கணக்கிட்டு வாங்கப் பட்ட வரி.

5. கண்ணாலக்காணம்—திருமணம் செய்து கொள்பவர்களிடம் திருமணச் சடங்குக்காகப் பொற்காசாக வாங்கப்பட்ட வரி.

6. வண்ணாரப்பாறை—துணி வெளுப்பவர்களிடம் துணி வெளுக்கும் கற்பாறை இட்டுக் கொள்வதற்காக வாங்கப்பட்ட வரி.

7. குசக்காணம்—குயவர்களிடம் பொற்காசாக வாங்கப்பட்ட வரி.

8. நீர்க்கூலி—குடிநீர் கொண்டுவந்து விற்பவரிடம் சிறுதொகையாக வாங்கப்பட்ட வரி

9. ஓலைக்கூலம்—கீற்றோலை முடைபவர்களிடம் தானியமாக வாங்கப்பட்ட வரி.

10. தறிப்புடவை—தறியில் நெசவு செய்பவர்களிடம் துணியாக வாங்கப்பட்ட வரி

11. தரகு—தரகரிடம் வாங்கப்பட்ட வரி.

12. தட்டார்ப் பாட்டம்—பொற் கொல்லர்களிடம் அவர் வேலை செய்யும் பட்டரையாகிய இடத்துக்காக வாங்கப்பட்ட வரி.

13 இடைப் பாட்டம்—இடையர்களிடம் மாடு மேய்க்கும் இடத்துக்காக வாங்கப்பட்ட வரி.

14. மாட்டுக்கிறை—மாடு வளர்ப்பாரிடம் வாங்கப் பட்ட வரி.

15. நல்லா—உயர்ந்த சாதி பசுவை வளர்ப்பவரிடம் வாங்கப்பட்ட சிறப்பு வரி

16. நல்லெருது—உயர்ந்த சாதி எருதை வளர்ப்பவரிடம் வாங்கப்படட சிறப்பு வரி.

17. நாடு காவல்—நாட்டுக் காவல் செலவினத்துக்காக வாங்கப்பட்ட வரி

18. ஊடுபோக்கு—வாணிகச் சாத்து ஓர் ஊரின் இடையே புகுந்து போகும் போக்கிற்காக வாங்கப்பட்ட வரி. (ஊடு பயிர்க்காக வாங்கப்பட்ட வரி என்று சிலர் கூறுவர்)

19. விற் பிடி: வில் வித்தை கற்கத் தொடங்குபவரிடம் "விற் பிடி" என நடத்தும் சடங்கிற்காக வாங்கப்பட்ட வரி.

20. வால மஞ்சாடி—புது மனை புகுபவரிடம் அவர் நடத்தும் புனிதச் சடங்கிற்காக மஞ்சாடி நிறை பொன்னாக வாங்கப்பட்ட வரி.

21. உல்கு—ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்காக வாங்கப்பட்ட சுங்க வரி.

22. ஓடக் கூலி—ஓடம் செலுத்துபவர்களிடம் சிறு தொகையாக வாங்கப்பட்ட வரி.

23. மன்று பாடு—நீதி மன்றம் விதிக்கும் தண்டம்.

24. மர விறை—மரம் வளர்ப்பாரிடம் வாங்கப்பட்ட வரி.

25. தீயெரி—விறகு வெட்டிகளிடம் வாங்கப்பட்ட வரி.

26. ஈழம் பூட்சி—கள்ளிறக்குபவர்களிடம் வாங்கப்பட்ட வரி.

27. கூத்திக்கால்—கூத்தாடும் மகளிரிடம் அரங்கு அமைக்கும் இடத்துக்காக வாங்கப்பட்ட வரி.

29. நெடுஞ்செழியனின் மீனாட்சிபுரக் கல்வெட்டுக் குறித்து ஒரு கட்டுரை வரைக. (78 Apl.)

மீனாட்சிபுரக் கல்வெட்டு

இருப்பிடம் : மதுரையிலிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் ஒரு குறுக்குச் சாலை

வழியாகச் சென்று மீண்டும் அதிலிருந்து ஒரு வண்டிப் பாதை வழியாகச் சென்றால் மீனாட்சி புரத்தை அடைய லாம். இவ்வூரிலிருந்து அரிட்டாபட்டி என்ற ஊர் வரை ஐந்து கல் நீளத்துக்கு ஒரு மலைத் தொடர் தெற்கு வடக் காக அமைந்திருக்கிறது. இம்மலையின் கிழக்குப் புறத்தில் இயற்கையாய் அமைந்த குகையில் சில கற் படுக்கைகள் இருக்கின்றன. மேலும் பாறையின் மேற் புறத்தில் சில கல் வெட்டுகள் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகள் மீனாட்சிபுரத்தில் அமைந்த மலையில் இருப்பதால், இவை மீனாட்சிபுரக் கல்வெட்டுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றை அரிட்டாபட்டி கல் வெட்டு என்றும், மாங்குளம் கல்வெட்டு என்றும் ஒரு சிலர் கூறுவர்.

கல்வெட்டுகள்:

1. கணிய் நந்தஅ ஸிரிய் இகுவ்அன் கே
தம்மம் இத்தஅ நெடுஞ்சழியன் பண அன்
கடல் அன் வழுத்திய் கொட்டுப் பித்தஅ பளிஇய்.

2. கணிய் நந்த ஸிரிய்குஅன் தமம்
இத நெடுஞ்சழியன்
ஸலகன் இளஞ்சடிகன் தந்தைய்
சடிகன் செ இய பளிய்.

3. கணிஇ நத ஸிரிய் குவ...
வெள்அறைய் நிகமது காவிதிஇய்
கழிதிக அந்தைஅ ஸுதன்
பிணஊ கொடுபிதோன்.

4. சந்தரிதன் கொடுபிதோன்.

5. வெள் அறை நிகமதோர் கொடி ஓர்.

திருத்தமான வடிவம்: 1. கணி நந்த ஸ்ரீ இயக்குவ னுக்குத் தர்மம் ஈத்த நெடுஞ்செழியன் டணவன் கடலன் வழுதி கொட்டுவித்த பள்ளி. 2. கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்குத் தர்மம் ஈத்த நெடுஞ்செழியன் ஸலகன் இளஞ்சடிகன் தந்தை சடிகன் செய்த பள்ளி.

3. கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு வெள்ளறை நிகமத்துக் காவிதி கழிதிக அந்தையது சுதன் பிணவூ கொட்டுவித்தோன் 4. சந்தரிதன் கொட்டுவித்தோன். 5. வெள்ளறை நிகமத்தோர் கொட்டினோர்.

கல்வெட்டுச் செய்தி : 1. கணியாகிய நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு நெடுஞ்செழியன் என்ற பாண்டியன் ஒரு பள்ளி (கற் படுக்கை) செதுக்குவித்தான். 2. அதே இயக்குவனுக்கு நெடுஞ்செழியனது சகலனும் இளஞ் சடிகனது தந்தையும் ஆகிய சடிகன் ஒரு பள்ளி செதுக்குவித்தான் 3. அதே இயக்குவனுக்கு வெள்ளறை நிகமத்தைச் சார்ந்த காவிதி அழிதக அந்தையின் மகனுன் பிணவூ என்பவன் ஒரு பள்ளி செதுக்குவித்தான் 4. சந்தரிதன் என்பவன் ஒரு பள்ளி செதுக்குவித்தான். 5. வெள்ளறை நிகமத்தோர் ஒரு பள்ளி செதுக்குவித்தனர்.

எழுத்தமைதி : மீனுட்சிபுரக் கல்வெட்டுகள் தமிழி என்னும் தென்னுட்டுப்பிராமி எழுத்தில் பொறிக்கப் பட்டுள்ளன. மேலும் இவ்வெழுத்து வடிவம் மிக முற்பட்ட தமிழி எழுத்தாக உள்ளன. எனவே இவற்றின் காலம் கி.மு. 3 அல்லது 2-ம் நூற்ருண்டாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இக்கல்வெட்டுகளில் கணிய், ஸிரிய், பளிய், வழுதிய் எனவும் தந்தைய், வெள்அறைய் எனவும் இகர ஐகார ஈறுகளின் பின் யகர ஒற்று ஒன்று அதிகப்படியாய்ச் சேர்த்து எழுதப் பட்டிருக்கிறது. இங்ஙனம் யகர ஒற்றுச் சேர்த்து எழுதும் முறை பல்லவர் சோழர் பாண்டியர் கல்வெட்டு களிலும் சிற்சில இடங்களில் காணப்படுகிறது.

சொல்லமைதி : 1. மீனுட்சிபுரக் கல்வெட்டுகளில் பண அன், கடல் அன், இகு அன் என விகுதிகள் உடம் படு மெய்யின்றித் தனியாகப் பிரித்து எழுதப்பட் டுள்ளன. 2. அந்தை அ, இகுவன் கே என வேற்றுமை உருபுகளும் பிரித்து எழுதப்பட்டுள்ளன. 3. கணி, ஸிரி, இகுவன், தம்மம், பளி, ஸுதன், நிகமம் என்ற

வடமொழிப் பாகதச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. 4. கொட்டுவித்த என்பது கொட்டுபித்த எனவும், செய்த என்பது செஇய எனவும் கொட்டியோர் என்பது கொடிஓர் எனவும் சிதைந்த சொல்வழக்குகளாக அமைந்துள்ளன.

இளம் என்பதன் பொருள் · "இளஞ்சடிகன் தந்தை சடிகன்" என வரும் தொடரால் இளம் என்னும் அடைமொழி மகன் என்ற உறவு முறையை உணர்த்துகிறது என்பது தெள்ளிதின் விளங்குகிறது. ஆனால் சங்க நூல்களில் வருகிற இளங்குமணன், இளவிச்சிக்கோ என்ற பெயர்களில் வந்துள்ள இளம் என்னும் அடைமொழி தம்பி என்ற உறவு முறையை உணர்த்துவதாகச் சொல்லப்பட்டு வருகிறது. இதன் உண்மை ஆராய வேண்டியதொன்றாகும்.

நெடுஞ்செழியன் யார்? சங்க இலக்கியங்களில் நெடுஞ்செழியன் என்ற பெயரில் மூவர் காணப்படுகின்றனர். முதலாமவன்—ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன். இவன் சேரன் செங்குட்டுவனுக்குச் சம காலத்தில் இருந்தவன். எனவே இவன் காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டு. இரண்டாமவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். இவன் மாந்தரஞ் சேரலிரும்பொறை முதலிய எழுவரை வென்றவன். இந்த இரும்பொறை செங்குட்டுவனுக்குப் பிற்பட்டவன். எனவே இவன் காலம் கி.பி. 2-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகலாம். மூன்றாமவன்—நம்பி நெடுஞ்செழியன். இவன் பேரெயின் முறுவலாரால் பாடப் பெற்றவன். இவன் காலமும் பிற்காலமாகவே தெரிகிறது. ஆனால் மீனாட்சிபுரக் கல்வெட்டின் எழுத்தமைதி கி. மு. 2 அல்லது 3-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகத்தெரிவதால் கல்வெட்டில் குறிக்கப்பட்ட நெடுஞ்செழியன், சங்க இலக்கியங்களில் காணப்படும் மூவர்க்கும் மிக முற்பட்டவன் எனத் தெரிகிறது.

30. சித்தன்னவாசல் கல்வெட்டை எழுதி விளக்கமும் தருக.

சித்தன்னவாசல் கல்வெட்டு

எருமி நாடு குமிழ்ஊர் பிறந்த
காவுடி ஈதேன்கு சிறுபோவில்
இளயர் செய்த அதிட்அனம்.

விளக்கம்: புதுக்கோட்டைக்கு 10 கல் தொலைவில் உள்ள சித்தன்னவாசல் என்ற ஊரில் உள்ள மலையில் ஏழடிப்பாட்டம் என்ற பகுதியில் இயற்கையாய் அமைந்த குகையில் சில கற்படுக்கைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒரு கற்படுக்கையின் பக்கவாட்டில் இக் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு தமிழி எழுத்தில் அமைந்துள்ளது. எழுத்துக்கள் சற்று வளர்ச்சி பெற்றுள்ளமையால் இதன் காலம் கி. மு 2ம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

எருமை நாட்டுக் குமிழூரில் பிறந்த காவிதி ஈதேனுக்குச் சிறுபோவில் இளையர் செய்த அதிட்டானம் என்பது திருத்தமான வடிவமாகும்.

எருமை நாட்டில் குமிழூரில் பிறந்த காவிதி ஈதேன் என்ற சமணத் துறவிக்குச் சிறுபோ என்ற ஊரில் அவனது தம்பிமார்கள் ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தனர் என்பது இக்கல்வெட்டில் கூறப்பட்ட செய்தியாகும்.

எருமை நாடு என்பது தற்போது மைசூர் நாடு என வழங்குகிறது. காவிதி என்பது வணிகர்க்கு உரிய பட்டம். சிறுபோ என்பது தறபோது சித்தன்னவாசல் என வழங்குகிறது. இளையர்—தம்பிமார். அதிட்டானம் என்பது இடம் என்று பொருள்படும். அது ஈண்டுக் கற்படுக்கையைக் குறிக்கிறது.

இக்கல்வெட்டில் குமிழூர், ஈதேனுக்கு, அதிட்டானம் என்ற சொற்கள் குமிழஊர், ஈதேனகு, அதிட்அனம்

எனப்பிரித்து எழுதப்பட்டிருக்கும் முறை காலப்பழமையைக் காட்டுகிறது. மேலும் எருமை. காவிதி என்ற சொற்கள் எருமி, காவுடி எனச் சிதைந்த சொல்லுருவங்களாய் அமைந்துள்ளன.

31. ஆர் நாட்டார்மலைச் சங்ககாலச் சேரர் கல்வெட்டுச் செய்திகளைத் தொகுத்து விளக்குக. (79 Apl.)

[கருவூருக்குப் பத்துகல் தொலைவில் உள்ள புகளூரில் ஆர நாட்டார் மலை என்று ஒரு மலை இருக்கிறது. இம்மலையின் வடபுறத்திலும் தென்புறத்திலும் இயற்கையாய் அமைந்த குகைகளில் கற்படுக்கைகளும் சில கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.]

ஆர் நாட்டார் மலையின் வடபுறக்குகையில் "ஞகன் மகன் ளங்கீரன்" என ஒரு தொடர் மட்டும் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அங்குள்ள கற்படுக்கை நாகன் என்பவனின் மகனான இளங்கீரன் என்பவனால் செய்து கொடுக்கப்பட்டது என்ற செய்தி தெரியவருகிறது.

இனி அதே மலையின் தென்புறக்குகையில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் சில கல்வெட்டுகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவைகளாக இருக்கின்றன. மூத்த அமணனாகிய யாற்றூர்ச் செங்காயபன் என்ற துறவி உறைவதற்காகக் கோஆதன் சேரல் இரும்பொறையின் பேரனும் பெருங்கடுங்கோவின் மகனும் ஆகிய இளங்கடுங்கோன் என்பவன், தான் இளங்கோ ஆவதற்காக ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தான் என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது. மேலும் அதே இளங்கடுங்கோன், தான் இளங்கோ ஆனபிறகு ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தான் என்று மற்றொரு கல்வெட்டு அறிவிக்கிறது. மேலும் "கொற்றந்தை ளஎய் முன்று" என்று ஒருகல்வெட்டுத் தொடர் காணப்படுகிறது. அதாவது அத்தொடர் கொற்றந்தை என்பவனின் மகளான இளை என்பவள் ஒரு முன்று (கற்படுக்கை) செய்து கொடுத்தாள் என்று அறிவிக்கிறது.

விளக்கம்:

1. புகளூர் ஆர்நாட்டார் மலைக் கல்வெட்டில் கோ ஆதன் செல்லிரும்பொறை, அவன் மகன் பெருங்கடுங்கோன், அவன்மகன் இளங்கடுங்கோன் எனச் சேரமன்னர் மூவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளன.

இம்மூவரைப் பற்றி ஐ. மகாதேவன் என்பவர் கூறும் ஆராய்ச்சி வருமாறு:—(1) இக்கல்வெட்டுகளில் ஆதன் எனவும் செல் எனவும் பெயர் கொண்டவன் சங்க காலச் சேரர்களில் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆவான். இவன் பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தின் பாட்டுடைத்தலைவன். (2) இனிப் பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோன் என்று குறிக்கப்பட்டவர்கள் முறையே பெருஞ்சேரலிரும்பொறையும், இளஞ்சேரலிரும்பொறையும் ஆவார்கள். இவர்கள் பதிற்றுப் பத்தில் எட்டாம்பத்து, ஒன்பதாம் பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்கள் ஆவார்கள். (3)பதிற்றுப்பத்தில் இளஞ்சேரலிரும் பொறையின் தந்தைபெயர் குட்டுவன் இரும்பொறை எனக் குறிக்கப்படுகிறது. ஆனால் கல்வெட்டில் இளங்கடுங்கோனின் தந்தை பெயர் பெருங்கடுங்கோன் என்று குறிக்கப்படுகிறது. எனவே பதிற்றுப்பத்தில் காணப்படுகிற "குட்டுவன் இரும்பொறை" என்ற பெயரைச் சேரர்களைக் குறிக்கும் பொதுப்பெயராகக் கொள்ளவேண்டும்.

இனி இம்மூவரையும் பற்றி மயிலை. சீனி. வேங்கடசாமி என்பவர் கூறும் ஆராய்ச்சி வருமாறு:— (1) கோஆதன் செல்லிரும் பொறைஎன்று கல்வெட்டு குறிக்கும் பெயரும், செல்வக் கடுங்கோ வாழியாதன் என்று பதிற்றுப்பத்து குறிக்கும் பெயரும் வேறுபட்டிருப்பதால் இவ்விருவரும் ஒருவராக இருக்க முடியாது. (2) எட்டாமபத்தின் பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பெருங்கடுங்கோன் என்ற பெயர் இருந்ததாகச் சங்க இலக்கியங்களில் சான்றில்லை. (3) ஒன்பதாம் பத்தின் இளஞ்சேரலிரும்பொறைக்கு இளங்கடுங்கோன் என்ற பெயர் இருந்ததாகச் சான்றில்லை. (4) எனவே இம்

மூவரும் பதிற்றுப்பத்தில் கண்ட மூவராக முடியாது. ஒருகால் கல்வெட்டில் குறிக்கப்பட்ட பெருங்கடுங்கோன் இளங்கடுங்கோன் என்பவர்கள் முறையே சங்கஇலக்கியத்தில் காணப்படும் பாலைபாடிய பெருங்கடுங்கோவும் மருதம் பாடிய இளங்கடுங்கோவும் ஆக இருக்கலாம்.

முடிபு: கல்வெட்டில் கண்ட மூவரும் சேரமன்னர்கள் என்பதில் ஐயமில்லை. "இவர்கள், பதிற்றுப்பத்து கொண்ட சேர மன்னர்களே" என்று முடிவு செய்யப் போதுமான சான்றுகள் இல்லை. நன்கு ஆராய்ந்த பிறகுதான் முடிவு கூற முடியும்.

32. புகளூர்க் கல்வெட்டுகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை என்பதை ஆராய்க.

விடை: *31*—ல் காண்க.

33. கருவூரே சேரர்களின் தலைநகர் என்பதற்குச் சான்றுகள் தருக.

கருவூரே சேரர்களின் தலைநகர் என்பதற்குரிய சான்றுகள் வருமாறு:—

(1) புகளூர்க் கல்வெட்டில் கருவூர்ப் பொன்வாணிகன் என்ற சங்க காலப் புலவர் பெயர் காணப்படுகிறது. (2)சங்கநூல் குறித்த ஆன் பொருநைஆறு, தற்போது ஆம்ராவதி என்று பெயர் திரிந்து கருவூரில் ஓடிக் கொண்டிருக்கிறது. (3) கருவூருக்கு வஞ்சி என்றும் ஒரு பெயருண்டு என்பதைக் கருவூராகிய வஞ்சிமாநகர் என்ற கல்வெட்டுத் தொடர் உறுதி செய்கிறது. (4) கருவூர்க்கு அருகில் உள்ள புகளூர் ஆர் நாட்டார் மலையில் சேரமன்னர் பெயர் கொண்ட கலவெட்டுகள் இருக்கின்றன. (5) மேனாட்டார் குறிப்புகளில் கருவூர் உள்நாட்டில் இருந்ததாகவே குறிக்கப்பட்டிருக்கிறது. (6) சங்க காலத்தில் கருவூர்க்கும் மேனாடுகளுக்கும் வாணிகத் தொடர்பு இருந்தது என்பதைக் கருவூர்க்கு அருகில் கிடைத்துள்ள ரோமானியக் காசுகள உறுதி செய்கின்றன. (7) சேரன் செங்குட்டுவன் 5ம் பத்தில்

மூன்ருறுகள் கூடும் கூடல்அணையவன் என்று குறிக்கப்படுகிருன். கூடல் என்பது காவிரியும் ஆன் பொருநையும் குடவனுறும் ஒன்றுகூடும் கூடல் என று பழயவுரை விளக்கம் செய்கிறது. இந்த ஆறுகள் கருவூருக்கு அருகில் ஒன்று கூடுகின்றன. அவ்விடத் துககு அருகே முக்கூடல் என்ற ஊரும் இருக்கிறது. (8) உறையூர்க்கு அண்மையில் கருவூர் இருந்ததாகச் சங்க இலககியம் குறிக்கிறது. (9) கருவூர்ககு அருகில் கிடைத்த கல்வெட்டுகளில் வஞ்சி நகரம என்ற பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. (10) ஆனுல் மேலைக் கடற் கரையில் உள்ள கொடுங்கோளூரை வஞ்சி என்று கூறு வதற்குக் கல்வெட்டுச் சான்று எதுவும் இல்லை.

34. அரச்சலூர் இசைக்கல்வெட்டுகளை எழுதி அவற்றின் சிறப்புகளையும் புலபபடுத்துக.

ஈரோட்டிற்கு 12 கல் தொலைவில் உள்ள அரச்ச லூரில் நாகமலை என்று ஒரு மலை இருக்கிறது. இம் மலையில் பாண்டியர் குழி என்ற பகுதியில் தமிழி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுகள் உள்ளன.

கல்வெட்டு:

1.	த	தை	தா	தை	த
	தை	தா	தே	தா	தை
	தா	தே	தை	தே	தா
	தை	தா	தே	தா	தை
	த	தை	தா	தை	த
2.	கை	த	தை	த	கை
	த	தை	த	தை	த
	தை	த	தை	த	தை
	த	தை	த	தை	த
	கை	த	தை	த	கை

3. எழுத்துப் புணருத்தான் மணிய்
வணணக்கன் தேவன் சாத்தன்.

சிறப்புக்கள் : முதல் கல்வெட்டு ஒரு வரிக்கு 5 எழுத்தாக 5 வரி கொண்டுள்ளது. இரண்டாவது கல் வெட்டும் அவ்வாறே ஒருவரிககு 5 எழுத்தாக 5 வரி கொண்டுள்ளது. இவற்றை இடமிருந்து வலமாகவோ' வலமிருந்து இடமாகவோ, மேலிருநது கீழாகவோ கீழிருந்து மேலாகவோ எப்படிப் படித்தாலும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதைக் காணலாம். இக்கல் வெட்டுகள் சொற்களாகவோ சொற்றொடராகவோ அமையாமல் இசைக்குறியீட்டு எழுதது்க்களாகவே அமைந்துள்ளன. மூன்ருவது கல்வெட்டு முன்ன வைகளைப் போல இசைககுறியீட்டு எழுத்துக்களாக அமையாமல் சொற்றொடராக அமைந்துள்ளது. இக் கல்வெட்டு, "முதலிரண்டு கல்வெட்டுகளில் அமைந்த இசைக் குறியீட்டு எழுத்துக்களைப் புணர்த்தவன் (தொகுத்தவன்) மணிவணணக்கன் தேவன் சாத்தன் ஆவான்" என்ற செய்தியை உணர்த்துகிறது.

மூன்ரும் கல்வெட்டை "ஏழு தானம் பண்வித்தான்" என்றும், "சித்தம் தீர்த்தம் பூணத் தந்தான்" என்றும் சிலர் வெவ்வேறு வகையாகப் படித்தார்கள். ஆனல் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் "எழுததுப் புணருத்தான்" என்று திருத்தமாகப் படித்தார்கள். புணருத்தான் என்பது தொகுத்தான் அல்லது சேர்த் தான் என்று பொருள்படும். அதாவது மேற்படி இரண்டு கல்வெட்டுகளில் உள்ளவாறு இசைக்குறியீட்டு எழுத்துக்களைத் தொகுத்தவன் என்பதாகும்.

இங்ஙனம் எழுத்துப் புணர்த்தலைப் பற்றிய செய்தி சிலம்பில் பேசப்பட்டிருக்கிறது அதாவது சிலம்பின் அரங்கேற்றுக் காதையில் "சொல்லிய இயலபின் சித்திர வஞ்சனை—புல்லிய அறிந்து புணர்ப்போன்" என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார். இதற்கு உரை எழுதிய அரும்பத உரையாசிரியர் "சித்திரப் புணர்ப் பாவது இசை கொள்ளும் எழுத்துக்களின்மேல் பண் ணீர்மை நிறுத்தல்" என்று குறித்துள்ளார். எனவே இசைக்கும் தாளத்துக்கும் ஏற்ப எழுத்துக்களைப் புணர்த்தல் என்ற முறை பண்டைக் காலத்திலேயே

தமிழகத்தில் வழங்கி வந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

இக்கல்வெட்டில் தமிழி வடிவோடு தொடக்க கால வட்டெழுத்து வடிவம் ஒன்றிரண்டு கலந்து காணப்படு வதால் இதன் காலம் கி. பி. 2ம் நூற்றுண்டெனக் கருதப்படுகிறது. எழுத்துப் புணர்ப்பைக் கூறும் சிலம்பின் காலமும் கி. பி. 2ம் நூற்றுண்டாகும். இக் கல்வெட்டின் காலம் சிலம்பின் காலத்தோடு ஒத் திருப்பது ஒரு சிறப்பாகும்.

35. திருநாதர்'குன்று கல்வெட்டை எழுதி விளக்கமும் தருக.

திருநாதர்குன்று கல்வெட்டு

ஐம்பத்தே ழனசனங் நோற்ற
சந்திரநந்தி ஆசிரிகர்
நிசீதிகை.

விளக்கம் : செஞ்சியில் உள்ள திருநாதர் குன்று என்னும் சிறிய மலையில் ஒரு பாறையில் இக்கல்வெட்டு உள்ளது. "ஐம்பத்தேழு நாட்கள் உண்ணுநோன்பு நோற்று உயிர் நீத்த சந்திரநந்தி என்னும் சமணத் துறவியின் இடம்" என்னும் செய்தியை இக்கல்வெட்டு உணர்த்துகிறது. இது வட்டெழுத்தும் தமிழ் எழுத்தும் கலந்த வடிவில் பொறிக்கப் பட்டிருப்பதால் இதன்காலம் 6 அல்லது 7ம் நூற்றுண்டாகக் கொள்ளப் படுகிறது.

அனசனம் - உண்ணுநோன்பு. சமணர்கள் உண்ணுநோன்பு இருந்து உயிர்விடுதலைக் குறிக் கோளாகக் கொண்டிருந்தார்கள். எனவே 57 நாட்கள் உண்ணுநோன்பு நோற்று உயிர் நீத்தார் என்று கொள்ளப்படுகிறது. ஆசிரிகர் என்பது ஆசிரியர் என் பதன் திரிபு. எனவே சந்திரநந்தி என்பவர் சமண சமய ஆசிரியர்களில் ஒருவராக இருந்தவர் எனத் தெரி கிறது நிசீதிகை என்பது இடம் என்று பொருள்படும். அது ஈண்டு அவரது கற்படுக்கையைக் குறிக்கிறது.

36. நடுகல் பற்றிய கல்வெட்டுகளால் அறியும் செய்திகளைத் தொகுக்க. (79Ap.)

நடுகல்கல் வெட்டுகள் வீரமரணம் எய்தியவர்களைப் பற்றிய குறிப்புக்களைத்தானே உணர்த்துகின்றன என்று சொல்லி அவற்றைப் புறக்கணித்து விட முடியாது. அக்கல்வெட்டுகள் முற்கால மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்கள் வீரர்களை நன்கு மதித்துப் பாராட்டியதையும், பேரரசர் வரலாறுகளில் இதுகாறும் அறியப்படாமலிருந்த வரலாற்று நுட்பங்கள் சிலவற்றையும் மற்றும் இவைபோன்ற பலசி செய்திகளையும் நமக்கு அறிவிக்கின்றன. அவை வருமாறு:—

மக்களின் வாழ்க்கை முறை : ஒரு ஊரினர் பக்கத்து ஊரிற் சென்று ஆன்தொறு (பசுக் கூட்டம்) அல்லது எருமைத் தொறுக்களைக் கவர்ந்திருக்கிறார்கள். கள்வர்களும் கூட அவ்வாறு கவர்ந்தது உண்டு. இங்ஙனம் கவரப்பட்ட தொறுக்களை மீட்பதற்காகத் தொறுக்களின் உரிமையாளர்களோ அல்லது ஊரினரோ எதிர்த்துப் போராடி இருக்கிறார்கள். இப்போரில் வீரங் காட்டி உயிர் நீத்த மறவர்களும் உண்டு. அவர்க்கு உதவியாக நாய்களும் போராடி உயிர்விட்டிருக்கின்றன.

கள்வர்கள் பெண்மக்களைக் கவர்ந்து சென்றதும் உண்டு. அப்பெண் மக்களை மீட்டுப் போராடி உயிர் விட்டவரும் உண்டு. காட்டிலிருந்து நாட்டுக்குள் புகுந்து நலிவு செய்த புலி பன்றி போன்ற கொடிய விலங்குகளோடு போராடி அவற்றைக் குத்தித் தாமும் இறந்து பட்ட மறவரும் உண்டு.

கடவுளர்க்கு நேர்ந்து கொண்டபடி. தம் உடம்பை அரிந்து நவகண்டம் கொடுத்துத் தம் தலையை அரிந்து பலிபீடத்தின் மேல் வைத்த மறவர்களும் உண்டு. பகைவன் ஒருவன் பிறர்நாட்டை வஞ்சனையால் கவர்ந்து அரசனையும்கொலைசெய்தபோது, அவ்வரசனது மனைவி முதலியோரைக் காப்பாற்றிக் காலம் வரும்வரைக் காத்

திருந்து பிறகு பகைவனேடு போராடி நாட்டை மீட்டு உயிர் விட்டவர்களும் உண்டு.

இப்படி எல்லாம் வீரமரணம் எய்தியவர்களுக்கு நடுகல் நட்டு மக்கள் வழிப்பட்டிருக்கிருர்கள்.

வீரர்களுக்குப் பாராட்டு : வீரங்காட்டி உயிர் நீத்த மறவர்களை நன்கு மதித்தற்காக அக்கால மக்கள் நடுகற்களை நட்டு, அக்கற்களில் வீரனின் உருவத்தைச் செதுக்கி அவனது பீடும் பெயரும் பொறித்துவைத்தார்கள். மேலும் அக்கற்களை வேடியப்பன் என்று சொல்லித் தெய்வமாக வழிபட்டு வந்தார்கள். அந்த நடுகற்களின் வழிபாட்டுக்காக இறையிலி நிலங்களும் கொடுத்திருக்கிருர்கள். மறவர்க்கு மட்டுமின்றி அவர்க்குத் துணை நின்று உயிர்விட்ட நாய்க்கும் கூடக் கல்நட்டு உருவம் செதுக்கிப் பெயரும் சிறப்பும் பொறித்துவைத்திருக்கிருர்கள்.

வரலாற்று நுட்பங்கள் : செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் துணையாகக் கொண்டு பல்லவர் வரலாற்றை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் சிம்மவிஷ்ணு (கி. பி. 580 கி. மு. 600) 20 ஆண்டுகளும், முதலாம் மகேந்திர வர்மன் (கி. பி. 600 மு 630) 30 ஆண்டுகளும் அரசாண்டதாக முடிவு செய்துள்ளார்கள், ஆனுல் சிம்மவிஷ்ணு 33 ஆண்டும், முதலாம் மகேந்திரன் 39 ஆண்டும் அரசாண்டிருப்பதாகச் செங்கம் நடுகற்கள் தெரிவிக்கின்றன.

இதனுல் வரலாற்ருராய்ச்சியாளர்களின் முடிவில் சிறிது மாற்றம் செய்யவேண்டி உள்ளது. அதாவது அந்த மன்னர்களின் கி. பி ஆண்டில் மாறுதல் செய்ய வேண்டி உள்ளது.

மேலும், ''சோழ மன்னர்கள் இளவரசாக இருந்தது முதற்கொண்டே ஆட்சி ஆண்டைக் குறித்துக்கொண்டனர். ஆனுல் பல்லவர்கள் அவ்வாறு குறிக்காமல் அரியணை ஏறியது முதற்கொண்டுதான் ஆட்சி ஆண்டு குறித்தார்கள்'' என்று வரலாற்ருராய்ச்சியாளர்கள்

கூறி வந்தார்கள். நடுகற்கள் இந்த முடிபை மாற்றிப் "பல்லவரும் சோழரைப் போலவே இளவரசாக இருந்தது முதற்கொண்டே ஆட்சி ஆண்டைக் குறித் தார்கள்" என்று எண்ணவைக்கின்றன.

அதாவது முன்பு வரையறை செய்த கி. பி. ஆண்டை மாற்றியாக வேண்டும். இல்லாவிட்டால் சோழரைப்போலவே பல்லவரும் "தந்தை காலத் திலேயே மகனும் நாட்டின் ஒரு பகுதியை ஆளுதல்" என்ற வழக்கமுடையவர் என்று சொல்ல வேண்டும்.— இவ்வாறு ஒரு புதிய திருப்பத்தை நடுகறகள் உண்டாக்கியிருக்கின்றன.

மற்றும் சில **செய்திகள்:** அபராஜிதவர்மனோடு பல்லவான் மரபு முடிந்து விடுவதாக முந்தைய ஆராய்ச்சியாளர்கள் கூறினர். ஆனல் அபராஜிதனுக் குப் பின்னும் கம்பவர்மன் போன்ற சிலர் பலலவ மரபைச் சார்ந்தவர்களாக அரசாண்டிருக்கிருர்கள் என்ற செய்தியை நடுகற்கள் தெரிவிக்கின்றன.

பல்லவப் பேரரசர்களின் காலத்திலேயே அவர்க்கு அடங்கிய சிற்றரசர்களாகப் பெரும்பாணரசர், வாணகோவரையர் போன்றவர்கள் இருந்தார்கள் என்ப தும், அச்சிற்றரசர்களின் மெய்காவலராகஇருந்தவர்கள் சேவகர், இளமகன், அடியான் என்று அழைககப் பட்டார்கள் என்பதும், அந்த மெய்காவலர் தமது தலைவர்களுக்கு உறறுழி உதவி உயிரையும் விட்டிருக் கிருர்கள் என்பதும் நடுகறகல்வெட்டுகளால் தெரிய வருகின்றன.

37. மகேந்திர வர்மன் கால நடுகற் கல்வெட்டுகளால் அறியலாகும் வரலாற்று உண்மைகளைத் தருக. (78 Apl)

(1) முதலாம் மகேந்திரவர்மனின் 18 வது ஆட்சி ஆண்டில் மேல்வேணாட்டில் உள்ள ஆந்தைபாடி என்ற ஊரை ஈசைப் பெருமபாணரசரின் மருமக்களான (வழி வந்தவரான) பொற்சேந்தியார் எனபவர் ஆண்டு வந்தார். அவருடைய சேவகர்கள் தண்டம்பட்டில்

உள்ள ஆனிரையைக் கவர்ந்தார்கள்- அப்போது வேணாட்டைச் சேர்ந்த நந்தியார் என்பவன் போரிட்டு ஆனிரைகளை மீட்டு இறந்து பட்டான் அவன் நினைவாகத் தண்டம்பட்டில் ஒரு நடுகல் நடப்பட்டது.

(2) முதலாம் மகேந்திர வர்மனின் 34 வது ஆட்சி ஆண்டில் வாணகோவரசரது வழிவந்தவரான பொற்றெக்கையார் எடுத்தனூர்ப் பகுதியை ஆண்டு வந்தார். அவருடைய சேவகன் கருந்தேவகத்தி என்பவன் ஆவான். அந்நாட்களில் கள்வர் சிலர் அவ்வூரின் எருமை நிரையைக் கவர்ந்தார்கள். கருந்தேவகத்தி தனது எருமைகளை மீட்கப் போரிட்டு இறந்தான். கோவிவன் என்ற பெயர் கொண்ட நாய் அவனுக்குத் துணையாக நின்று போராடி இரண்டு கள்வர்களைக் கடித்துப் பின்பு இறந்துபட்டது. கருந்தேவகத்தியின் பொருட்டும் நாயின் பொருட்டும் எடுத்தனூரில் நடுகல் நடப்பட்டது.

(3) முதலாம் மகேந்திர வர்மனின் 32 வது ஆட்சி ஆண்டில் பொன்மோதனூர் என்பவரின் சேவகன் ஆகிய வின்றண் வடுகன் (காட்டிலிருந்து நாட்டில் புகுந்து துன்பம் செய்த) புலியைக் குத்திக் கொன்று தானும் இறந்துபட்டான். அவன் நினைவாக மோத்தககல் என்ற ஊரில் நடுகல் நடப்பட்டது.

வரலாற்றுண்மை: முந்தைய வரலாற்றாசிரியர்கள் மகேந்திரவர்மன் 30 ஆண்டுகள் அரசாண்டதாக முடிவு செய்திருந்தார்கள். ஆனால் மகேந்திரன் 34 ஆண்டு வரை ஆண்டதாக எடுத்தனூர் நடுகல்லும், 39 ஆண்டு வரை ஆண்டதாகச் செங்கம் நடுகல்லும் தெரிவிக்கின்றன. இதனால் வரலாற்றாசிரியர்களின் முடிவில் மாற்றம்செய்ய வேண்டியுள்ளது அதாவது மகேந்திரனின் கி. பி ஆண்டில் மாற்றம் செய்ய வேண்டும். அல்லது சோழரைப் போலவே பல்லவரும் இளவரசனாக இருந்தது முதற்கொண்டு ஆட்சியாண்டைக் குறித்துக் கொண்டார்கள் என்று கொள்ளவேண்டும்.

மேலும், ஒரு ஊரினர் பக்கத்து ஊரிற்சென்று ஆன்தொறு அல்லது எருமைத்தொறுக்களைக் கவர்ந்தார்கள் என்றும், கள்வர்கள்கூட அவ்வாறே கவர்ந்தது உண்டு என்றும், அவைகளை மீட்கப் போராடி உயிர் நீத்த மறவர்களும் உண்டு என்றும் அவர்க்கு உதவியாக நாய்கள்கூடப் போராடி உயிர் விட்டன என்றும், காட்டிலிருந்து நாட்டில் புகுந்து நலிவு செய்த புலிமுதலிய கொடிய விலங்குகளோடு சிலர் போராடி அவற்றைக் கொன்றும் தாமும் உயிர் விட்டது உண்டு என்றும் அவ்வீரர்களைப் பாராட்டி நடுகல் நட்டு வழிபட்டதோடு நாய்களுக்குங் கூட நடுகல் நட்டிருக்கிறார்கள் என்றும் பல்வேறு வரலாற்றுச் செய்திகளும் தெரிய வருகின்றன.

39. சின்னையன் பேட்டை நடுகல்லால் தெரியவரும் செய்தியினை வரைக.

வயிர மேக வாணகோ வரையர்க்குக் காரிப் பெருமான் என்பவன் சேவகனாக இருந்தான். இவன் மீ கொன்றை நாட்டில் உள்ள மலையனூரில் வாழ்ந்த செம்பத் தொண்டன் என்பவனின் மகனாவான். கம்பவர் மனின் 3ம் ஆட்சி யாண்டில் பாசாற்றூர் எருமைத் தொறுவை எயின் நாட்டார் கவர்ந்து ஓட்டிச் சென்றனர். அதனை மீட்பதற்காகப் பாசாற்றூரார் பூசலிட்டனர் பாசாற்றூரார்க்குத் துணையாகக் காரிப்பெருமான் வந்தான். அதற்குள் கோவூர் நாட்டுச் சிற்றிடையாற்று முது கொன்றைத் திருப்பத்தில் உள்ள மீமலை அயங்கயம் என்ற குளத்தின் கரை வரை எருமைத் தொறுவை எயின் நாட்டார் ஓட்டிச் சென்று விட்டனர். அந்தக் குளத்தின் கரையில் எயின் நாட்டாரைக் காரிப் பெருமான் எதிர்த்தான். முதலில் விற்போர் செய்தான். அம்பறாத் தூணியில் உள்ள எல்லா அம்புகளும் தீர்ந்து விட்டன. ஆகவே தன் இடுப்பில் இருந்த வாளை உருவிப் பகைவர் மீது பாய்ந்து போரிட்டான். இறுதியில் காரிப்பெருமான் இறந்தான். அவன் நினைவாகச் சின்னையன் பேட்டையில் ஒரு நடுகல் நடப்பட்டது.

அன்று நடந்த போரை நம் கண் முன் இன்றுநடப்பதுபோல வருணித்துக்காட்டும்சிறப்பு இந்த நடுகற்கல்வெட்டில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

39. திருவாமூர் நடுகல் அறிவிக்கும் செய்தியை விளங்க வரைக.

கம்பவர்மனின் 20 ம் ஆட்சி ஆண்டில், நாகன் ஒக்கதிந்தன் என்பவன் பிடாரித் தெய்வத்தின் முன் னின்று, "ஆனிரை கவரும் போது பட்டை பொத்தனுகிய ஊருக்கு வெற்றி கிடைக்க வேண்டும்; அவ்வாறு வெற்றி கிடைத்தால் என் உடம்பை அரிந்து நவகண்டம் தருகிறேன்" என்று நேர்ந்து கொண்டான். அவ்வாறே வெற்றியும் கிடடியது. எனவே நாகன் ஒக்க திந்தன், "படடை பொத்தனுகிய ஊர் மேலான தவம் செய்தது" என்று சொல்லித் தான் நேர்ந்து கொண்டபடி பிடாரி தெய்வத்துக்கு முன் வந்து தன் உடம்பினை அரிந்து நவகண்டம் கொடுத்தான். பிறகு குன்றம் போன்ற தனது தலையை அரிந்து பலிபீடத்தின் மேல வைத்தான்.

இவ்வருஞ் செயலைக் கண்ட திருவான்மூரார் தமது ஊரில பறை கொட்டு வித்து அவ்வீரனது உடலைக் கற்குவியலால் மூடி கல்மேடு செய்தார்கள் பிறகு பட்டை பொத்தனில் வாழும் பொத்தனங்கிழவர்கள் அவனது ஆவிக்கு வழிபாடு செய்வதறகாகத் தொறுப் பட்டி என்ற நிலத்தையும் கொடுத்தார்கள். பிறகு அவ் வீரனுக்காகத் திருவான் மூரில் ஒருநடுகல் நடப் பட்டது. அந்த நடுகல்லில் இச் செய்திகளைப் பொறித் தார்கள். அதற்கு மேலாக "இந்தத் தர்மத்தை யாரேனும் அன்றென்று மறுப்பாராகில் அவர்கள் கங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக் காவதப் பரப்பில் செய்தார் செய்த பாவத்தில் படுவாராக" எனக் காப்புரை வரையப் பெற்றது அதற்குப் பின் "அங்ஙனம் அன்று என்று மறுத்தவர்கள் அந்நாளில் ஆளும் அரசனுக்குக் காற்பொன் தண்டம் கொடுக்க வேண்டும்" என்ற நிபந்தனையும் வரையப் பெற்றது.

[நவகண்டம் என்பது உடம்பிலிருந்து உடனுக்கு உடன் அரிந்து கொடுக்கும் புதிய சதைத்துண்டு என்று பொருள்படும். தொறுப்பட்டி என்பது தொறுக் கவர்ந்து வந்த வீரனுக்குக் கொடுக்கப்படுகிற இறை யிலிநிலமாகும்.]

40. தகடூர் நடுகல்லினின்று அரிமிதைய மாவலி வாணரா யரின் செய்தியாக அறியப் படுவதென்ன?

அரிமிதைய மாவலி வாணராயர் என்பவர் கங்க நாடு, புறமலை நாடு, கோயினூர் நாடு, கோவூர் நாடு, தாயனூர் நாடு, பற்ற நாடு என்பவற்றை ஆண்டுவந் தார். நுளம்பன் என்பவன் அவருக்கு உறவினன்போல நடித்து அவரது மகளையும் மணந்து கொண்டான். பிறகு அவரை வஞ்சித்து நாட்டைக் கவர்ந்து கொண் டான். வாணராயர் நுளம்பனோடு செய்த போரில் இறந்து விட்டார்.

அச்சமயம் வாணராயரது தேவிமார் கருவுற்றிருந் தார். ஆகவே வாணராயரது சேவகனாகிய சங்கர குட்டியார் அத்தேவிமாரை மறைவிடத்தே வைத்துக் காப்பாற்றி வந்தார். அத்தேவிமார் ஆண்பிள்ளை பெற்ற பிறகு சங்கர குட்டியார் படைதிரட்டித் தகடூருக்குள் புகுந்து நுளம்பன் சேனையை எதிர்த்துத் துணிவுடன் போரிட்டு நாட்டைக் கைப்பற்றினார். ஆனால் அவரோடு துணையாக நின்று போரிட்ட நாகந்தை சிறுகுட்டியார் தகடூரில் இறந்து விட்டார். எனவே நாகநதை சிறு குட்டியாரின் நினைவாக ஒரு நடுகல் நடப்பட்டது.

41. முதலாம் இராசேந்திரனின் திருவையாறு கல்வெட்டு கூறுவதென்ன? (79Ap)

முத்தான பொன்நங்கை என்பவள் முதலாம் இராசேந்திரனின் நம்பிராட்டியான திரைலோக்கிய முடையார்க்கு அதிகாரிச்சியாக இருந்தவள். இவள் இராசேந்திரனது 3ம் ஆட்சி ஆண்டில் திருவையாற்றுத் தென்கயிலாயமுடையார் கோயிலில் உள்ள ஆடவல் லார்க்கும், ஆடவல்லாரின் நம்பிராட்டியார்க்கும்

(நடராசர்க்கும் சிவகாமிக்கும்) சாத்தியருளச் சில அணி கலன்களை வழங்கினாள்.

விபரம்: இவள் ஆடவல்லார்க்குத் திருக்கழுத் துக்குச் சாத்தியருளச் சண்பங்காறை ஒன்று அளித் தாள். அதிற்கட்டின மாணிக்கம் ஒன்றும் வயிரம் இரண்டும் உட்பட நிறை 6 கழஞ்சு, 1 மஞ்சாடி, 5மா.

மேலும்கைக்குச் சாத்தியருளத் திருக்கைக்காறை நான்கு அளித்தாள். ஒன்றின் நிறை இருகழஞ்சாக நான்கின் நிறை 8 கழஞ்சு.

மேலும் காலுக்குச் சாத்தியருளத் திருக்காற்காறை இரண்டு அளித்தாள். ஒன்றின் நிறை முக்கழஞ்சாக இரண்டின் நிறை 6 கழஞ்சு.

ஆக ஆடவல்லார்க்குக் கொடுத்த அணிகலன் களின் கூடுதல் நிறை 20 கழஞ்சு 1 மஞ்சாடி 5 மா.

மேலும் இவளே ஆடவல்லாரின் நம்பிராட்டி யார்க்குச் சாத்தியருள ஒற்றைத்தாலி ஒன்று கொடுத் தாள். 19 மணிகளை உடைய சங்கு ஒன்றும், கொக்கு வாய் ஒன்றும், படுகண் ஒன்றும் கோத்தநாண் உட்பட நிறை 3½ கழஞ்சு 2 மஞ்சாடி 5 மா.

மேலும் காதுக்குச் சாத்தியருள நாரைக்கண்பட்டி இரண்டு கொடுத்தாள். இவற்றின் நிறை ½ கழஞ்சு 4 மஞ்சாடி 5 மா.

ஆக நம்பிராட்டியார்க்குக் கொடுத்த அணிகலன் களின் கூடுதல் நிறை 4 கழஞ்சு 7 மஞ்சாடி.

[குறிப்பு 10 மா கொண்டது ஒரு மஞ்சாடி. 20 மஞ்சாடி கொண்டது 1 கழஞ்சு.]

42. கல்வெட்டுகள் உரைநடையாக மட்டுமின்றிச் செய்யுள் வடிவாகவும் அமைந்துள்ளன என்பதற்குச் சில சான்றுகள் தந்து விளக்குக.

1. பழமங்கலம் நடுகல் கல்வெட்டு

வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச
சாய்த்தமகன் வென்ற சயம்பெருகச்—சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரடிக்குலச்
சொக்கனேந்த லேஉலகிற் காண்.

விளக்கம்: ஈரோட்டிற்கு 15 கல் தொலைவில் பழமங்கலம் என்ற ஊர் உள்ளது. அவ்வூரில் உள்ள வேடன் கோவில் நடுகல்லில் மேற்கண்ட பாடல் பொறிக்கப் பட்டிருக்கிறது.

கரடிகுலத்தில் பிறந்த சொக்கன் ஏந்தல் என்பவன், புகழ்மங்கலம் என்ற ஊரிலே வந்து எதிர்த்த பகைவரை வென்றான். ஆயினும் அப்போரில் அவன் வீரமரணம் எய்தினான். அவன் வென்ற வெற்றி மேம்பட்டதால் அவனது சிறந்த புகழ் நிலைநிற்கும் வண்ணம் அவன் கல்லிலே பொறிக்கப்பட்டான்—இச்செய்தி அப்பாடலால் உணர்த்தப்படுகிறது.

கல்வெட்டிலே குறிக்கப்பட்ட புகழ்மங்கலம் என்பது தற்போது பழமங்கலம் எனத்திரிந்து வழங்குகிறது. மாற்றலர்-பகைவர். சாய்த்தல்-வெற்றிகொள்ளுதல். நிற்கும் வண்ணம் என்பது, எதுகை நோக்கி நிக்குவணம் எனத் திரிந்துள்ளது. கரடிகுலம் என்பது அந்த வீரனின் குடிப்பெயர். நடுகல் கல்வெட்டுகளில் இது ஒன்று மட்டும் தான் செய்யுள் வடிவில் அமைந்திருக்கிறது. இதன் எழுத்தமைதி நோக்கி இதன்காலம் கி. பி. 13 அல்லது 14 ம் நூற்றாண்டு எனக் கருதப் படுகிறது.

2. திருவெள்ளறைக் கல்வெட்டு

ஸ்ரீ கண்டார் காணு உலகத்திற்
காதல் செய்து நில்லாதே
பண்டே பரமன் படைத்தநாள்
பார்த்து நின்று நையாதே

தண்டார் மூப்பு வந்துன்னைத்
　　தள்ரச் செய்து நில்லாமுன்
உண்டேல் உண்டு மிக்கது
　　உலகம் அறிய வைம்மினே.

விளக்கம்: திருவெள்ளறை என்ற ஊரில் ஸ்வத்திகா வடிவில் ஒரு கிணறு உள்ளது. இக்கிணற்றின் சுவரில் உள்ள கல்வெட்டிலிருந்து இக்கிணறு தந்திவர்ம பல்லவன் காலத்தில் ஆலம்பாக்கத்து விசைய நல்லூழான் தம்பி கம்பன் அரையன் என்பவனால் அமைக்கப்பட்டது என்றும், இதற்கு மாற்பிடுகு பெருங் கிணறு என்று பெயரிடப்பட்டது என்றும் தெரிகிறது. இக்கல்வெட்டின் கீழே மேற்கண்ட பாடற் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

மெய்ப்பொருளைக் கண்டறிந்த பெரியவர்களால் நிலைப் பொருள் என்று ஏற்றுக்கொள்ளப்படாத உலகத்தின் பேரில் நீ ஆசைவைத்து நிற்காதே, முன்பே இறைவன் படைத்த ஆயுட்காலமானது நிறைய உள்ளது என எதிர்பார்த்துக் கொண்டு நீ மனம் வருந்தாதே. ஊன்றுகோலை உடைய மூப்பு வந்து உன்னைத் தளரச் செய்வதற்கு முன்பாகவே நீ தர்மம் செய்தது உண்டானால் உனக்கு மோக்ஷம் உண்டு; அல்லது நீ பாவம் செய்தது உண்டானால் உனக்கு நரகம் உண்டு. எனவே இவற்றுள் மேற்பட்டதான தர்மத்தை உலகம் அறியும்படி செய்து வைப்பாயாக. (இந்த அறவுரை இச் செய்யுளால் உணர்த்தப்படுகிறது.)

இச்செய்யுளின் முன் ஸ்ரீ என்ற மங்கலச் சொல் சேர்க்கப்பட்டிருக்கிறது. நில்லாதேய், பண்டேய், னையாதேய், வைம்மினேய் என்று யகர ஒற்று ஒன்று ஏகார ஈற்றின் முன் தேவையின்றி அதிகப்படியாக எழுதப்பட்டிருக்கிறது. (இவ்வடிவம் கல்வெட்டின் மூலப்படியில் உள்ளது.) இங்ஙனம் யகர ஒற்றுச் சேர்க்கும் வழக்கை சில செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் காணலாம். இக் கலவெட்டின் காலம் ஏறத்தாழக் கி. பி. 800.

3. திருத்தணிக் கல்வெட்டு

திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசர்க்குக்
கருங்கல்லால் கற்றளியா நிற்க—விரும்பிய
நற்கலைகள் எல்லாம் நவின்றசீர் நம்பிஅப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து.

விளக்கம் : திருத்தணியில் வீரட்டானேஸ்வரர் கோயில் என்ற மாடக்கோயிலில் மேற்கண்ட பாடல் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

நல்ல கலைகளை எல்லாம் பயின்ற சிறப்புடையவன் நம்பி அப்பி என்பவன். அவன் திருத்தணியில் சிவ பெருமானுக்குக் கருங்கல்லால் கற்றளியாக நிற்கும்படி ஒரு கோயிலை மனம் விரும்பி அழகாக அமைத்தான்.— இச்செய்தி இக் கல்வெட்டால் உணர்த்தப்படுகிறது.

இக் கல்வெட்டுப் பாடலின் கீழே "இவ்வெண்பா பெருமானடிகள் தாம் பாடியருளித்து" என்ற தொடர் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கிறது. பெருமானடிகள் என்பது அபராஜித வர்ம்ம பல்லவனைக் குறிக்கும் என்றும் அவனால் இப் பாடல் பாடப்பட்டது என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள்.

43. சோழர்காலக் கல்வெட்டுப் பாடல்கள் இரண்டை எழுதிப் பொருளும் விளக்கமும் தருக.

1. சோழர்காலக் காங்கேயன் கல்வெட்டு

வண்டறைதார் மன்னர் மலைபடைத்தென் ?
மன்னரை வெங்
கண்டதிறற் காங்கேயன் கண்சிவப்பப் பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மால்வரை செஞ் சோரி
அலைகடாம் பாட்டுண் டது.

இதன் பொருள் : பகை மன்னரைப் புறங்கண்ட ஆற்றல் மிக்க காங்கேயன் என்பவன் கண் சிவந்த அளவில், முன்னர்ச் சங்க காலத்தே மலைபடுகடாம் என்ற பாடலைப் பெற்ற பெரியமலை இப்போது சிவந்த

குருதி அலைகள் தாவும் தன்மை உடைத்தாயிற்று. எனவே வண்டொலிக்கும் மாலையணிந்த மன்னர் மலையரண் பெற்றதால் என்ன பயன்? (மலையரண் பெற்றும் பயனில்லை என்பதாம்)

விளக்கம் : சங்க காலத்தில் செங்கண்மா என்று அழைக்கப்பட்ட ஊர் தற்போது செங்கம் என்று வழங்குகிறது. இவ்வூரில் உள்ள ரிஷபேஸ்வரர் கோயிலில் மேற்கண்ட கல்வெட்டுப் பாடல் பொறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வூரில் உள்ள நவிரம் என்ற மலையைச் சங்க காலத்தில் மலைபடுகடாம் என்ற பாடல் சிறப்பித்துப் பாடியிருக்கிறது. மலைபடுகடாம் என்ற சங்க இலக்கியத்தின் பெயர் இக் கல்வெட்டில் வந்திருப்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும். அலைகடாம் பாட்டுண்டது என்ற வரியை அலைகளா தாம்பாடு உண்டது என்று பிரித்து அலைகள் தாவும் தன்மை உடையதாயிற்று என்று பொருள் கொள்ளவேண்டும். இக்கல்வெட்டின் காலம் 12 அல்லது 13-ம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

2. சோழர்கால நரலோக வீரன் கல்வெட்டு

தில்லையில் பொன் னம்பலத்தைச்
செம்பொனால் மேய்ந்து, வான்—
எல்லையைப் பொன் னாக்கினான்
என்பரால்—ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம்
வாங்கவேல் வாங்கும்
குடைவேந்தர் தொண்டையார் கோ.

இதன் பொருள் : வடதிசையில் உள்ள மன்னரது செல்வங்களை எல்லாம் விரைவிலே கைக் கொள்வதற்காகத் தனது வேலை உயர்த்திப் பிடிக்கின்ற குடைவேந்தனும், தொண்டை நாட்டாரது தலைவனும் ஆகிய நரலோக வீரன் என்பவன், சிதம்பரத்தில் பொன்னம்பலத்தைச் செம்பொற்றகடுகளால் வேய்ந்தான். (அத்தகடுகளின் ஒளி பரவுதலால்) வானத்தின்

(தேவலோகத்தின்) எல்லையையும் பொன்னுக்கிவிட்டான் என்று (அவனது அறப்பணியை அறிந்தோர்) கூறுவார்கள்.

விளக்கம் : முதலாம் குலோத்துங்கனின் சேனுதிபதிகளில் ஒருவனுக விளங்கியவன் நரலோகவீரன். இவன் சமயப்பற்று மிக்கவன். தில்லையிலும் திருவதிகையிலும் பல திருப்பணிகளைச் செய்துள்ளான். அவனது திருப்பணிகளை அறிவிக்கும் கல்வெட்டுப் பாடல்கள் இவ்விரண்டு கோயில்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. அங்ஙனம் தில்லையில் பொறிக்கப்பட்டவற்றுள் ஒன்று தான் மேற்கண்ட பாடல்.

44 மெய்க்கீர்த்தி என்பதை நன்கு விளக்கம் செய்க.

மெய்க்கீர்த்தி என்றுல் உண்மையான புகழ் என்று பொருள்படும். பெரும்பாலான கல்வெட்டுகளில் மங்கலச் சொல்லுக்குப்பின் மெய்க்கீர்த்தி என்ற பகுதி காணப்படுகிறது. இது செய்யுள் நடையில் அமைந்திருக்கும் இது தமிழ் மொழியில் அமைந்திருந்தால் மெய்க்கீர்த்தி என்றும் வடமொழியில் அமைந்திருந்தால் பிரஸஸ்தி என்றும் கூறப்படும்.

முதலாம் இராசராசன் காலத்துக்கு முற்பட்ட கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி காணப்படவில்லை. அவன்காலத்துக்கு முற்பட்ட செப்பேடுகளில் பிரஸஸ்தி காணப்படுகிறது. முதலாம் இராசராசன்தான் முதன் முதலில் (தமிழில்) மெய்க்கீர்த்தி வரையும் வழக்கத்தை உண்டாக்கினுன். அவனுக்குப பின் வந்த சோழர்களும் பாண்டியர்களும் அவ்வழக்கத்தை மேறகொண்டார்கள்.

ஒவ்வொரு மன்னரின் மெய்க்கீர்த்தியும் ஒரு குறிப்பிட்ட தொடராலேயே தொடங்கும் சில மன்னர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மெய்க்கீர்த்தித் தொடக்கங்கள் இருக்கின்றன. இதனுல் அம்மெய்க்கீர்த்தித் தொடக்கத்தைப் பார்த்தவுடனேயே இது இன்ன அரசனுடையது என்று தெரிந்து கொண்டு விடலாம்.

மெய்க்கீர்த்திகள் மன்னனின் ஆட்சி ஆண்டு வளர வளரத் தாமும் வளர்ந்துகொண்டே செல்லும். இதனுல் ஒரு மன்னனின் காலத்து நிகழ்ந்த பல செயல்களில் எவ்வெச்செயல் எந்தெந்த ஆண்டில் நடந்தது என்று வரிசைப்படுத்தி அறிந்து கொள்ள முடிகிறது.

"சீர்நான் காகி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத்து அவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயறபெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறம்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி"

என்று மெய்க்கீர்த்தியின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் என்ற நூல் எடுத்துரைக்கிறது. அதாவது மெய்க்கீர்த்தியானது ஒவ்வொரு அடியிலும் நான்கு சீர்களைப் பெற்று வரும்; இரண்டிரண்டடியாக எதுகை முதலிய தொடை பெற்றுவரும்; வேந்தனது உண்மை யான புகழையெல்லாம் எடுத்துக்கூறும்; இறுதியில் அவனது வரலாற்றைக் கூறும்; அதன்பின் அவனது மனைவியர்கள் இன்னின்னுர் என்று சொல்லி அவர்க ளோடு வாழ்க என்று சொல்லும்; அதன்பின் மன்னனது இயற்பெயரையும் ஆட்சி ஆண்டையும் எடுத்து ரைக்கும்.

மெய்க் கீர்த்திக்கு இவ்வாறு இலக்கணம் கூறப் பட்டிருந்தாலும் இவையாவும் எல்லா மெய்க்கீர்த்தி யிலும் பின்பற்றப்படவில்லை. இவற்றுள் சில கூறப் படாமலும் விடப்பட்டுள்ளன. பிற்காலத்தில் உண்மை யான புகழுடன் சில புனைந்துரைகளும் இடம் பெற்று விட்டன.

சோழர்களின் மெய்க்கீர்த்திகள் அவ்வம் மன்னரின் செய்திகளை மட்டுமே அவருடையனவாகக் கூறு கின்றன. ஆனுல் பாண்டியர்களின் மெய்க்கீர்த்திகளில் ஒரு சில அவ்வம் மன்னரின் செய்திகளோடு முன்னேர் செய்திகளை அவருடையனவாகப் புனைந்து கூறு கின்றன.

சில மெய்க் கீர்த்திகளில் மன்னரின் மனைவியர் பெயர்களேயன்றி அம்மன்னரின் தம்பிமார், பிள்ளைகள் பேரன்மார் பெயர்களும் அவர் ஆட்சி செலுத்திய இடங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

ஒரு சில மெய்க்கீர்த்திகள் சிறந்த இலக்கிய நயத்தோடு விளங்குகின்றன. இவைகள் எல்லாம் அவ்வக் காலத்திருந்த அவைக்களப் புலவர்களால் இயற்றப் பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

விஜய நகர மன்னரது கல்வெட்டுகளில் மெய்க் கீர்த்திப் பகுதி காணப்படவில்லை. அம்மன்னர்கள் தம் பெயருக்கு முன் படோடாபமான விருதுகளை மட்டுமே குறித்துக் கொண்டுள்ளார்கள்.

45. இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்தியில் காணும் சிறப்புக்களை எடுத்தெழுதுக.

இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்திச் சிறப்பு

(1) "பணி அணைமிசைப் பரஞ்சோதி பாற்கடல் நின்று எழுந்தருளி மணிநெடுமுடி கவித்து நெடுமண் மடந்தையைக் கைப்பிடித்து...விழுந்த அரிசமயத் தையும் மீள எடுத்து" என்ற மெய்க்கீர்த்திப் பகுதியில் "திருமாலே இராசராசனாக அவதாரம் செய்துள்ளார்" என்ற சிறப்புப் புலப்படுத்தப் பட்டிருக்கிறது.

(2) "தந்தையிலோர்க்குத் தந்தையாகியும் தாயி லோர்க்குத் தாயாகியும் மைந்தரிலோர்க்கு மைந்த ராகியும் மன்னுயிர்கட்கு உயிராகியும்" என்ற மெய்க் கீர்த்திப் பகுதியில் "இராசராசன் தன்னாட்டு மக்களை எல்லாம் தன் உறவினர்களைப் போலவே பேணினன்" என்று சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது.

(3) "இவன் காக்கும் திருநாட்டில் மால்யானையே பிணிப்புண்பன; மணிச்சிலம்பே அரற்றுவன; ஓடையே

கலக்குண்பன; தேமாவே வடுப்படுவன; மலரே கடிய வாயின; புனலே சிறைப்படுவன'' என வரும் மெய்க் கீர்த்திப் பகுதியில் 'இவனுடைய நாட்டில் குற்றங் குறையுடையார் எவருமே இல்லை'' என்பது சிலேடை யணி அமைய மிக நயமாகக் கூறப்பட்டிருக்கிறது.

(4) இராசராசனால் தோற்கடிக்கப்பட்ட கன்னடர், காலிங்கர், தென்னவர், சிங்களர், கைகயர், கொங்கணர் கூபகர், காசிபர், காம்போசர், கோசலர் முதலான மன்னர்கள் கோபுரக் கொற்ற வாசலில் வந்தீண்டிக் காத்துக் கிடந்தனர் என்று அரசியற் சிறப்பும் மெய்க் கீர்த்தியில் கூறப்பட்டிருககிறது.

(5) இராசராசனுக்குப் புவனமுழுதுடையாள், தரணி முழுதுடையாள், முக்கோக்கிழான் அடிகள், அவனிமுழுதுடையாள், தென்னவன் கிழானடிகள் என ஐந்து மனைவியர் இருந்தனர் என்பதும், இவர்களில் புவனமுழுதுடையாள் என்பவள் சூளாமணிரத்னம், சிந்தாமணி மகாரத்னம், சோழ குலரத்னம் என்று புகழப்பட்டாள் என்பதும் அவளே பட்டத்தரசியாக விளங்கி இராசராசனோடு வீரசிம்மாசனத்தில் வீற்றிருந் தாள் என்பதும், இனி அடுத்தவளான தரணிமுழுதுடை யாள் என்பவள் வையகம் ஏத்தும் சமந்தகமணி, மாதவன் புனைகவுத்தவமணி, தையலார்க்கொரு சூளாமணி, சதுர்வேத சிந்தாமணி என்று புகழப் பட்டவள் என்பதும் மெய்க்கீர்த்தியால் தெரிய வருகின்றன.

(6) முத்தமிழ்க்கும் தலைவன், மூன்றுலகின் முதல்வன், கனகளபராஜன், சனநாதன், தரணிபாலன், ராஜபண்டிதன், பரகேஸரிபன்மன், திரிபுவனசக்கர வர்த்திகள் என்ற சிறப்புப் பெயர்கள் இராசராசனுக்கு வழங்கின என்பது மெய்க்கீர்த்தியால் அறியப் படுகிறது

46. சடையவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தியைப் பற்றி விளக்கம் தருக.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் கி பி 1251 முதல் 1270 வரை ஆாசாண்டவன்; பொத்தப்பி நாடு முதல் குமரிமுனைவரைத் தன் ஆளுக்கைக்குக் கொண்டு வந்தவன்; அதனால் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியன் என்று புகழப்பட்டவன். இவனுக்கு நான்கு வகையான மெய்க்கீர்த்திகள் உள்ளன. அவற்றுள் பூ மலர் வளர்திகழ் எனத் தொடங்குவது மிகவும் நீளமானது.

பூமலர் வளர்திகழ் என்னும் மெய்க்கீர்த்தியில் சொல்லப்பட்ட சிறப்புகள் வருமாறு:—

1. சுந்தரபாண்டியனது மார்பிலே திருமகள் கூடினாள். 2. அவனது மனத்திலே கலைவஞ்சி உறைந்தாள். 3 அவனது தோளிலே வரை மடந்தையான கொற்றவை வாழ்ந்தாள். 4. அவனது கழுத்திலே இந்திரன் அளித்த ஆரம் விளங்கியது.

5. அவனது புகழ் வல்லிக் கொழுந்தின் செம்மையை வென்றது. (வெற்றியால் வரும் புகழ் செம்மை நிறமுடையது என்று கூறுவது புலவர் மரபு.) 6. திகிரிமலைக்கு அப்பாலும் அவனது ஆணை நடந்தது. 7. அவனது மணிக்கவிகை உலகமுற்றும் நிழல்தந்தது. 8. அவனது செங்கோல் கலியை (வறுமையை) நீக்கியது.

9. அவனது முரசாகிய முகிலின் முழக்கம் கேட்டுச் சேரனது சிலை, வானத்தில் வானவில்லாகச் சென்று விட்டது. 10. சோழனது புலி காட்டை அடைந்தது. 11. பாண்டியனின் கயல் இரண்டும் இமயமலையில் விளையாடின.

12. ஒருமை மனமும் இருபிறப்பும் முத்தீயும் நால்வேதமும் உடைய அந்தணர்களது ஐந்து வேள்விகளும் ஆறங்கத்துடன் சிறப்படைந்தன. 13 அருந்தமிழும் ஆரியமும் அறுசமய நெறியும் மனு நெறியும் தழைத் தோங்கின.

14. குச்சரர் ஆரியர் கோசலர் கொங்கணர் வச்சிரர் காசியர் மாகதர் அருமணர் சோனகர் அவந்தியர் முதலாய முடிவேந்தர்கள் திரையளந்தார்கள். **15.** சுந்தரபாண்டியன் தனது வடிநெடுவாளும் வயப்பெரும் புரவியும் தொடி நெடுந்தோளுமே துணையாகச் சென்று சேரனையும் அவனது படையையும் வென்று மலைநாட்டை அழித்தான். **16.** சூரிய மரபில் வந்த சோழனை (மூன்றும் ராசேந்திரனை) வென்று திறை கொண்டான். **17.** சோழ நாட்டில் கண்ணனூர் கொப்பத்தில் கோட்டைகட்டி ஆட்சி செலுத்திய போசள மன்னரைக் கோட்டையுள் அடைபடும்படி முற்றுகையிட்டான். அவரது சேனையும் சிங்கணன் முதலிய சேனைத்தலைவரும் அழியும்படி வென்று பொற்குவையும் மணியும் கவர்ந்தான்.

47. சுந்தர பாண்டியன் மெய்க்கீர்த்தியில் அமைந்த இலக்கிய நயங்களைப் புலப்படுத்துக.

சுந்தர பாண்டியனது மெய்க்கீர்த்தியின் இலக்கியநயம்

(1) "திகிரி வரைக் கப்புறத்துச் செழுந்**திகிரி** சென்றுலவ" என்பது சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியில் உள்ள ஒருவரியாகும். இந்தவரியில் "திகிரி மலைக்கு அப்பாலும் சுந்தரபாண்டியனது ஆணை சென்றது" என்ற செய்தி கூறப்படுகிறது. ஈண்டுத் திகிரி என்ற சொல் சக்கரவாளகிரி, ஆணை என்னும் இருபொருள்களில் திரும்பத் திரும்ப வருமாறு அமைக்கப்பட்டிருப்பதால் இப்பகுதி சொற்பின்வரு நிலையணி என்னும் இலக்கியச்சுவையைத் தருகிறது.

(2) "செம்முரசின் முகில்முழங்கச் சிலையகன்று விசும்படையத் திறல்புலி போய் வனமடைய" என்பது மெய்க்கீர்த்தியில் உள்ள மற்றொரு பகுதியாகும். இப்பகுதி சுந்தரபாண்டியனிடம் சேரரும் சோழரும் தோற்றார்கள் என்ற செய்தியை மிக நயமாகக் கூறுகிறது. அதாவது:— வானத்தில் ஒருவில் தோன்றுகிறதே! அது அங்கே எப்படி வந்தது தெரியுமா? பாண்டியனிடம் சேரன் தோற்றான்;

சேரன் கொடியில் எழுதப்பட்டிருந்த வில் தோற்றவனிடம் இருக்க விரும்பாமல் வானத்துக்கு வந்துவிட்டது. காட்டிலே போய்ப் புலிகள் ஏன் வாழ்கின்றன தெரியுமா? பாண்டியனிடம் சோழன் தோற்ருன்; சோழன் கொடியில் எழுதப்பட்டிருந்த புலி தோற்றவனிடம் இருக்க விரும்பாமல் காட்டுக்கு வந்து விட்டது. இங்ஙனம் தற்குறிப்பேற்ற அணி தோன்றும்படி இந்தமெய்க்கீர்த்திப் பகுதி அமைந் திருப்பது சிறந்ததோர் இலக்கிய விருந்தாகும்.

(3) "கயலிரண்டும் நெடுஞ்சிகரக் கனவரையில் விளையாட" என்பது மெய்க்கீர்த்தியில் உள்ள மற்ருெரு பகுதியாகும், இப்பகுதி, பாண்டியர்கள் இமயத்தை வென்று தமது கயல் முத்திரையை அங்கே பொறித் தார்கள் என்ற செய்தியைத்தான் நயமாகக் கூறுகிறது. அதாவது குளத்து நீரில் விளையாட வேண்டிய கயல்மீன்கள் மலைப்பாறையில் துள்ளி விளையாடின என்று முரண்பாடு தோன்றக் கூறியிருப்பது ஈண்டுள்ள இலக்கிய நயமாகும்.

(4) "ஒருமை மனத்து இருபிறப்பின் முத்தீயின் நால் வேதத்து அருமறையோர் ஐவேள்வி ஆறங்கமுடன் சிறப்ப" என்பது மெய்க்கீர்த்தியில் உள்ள இன்னுெரு பகுதியாகும். இப்பகுதியில் எண்ணலங்காரம் அமைந் துள்ளது. அதாவது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்ற எண்கள் வரிசையாக எடுத்தாளப் பட்டுள்ளன. ஒருமித்த மனத்தையும் இரண்டு பிறப்புக்களையும் முத்தீயினையும் நான்கு வேதங்களையும் உடைய அந்தணர்களது ஐந்து வேள்விகள் ஆறங் கத்துடன் சிறப்படைந்தன என்பது பொருள். (இருபிறப்பு—பூணூல் அணிவதற்கு முன்னும் அணிந்ததற்குப் பின்னுமாகிய இரண்டு நிலைகள், முத்தீ—காருகபத்தியம், ஆகவனீயம், தக்கிணுக் கினீயம். நால்வேதம்—ரிக், யசுர், சாமம், அதர்வணம். ஐவேள்வி—தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்ற ஐவரையும் பேணுதல். ஆறுஅங்கம்—

சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிடம்.)

[குறிப்பு: சுந்தர பாண்டியனது மெய்க்கீர்த்தி அவன் காலத்தில் அருந்தமிழ் தழைத்தோங்கியது. என்று குறிப்பிடுகிறது. அதற்கேற்ப அம்மெய்க் கீர்த்தியே தமிழ் மணம் கமழ அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க தொன்ருகும்.]

48. சோழர் மெய்க்கீர்த்தியைவிடப் பாண்டியர் மெய்க் கீர்த்திகள் தமிழ் நடையில் சிறந்து விளங்குகின்றன என்பதைச் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியைக் கொண்டு விளக்குக.

விடை: 47—ல் காண்க.

49. சதாசிவராயர் கல்வெட்டு கூறும் செய்திகளை விவரிக்க. (79 Sep.)

சதாசிவராயர் ஆட்சிக் காலத்தில் சகம் 1467 (கி. பி 1545) விசுவாவசு ஆண்டு பங்குனித் திங்கள் சுக்கிலபட்சத்துச் சப்தமியும் திங்கட் கிழமையும் பெற்ற ரோகணி நாளில் அவுக்குத் திருவேங்கடய்யங் காரால் ஸ்ரீரங்கத்தில் ஒரு கல்வெட்டு வெட்டப்பட்டது. அக் கல்வெட்டில் நாராயண ஜீயர் தந்த நிலமும், வெள்ளத்தடுப்பு நடவடிக்கையும், சோழமன்னன் விசாரணையும், அவுக்குத் திருவேங்கடய்யங்காரின் செயலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

(1) **நாராயண ஜீயர் தந்த நிலம்:** தென் கரை இராஜகம்பீர வளநாட்டுத் தஞ்சாவூர் உசாவடி உறை யூர்க் கூற்றத்துக் கீழ்ப்பலாற்றுத் தேவதானத்துக்கு மேற்கும், திருச்சிராப்பள்ளி மண் கோட்டைக்கு வடக்கும், கிருஷ்ணராய அலவந்தபுரம் உறையூர் வெட்டிக்குக் கிழக்கும், திருக் காவேரிக்குத் தெற்கும் ஆன இந் நான் கெல்லைக்கு உட்பட்ட நிலத்தை நலந் திகழ் நாராயணஜீயர் என்பவர் திருவரங்கன் திருப்பதி பிடாகை என்று பெயரிட்டுத்தானமாக வழங்கினர்.

(2) **வெள்ளத்தடுப்பு நடவடிக்கை :** திருவரங்கன் திருப்பதிபிடாகையைத் திருக்காவேரியாற்றின் வெள்ளம் அழிக்கத் தொடங்கியது. இதையறிந்த நாராயணஜீயர் வெள்ளத் தடுப்புக்காகக் காவிரி யாற்றின் மேல் முகத்தில் ஆனைகாத்தான் கரைக்கு யந்திரஸ்தாபனம் செய்தார்; அங்கே சாஸ்தாவை (ஐயனுரை)ப் பிரதிஷ்டை செய்தார்; காவிரியி லிருந்து கிழியாறு வெட்டிக் காவிரியாற்றை மலடு செய்வித்தார் (வெள்ளங் குறையச் செய்தார்); கிழியாருகிய மலடனுறு கெடும்படி அதன் வடகரை யில் நாணல் நட்டுத் தென்கரையில் நாணல் நடாமல் விட்டுவிட்டார். இதனுல் திருவரங்கன் திருப்பதி பிடாகை வெள்ளத்திலிருந்து தப்பியது. ஆனுல் கிழி யாற்று வெள்ளம் அதன் தென்கரையிலிருந்த சிந்தா மணிக் கிராமத்தை அழித்தது. எனவே சிந்தாமணிக் கிராமத்து மகாஜனங்களுக்குச் சிந்தாமணிக் கிராமத் துக்குப் பதிலாகக் கொளக் குட்டைக் கிராமத்தைப் பரிவர்த்தனை செய்து கொடுத்தார்.

(3) **சோழமன்னன் விசாரணை :** சிந்தாமணிக்கிராமத் திலிருந்த பிராமணர்கள் கொளக்குட்டைக் கிராமத் துக்குக் குடிபோனுர்கள். குடிபெயரும்போது அப் பிராமணர்களுக்குப் பலதுன்பங்கள் ஏற்பட்டன. இதனை அறிந்த சோழ மன்னன் நாராயண ஜீயரைத் தம்மிடத்துக்கு வருமாறு அழைப்பித்தான். ஜீயரை நோக்கி, "சந்நியாசியாகியவன் எல்லா உயிர்க்கும் நன்மை செய்ய வேண்டியவனுக வன்றோ இருக்க வேண்டும்; நீர் இப்படி பிராம்மண ஹிம்சை பண்ண லாமோ" என்று கேட்டான். அதற்கு ஜீயர், "பிராம்மண ஹிம்சை செய்யக் கூடாது என்று ஆணையிடுகிற கிருஷ்ண பிரானே நல்ல காரியத்தின் பொருட்டுச் செய்யப்படுகிற பாவமும் தர்மமாகவே கருதப்படும் என்று பகவத் கீதையில் சொல்லியிருப்பதை அறிந்து தான் யாமும் செய்தோம்" என்று விடை கூறினுர். அதைக் கேட்ட சோழன் மனம் மகிழ்ந்து "இதுவே ஜீயரின் நினைவானுல் அவரை விசாரணைக்கு அழைத்த

என்னுடைய பாவத்தைத் தீர்ப்பதற்குக் கழுவாயானது ஒரு அடி மண்ணுக்குக் கழஞ்சு பொன் பெறத்தகும்'' என்று சொல்லி ஸ்ரீரங்க நாதர்க்கு அப் பொன்னைத் தாரை வார்த்துக் கொடுத்தான். [இதற்குப் பிறகு சில காலம் கடந்தது.]

(4) **திருவேங்கடய்யங்காரின் செயல்:** நாராயண ஜீயர் காலத்தில் வெள்ளப் பாழாய்ப் போன சிந்தாமணிக் கிராமம் சில காலம் பண்டார வாடையாக (குடி பாத்திய முடைய ஊராக) இருந்து பிறகு திறந்து போன ஊராக (பலர்க்கும் பொதுவான ஊராக) மாறியது. இந்தச் சிந்தாமணிக் கிராமத்தின் தான மான்ய நிலம் நஞ்சை 7 வேலி 7 மாவும், புஞ்சை 6 வேலி 15 மாவும் ஆகும் இதன் மதிப்பு 146 பொன். அவுக்குத் திருவேங்கடய்யங்காரின் பிரிய சிஷ்யரான ஸ்ரீமன்மகா மண்டலேஸ்வர சதாசிவராயர் அவுக்குத் திருவேங்கடய் யங்காருக்கு இந்த நிலத்தை நத்தம் முதலானது உட்பட ஏகபோகமாகத் தாரை வார்த்துக் கொடுத்தார். ஆனால் திருவேங்கடய்யங்கார் அந்நிலத்தை நாராயணஜீயா முனபிட்ட கட்டளைபடி திருவரங்கப் பெருமாளுக்கே பொலியூட்டாக (விளை நெல்லை உண் பிக்குமாறு) சதாசிவராயரிடம் தர்மமாகக் கொடுத்து விட்டார்.

பிறகு பழுதுபார்த்துப் புதுப்பித்த அந்தச் சிந்தாமணிக் கிராமத்தின் தர்ம வருவாயைக் கொண்டு திருவரங்கப் பெருமாளுக்கு நாடோறும் நான்கு தளிகை அமுது செய்விக்க வேண்டும் என்றும், நிபந்தம் அளித் தவனின் பங்காக நாலில் ஒரு பாகமான ஒரு தளிகையை திருவேங்கடய்யங்காரின் சந்தான பரம்பரையார் சந்திர சூரியர் உள்ளவரை அனுபவிக்க வேண்டும் என்றும் மற்ற மூன்று தளிகைகளை ஸ்ரீ வைஷ்ணவர்கள் அமுது செய்ய வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார்.

50. கிருஷ்ணதேவராயரின் வெற்றியும் கொடையும்பற்றி விவரிக்க.

கிருஷ்ண தேவராயரின் வெற்றிச்சிறப்பு

கிருஷ்ண தேவராயர் ஒரு சமயம் திக்கு விஜயம் செய்யும் பொருட்டு விஜய நகரத்திலிருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்டார். உதயகிரியில் இருந்த கோட்டையை அழித்து அதன்தலைவனுன திருமலை இராகுத்தனைச் சிறைப் படுத்தினார். பிறகு வினிகொண்டை, வெல்லம கொண்டை, நாகார்ச்சுன கொண்டை, கொண்டை வீடு, கொண்டை பள்ளி, இராசமகேந்திரவரம் முதலான ஊர்களில் இருந்த கோட்டைகளை அழித்தார். பிரதாபருத்ர கஜபதியின் குமாரனுன வீரபத்திரனையும் பிரதாபருத்ர கஜபதியின் படைத் தலைவர்களான பிரகலாதன், சிரச்சந்திரன், மல்லூகான், உத்தண்டகான் முதலானவர்களையும் உயிரோடு பிடித்துக் கொண்டு பிரதாபருத்ர கஜ பதியைப் போரில் வெட்டிக் கொன்ருர். பிறகு சிங்காத்திரிக்குச் சென்று பொட்டுனூர் என்ற இடத்தில் வெற்றித்தூண் நிறுத்தினூர்.

கிருஷ்ண தேவராயரின் கொடைச்சிறப்பு

கிருஷ்ண தேவராயர் திக்கு விஜயமாகக் கிளம்பிப் பல இடங்களில் வெற்றிபெற்றுப் பொட்டுனூரில் வெற்றித்தூண் நிறுத்தியபின் கிருஷ்ணவேணியாற்றங்கரைக்குச் சென்ருர். சகம் 1439 (கி.பி. 1517) ஈஸ்வர ஆண்டு தைத் திங்கள் பௌர்ணமி நாளில் மகரசங்கராந்தி புண்ணிய காலத்தில் உண்டவல்லி என்ற ஊரில் உள்ள அநந்தசாயி சந்நிதியிலும், விசயவாடையில் உள்ள மல்லிகார்ச்சுன தேவர் சந்நிதியிலும் இருந்து கொண்டு தாரை வார்த்துச் சர்வமானியம் விடுத் தருமசாஸனராயசம் (கடிதம்) எழுதுவித்தார்.

அதாவது சோழ மண்டலத்தில் உள்ள திருச்சிராப் பள்ளி, திருவீங்கோய் மலை, சந்தலகை (செந்தலை), திருககாட்டுப் பள்ளி, திருமழபாடி, வல்லம், தஞ்சாவூர், நல்லூர், திருவாரூா, திருநகரி, திருவையாறு, திரு

வெழுந்தூர், இராசுராமப் பாளையம், திருவாஞ்சியம், திருப்புகலூர், திருப்பனந்தாள், திருநாங்கூர், தாடாளங்கோயில், சீர்காழி, அரிகண்டபுரம் உட்படவும், இரண்டாற்றுப் பற்றுச் சீமை, புவனேக வீரன் பட்டணச்சீமை, ராசராசேச்சுரச் சீமை, தஞ்சாவூர் சீமை, வீரமடக்குச் சீமை, வழுதலம் பட்டுச்சீமை, வழுவத்தூர் சீமை, பெரம்பூர்ச் சீமை, குழித்தண்டலைச் சீமை உட்படவும் விஷ்ணுஸ்தானம், சிவஸ்தானம் ஆகிய தேவஸ்தானங்கள் சோடி, சூலவரி, புறவரி, அரசப்பேறு, ஆயம், ஸ்தலஆதிக்கம் முதலான வரிகளாகத் தொன்றுதொட்டு அரண்மனைக்குக் கொடுத்து வருகிற பதினாயிரம் பொன்னையும் அந்தந்தத் தேவஸ்தானத்துக்கே தாரை வார்த்துச் சர்வமானியமாகக் கொடுத்தார். அந்தச் சர்வமானியத் தொகையைக் கொண்டு அந்தந்தத் தேவஸ்தானங்களில் பூசை புனஸ்காரமும், அங்கரங்க வைபோகமும், திருப்பணிகளும் செய்து கொள்ளச் சொன்னார்.

51. கீழ்வரும் கல்வெட்டுத் தொடர்களைப் பிழைநீக்கித் திருத்தமாக வரைக : (a) கல்ப்பமைய சாசநமு...நிறுத்தென; (b) செம்பர் மகன்னுன...சென்றுபட்டின. (79 Sep.)

(a) செப்பேட்டில் உள்ள வடிவம்

கல்ப்பமைய

சாசநமு மறையோலையுங் தனித்தனியேய் சமைப்

பித்து

பூசுரற்குக் குடுப்பித்திப் பூதலத்தென் புகழ்

நிறுத்தென

திருத்தமான வடிவம்

கற்பு அமையச்

சாசனமும் அறையோலையும் தனித்தனியே

சமைப்பித்துப்

பூசுரற்குக் கொடுப்பித்து இப்பூதலத்து என்புகழ் நிறுத்து என

விளக்கம் : கற்பு—கல்வி. சாசனம்—அரசனது ஆணை. அறையோலை—ஆணை நிறைவேற்றப் பறை அறைந்து எல்லை வரையறுத்து எழுதிய ஓலை. சமைப்பித்தல்—எழுதுதல். பூசுரர்—பூவுலகில் வாழும் தேவர். அதாவது அந்தணர். பூதலம்—உலகம். கல்விநலம் அமையும்படிச் சாசனத்தையும் அறையோலையையும் தனித்தனியாக விளங்கும்படி எழுதிப், பீதாம்பர பட்டனுகிய அந்தணனுக்கு உரிய இறையிலி நிலத்தையும் கொடுத்து உலகில் எனது புகழை நிலைநிறுத்துக என்று வீரபாண்டியன் சொன்னுன் என்பது கருத்து. இப்பகுதி சிவகாசிச் செப்பேட்டில் வந்துள்ளது.]

(b) **நடுகல்லில் உள்ள வடிவம்**

செம்பர் மகன்னுன காரிப்பெரு
மான்ணன் உரையிலம்புமாள எவ்விப்பத்திரமுருவி
எதிரே சென்று பட்டான்.

திருத்தமான வடிவம்

செம்பன் மகனுன காரிப்பெருமான் அண்ணன்
உறையில் அம்புமாள எவ்விப் பத்திரம் உருவி
எதிரே சென்று பட்டான்.

[**விளக்கம் :** உறை—அம்பருத்தூணி. மாள—அற்றுப்போக. எவ்வி—எதிர்முகமாகத் துள்ளிப் பாய்ந்து. பத்திரம்—உடைவாள். செம்பத்தொண்டனின் மகன் காரிப்பெருமான் அண்ணன் ஆவான். அவன் எயின் நாட்டோரோடு விற்போர் செய்தபோது அம்பருத்தூணியில் இருந்த அம்புகள் முற்றும் தீர்ந்து போனதால் பகைவர்மேல் துள்ளிப்பாய்ந்து உடைவாளை உருவிக் கொண்டு எதிரே சென்று போரிட்டு உயிர் நீத்தான் என்பது கருத்து. இப்பகுதி சின்னையன் பேட்டை நடுகல்லில் வந்துள்ளது.]

52. கீழ்வரும் கல்வெட்டுத் தொடர்களைப் பிழை நீக்கித் திருத்தி எழுதுக : (a) நொந்தா விளக்கினுக்காக...தனிச் செய்கெ ; (b) கணிய் நந்த ஸிரிய்குஅன்...சடிகன் செஇய பளிய்.

(a) செப்பேட்டில் உள்ள வடிவம்

நொந்தா விளக்கினுக்காக மெதுகின் மேற்பாற்
கீழூரில் நெடுமண்ணென்னுந் தோட்டம்
தென்னுட்டுக் கோனுயின சடையந் தனிச்செய்கெ.

திருத்தமான வடிவம்

நந்தா விளக்கினுக்காக முதுகின் மேல்பால்
கீழூரில் நெடுமண் என்னும் தோட்டம்
தென்னுட்டுக்கோன் ஆன சடையன் தன்
இச்சைக்கே.

[விளக்கம் : நந்தா விளக்கு — அணையாமல் தொடர்ந்து எரியும் விளக்கு; முதுகின் மேல் பால்— காலப் பழமையால் முதுமையுற்ற மேட்டு நிலம். கோன்—இடையன். பார்த்திவ சேகரபுரத்து விஷ்ணு பட்டாரகர் கோயிலில் நந்தாவிளக்கு எரிக்க நெய் தருவதற்காக, முதுமையுற்ற மேட்டுநிலமான கீழூர் என்ற ஊரில் உள்ள நெடுமண் என்ற தோட்டத்தைத், தென்னுட்டு இடையனுன சடையன் என்பன் தன் விருப்பப்படியே சந்ததி சந்ததியாகக் காராண்மையை அனுபவித்துக் கொண்டு மேற்பாதியை நந்தாவிளக்கிற்கு நெய்யாகக் கொடுக்க வேண்டும்.]

(b) விடை : 52-னுள் காண்க.

53. கீழ்வரும் கல்வெட்டுத் தொடர்களைப் பிழை நீக்கித் திருத்தி விளக்கமும் தருக : (a) விலைக்காணங்...அயிந்தேகால் பட்டி நிலமும்; (b) ஞகன் மகன்ளங்கீரன் (c) கொற்றந்தை ளஎய் முன்று.

(a) **செப்பேட்டில் உள்ள வடிவம்**

விலேக்காணங் கெயிக் கொடுத்துச்சி ... ணெ செயிது ஆயிரத்திரு நூற்றுக் குழிப்படியால் விற்றுக் கொண்ட நிலம் தளி எடுப்பதற்கு ஓடு சுடக் கொண்ட நிலம் தலெப்பாடகத்துள் சூளே மேட்டுப்பட்டியும ஊருள் மண்டகம் எடுத்த நிலத்தோடுங் கூட அயிந்தே கால்பட்டி நிலமும்.

திருத்தமான வடிவம்

விலேக்காணம் கைக்கொடுத்துச் சிலாவணே செய்து ஆயிரத்து இருநூற்றுக் குழிப்படியால் வீற்றுக் கொண்ட நிலம், தளி எடுப்பதற்கு ஓடுசுடக் கொண்ட நிலம் தலேப்பாடகத்துள் சூளேமேட்டுப் பட்டியும் ஊருள் மண்டபம் எடுத்த நிலத்தோடும் கூட ஐந்தேகால் பட்டி நிலமும்.

விளக்கம் : விலேக்காணம் — நிலத்து விலேக்குரிய பணம். சிலாவணே செய்து — எல்லேக்கல் இடுதல் செய்து. வீற்றுக் கொண்ட — வேருகப் பிரித்துக் கொண்ட. தளி — கோயில். ஓடு — செங்கல். தலேப் பாடகம் — முதலில் உள்ள நிலப்பரப்பு. சூளேமேடு — செங்கற் சூளேயிட்டதிடல். பட்டி — 1200குழி பரப் புடைய நிலம்.

விச்சாவினீத பல்லவரசன் விலேப்பணத்தை நிலத் துரிமையாளரது கையிலே கொடுத்து விட்டு, வாங்கப் பட்ட நிலத்தின் எல்லேக்கு எல்லேக்கல் இடுதலேச் செய்து "ஒருபட்டி நிலமானது 1200குழியுடையது" என்ற கணக்குப்படி வேருகப் பிரித்துக் கொண்ட நிலமானது, கோயில் கட்டுதற்குச் செங்கல் சுடக் கொண்ட நிலமாகத் தலேப்பாடகத்தில் உள்ள சூளேமேட்டுப் பட்டியும் ஊருக்குள்ளே பாரதம் வாசிப்பதற்கு மண்டபம் எடுத்த நிலமும் சேர்ந்து மொத்தம் $5\frac{1}{4}$ பட்டி நிலமாகும்.

(b) "ஞகன் மகன் எங்கீரன்"—என்பது கல் வெட்டில் உள்ள வடிவம், "நாகன் மகன் இளங்கீரன்"—என்பது திருத்தமான வடிவம்.

விளக்கம் : புகளூர் ஆர்நாட்டார் மலையில் வடபுறமுள்ள குகையில் இக்கல்வெட்டு இருக்கிறது. அக்குகையில் சில கற்படுக்கைகளும் இருக்கின்றன. இரண்டையும் ஒத்து நோக்கும் போது, "நாகன் என்பவனின் மகனுன இளங்கீரன் என்பவன் அங்குள்ள கற்படுக்கைகளைச் செய்து கொடுத்திருக்க வேண்டும்" என்ற செய்தி தெரிய வருகிறது. மொழிக்கு முதலில் வரலாகாத "ஞ" என்ற எழுத்து முதலில் எழுதப் பட்டிருக்கிறது. இது, நாகன் என்று எழுதத் தெரியாமல் ஞகன் என்று பிழையாக எழுதிய குற்றமாகையால் எழுதினேன் குற்றமே யாகும்; இலக்கணமரபாகாது. மகன் + இளங்கீரன் = மகனிளங்கீரன் எனவருவதே இலக்கணம். னகர ஒற்றின் முன்வந்த இகரம் கெட்டிருப்பது— (மகன்ளங்கீரன் என்று அமைந்திருப்பது) வேறு பல கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. எனவே இப்படி ஒரு இலக்கண மரபு அக்கால வழக்கில் இருந்தது போலும்.

(c) "கொற்றந்தை ளஎய் முன்று"— என்பது கல்வெட்டில் உள்ள வடிவம். 'கொற்றந்தை இளை மூன்று"— என்பது திருத்தமான வடிவம்

விளக்கம் : கொற்றந்தை என்பவனின் மகளாகிய இளை என்பவள் செய்து கொடுத்த முன்று அதாவது கற்படுக்கை என்ற செய்தியை இக்கல்வெட்டு அறிவிக்கிறது. கொற்றந்தை என்ற ஐகார ஈற்றின் முன் வந்த இளை என்ற சொல்லின் முதலிகரம் கெட்டிருக்கிறது. ளை என்ற ஒலி ள எய் என நீட்டி ஒலிக்கப்பட்டதால் கல்வெட்டில் ளஎய் என்ற வடிவம் எழுதப்பட்டது போலும். முன்று—முற்றம்; ஈண்டுக் கற்படுக்கையைக் குறிக்கிறது.

54. பாடப் பகுதிக் கல்வெட்டுகளின் வழிநின்று அக்கால நாட்டுப் பிரிவுகளை ஆராய்க.

பல்லவர்காலத்தில் கோட்டம், நாடு, ஊர் என 3வகையான நாட்டுப் பிரிவுகள் வழங்கின. வெண்குன்றக்

கோட்டத்துப் பெருநகர நாட்டு நாட்டார் எனவும், ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நீர் வேளூர் நாட்டுக் கூரம் எனவும் மணவிற் கோட்டத்துப் பன்மாநாட்டுப் பரமேச்சுர மங்கலம் எனவும் வரும் தொடர்களால் கோட்டமும் நாடும் ஊருமாகிய மூவகைப் பிரிவுகளை அறியலாம். பலஊர்கள் கொண்டது ஒரு நாடாகவும், பலநாடுகள் கொண்டது ஒருகோட்டமாகவும் கொள்ளப் பட்டன. கோட்டம் என்பது வள நாடு என்னும் நாட்டுப் பிரிவுக்குச் சமமானதே என்றாலும் பல்லவர் காலத்தில் வளநாடு என்ற சொல்லாட்சி இல்லை.

முற்காலப் பாண்டியர் காலத்தில் நாடு, ஊர் என இரண்டுவகையான நாட்டுப் பிரிவுகளே வழங்கின. நாடு என்னும் பிரிவு கூற்றம் என்ற சொல்லாலும் வழங்கிற்று. இச்செய்திகளை, ஆசிநாட்டதனிற்படும் திருமங்கலம் எனவும். புறத்தாய நாட்டு நற்றராயக்குடி எனவும், திருக்கானப்பேர்க் கூற்றத்துச் சிறு சேஷூர் எனவும் செப்பேடுகளில் வந்துள்ள தொடர்களால் அறியலாம். 10ம் நூற்றாண்டு முதல் வளநாடு என்ற பிரிவு பாண்டியரது கல்வெட்டுகளில் காணப்படு கிறது.

சோழர் காலத்தில் முதலாம் இராசராசன் காலத்துக்கு முன் நாடு, ஊர் என இரண்டு வகையான நாட்டுப் பிரிவுகளே வழங்கின. நாடு என்னும் பிரிவு கூற்றம் என்ற சொல்லாலும் வழங்கிற்று. முதலாம் இராசராசன், வள நாடு என்னும் நாட்டுப் பிரிவைப் புதிதாக வகுத்தான். பின் வந்தவர் காலங்களிலும் வள நாடு என்ற பிரிவும் இடம் பெற்றது. சோழர்கள் தொண்டை நாட்டைக் கைப்பற்றி அங்கு வழக்கிலிருந்த கோட்டம் என்ற பிரிவைச் சில விடங்களில் வளநாடு என மாற்றியதாகத் தெரிகிறது. க்ஷத்திரிய சிகாமணி வள நாட்டுப் பட்டினக் கூற்றத்து நாகப்பட்டினம் எனவும், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு ஸ்ரீ துங்கமங்கலம் எனவும் லெய்டன் செப் பேட்டில் வந்துள்ள தொடர்களால் வளநாடு, 'நாடு, ஊர் என்ற மூவகைப் பிரிவுகளையும், நாடு என்பதற்குப்

பதில கூற்றம் என்ற சொல் வழங்கியதையும் அறியலாம்.

சேரநாட்டில் நாடு ஊர் என்ற இரு பிரிவுகளே வழங்கின. இதனை, முடால நாட்டுப் பசுங்குளம் எனவும், செங்கழு நாட்டுக் குன்றத்தூர் எனவும் பார்த்திவ சேகரபுரச் செப்பேட்டில் வந்துள்ள தொடர்களால் அறியலாம்.

நாயக்க மன்னர்கள் காலத்தில் ராட்டிரம், பற்று' சீர்மை, உசாவடி, ஊர் எனப் பலவகைப் பிரிவுகள் வழங்கின. இவைகளேயன்றித் தொன்றுதொட்டு வழங்கி வந்த மண்டலம், கோட்டம், வளநாடு, நாடு என்ற பிரிவுகளும் வழங்கின. பாண்டி குலாசனி வளநாட்டு விழாவருவீதி நாட்டுத் திருவரங்கம் எனவும், இராஜகெம்பீர வளநாட்டுத் தஞ்சாவூர் உசாவடி உறையூர்க் கூற்றத்துக் கீழ்பலாறு எனவும் வழுதலம்பட்டுச் சீர்மை எனவும் வந்துள்ள கல்வெட்டுத் தொடர்களால் சில பிரிவுகளை அறியலாம். இவற்றுள் ராட்டிரமும் மண்டலமும் சமமானவை; உசாவடி கூற்றம் பற்று நாடு என்பன சமமானவை. ஊர் என்பது கிராமத்தையும் சீர்மை என்பது நகரத்தையும் குறிப்பனவாகும்.

55. பாடப்பகுதிக் கல்வெட்டுகளினின்று அறியப்படுகிற வேளாண்மை பற்றிய செய்திகளைத் திரட்டுக.

பள்ளன்கோயிற் செப்பேட்டில் "நீர் நிலமும் புன்செயும் களரும் கன்றுமேய் பாழும் காடும்" என்ற தொடர் காணப்படுகிறது. இதனால் நிலத்தை நன்செய் புன்செய் களர் மேய்ச்சல் நிலம் காடு முதலாகப் பாகுபடுத்தியிருந்தனர் என்பது புலப்படும். நன்செய் நிலங்களுக்கு ஆறு ஏரி என்பவற்றின் நீரை வாய்க்கால் வழியாகப் பாய்ச்சியும், புன்செய் நிலங்களுக்கு வாய்க்கால் குளம், கேணி, துரவு என்பவற்றின் நீரை ஏத்தம் இறை கூடைகளால் இறைத்தும் வேளாண்மை செய்தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

பாலாற்றையும் அதனின்று தோண்டிய பெரும் பிடுகு என்ற வாய்க்காலையும் கூரம் செப்பேடு குறிக் கிறது. விளப்பாறு, எறிவெட்டி வாய்க்கால் முதலிய வற்றை லெய்டன் செப்பேடு குறிக்கிறது ஏந்தலேரி, பரமேஸ்வர தடாகம், வேள்வடுகன்கேணி, குற்றேத்தம், மாவேத்தம், அயங்கயம் போன்ற பெயர்கள் செப்பேட் டிலும் கல்வெட்டிலும் வந்துள்ளன.

"இரு பூ விளைவது நீர்நிலம் மூவேலியும்' எனச் சிவகாசிச் செப்பேட்டில் வந்துள்ள தொடரால் சில நிலங் களில இருபோக விளைவு நடைபெற்றது என்பது தெரிகிறது. உழுபவர்க்கும் நில உரிமையாளர்க்கும இருந்த வாரமுறையைக் காராண்மை, மீயாட்சி எனக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. உழுபவனுக்கு உரிய வார உரிமை காராண்மை எனப்பட்டது. இதனையே இக்காலத்தில் குடிவாரம் என்பர். நிலச் சொந்தக்காரனுக்கு உரிய வார உரிமை மீயாட்சி எனப்பட்டது. இதனையே இக்காலத்தில் மேல்வாரம் என்பர்.

வாய்க்காலின் தண்ணீரை நிலத்துக்குப் பாய்ச்சு தற்கும் சில கட்டுத்திட்டங்கள் இருந்திருக்கின்றன. உரிமையற்ற அன்னியர் வாய்க்காலின் கரையை வெட்டி நீர்ப் பாச்சுதலும் குற்றேத்தம் இறைகூடை களால் நீர் இறைப்பதும் செய்யக்கூடாதென லெய்டன் செப்பேடு கூறுகிறது.

ஆனை மங்கலத்தில் தெங்கு இடலாம் என்றும் தமனகம் மருவு கமுகு பனை முதலியன நடலாம் என்றும் லெய்டன் செப்பேட்டில் இசைவு அளிக்கப் பட்டிருப்பதால், ஒரு சில இடங்களில் வேளாண்மைத் துறையில் இவை பயிரிடக்கூடாது என்ற தடையும் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

"செஞ்சாலி விளை கழனி" என்ற தொடரால் நன்செய் நிலத்தில் நெற்பயிரே பெரும்பாலும் விளைவிக் கப்பட்டதெனக் கொள்ளலாம். "காவு தெங்கிடப் பெறு

வதாகவும் தமனகமும் மருவும் இருவேலியும் செண்பகமும் செங்கழுநீரும் மாவும் பலாவும், கமுகும் பனையும் கொடியும் உள்ளிட்டப் பல்லுருவில் பயன்மரம் இடவும் நடவும் பெறுவதாகவும்'' என்ற தொடரால் புன்செய் நிலத்தில் மா பலா தென்னை பனை முதலிய மரங்களும் தமனகம் மருவு முதலிய பல்வகைப் பயிர்களும் விளைவிக்கப்பட்டன எனத் தெரிகிறது.

56. பாடப்பகுதிக் கல்வெட்டின் துணைகொண்டு அக்காலச் சமயநிலைகளைப் புலப்படுத்துக.

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்ற நான்கு வகையான சமயநெறிகள் அக்காலத்திருந்தன அந்நெறிகளைப் பின்பற்றி ஒழுகிய மக்கள் திருக்கோயில் கட்டுதல், சமண பௌத்தப் பள்ளிகளைக் கட்டுதல், இவற்றின் வழிபாட்டுக்காக நிலங்களை ,இறையிலியாக விடுதல, கோயிற் பணியாளர்களை நியமித்து அவர்களின் ஊதியத்துக்கு வழிவகுத்தல், திருவிளக்கிடுதல், விழா எடுத்தல், வேதம் ஓதுதல், பாரதம் வாசித்தல், திருப்பணி செய்தல், பொன் வேய்தல், சமய குரவர்களைப் பேணி நிலமளித்தல் போன்ற எண்ணற்ற பணிகளைச் செய்திருக்கிறார்கள்.

சைவம் : கூரம் என்ற ஊரில் விச்சாவிநீதப் பல்லவரசன் பரமேசுவரகரம் என்ற சிவன் கோயிலைக் கட்டி அதன் வழிபாட்டுக்காகப் பரமேஸ்வரமங்கலம் என்ற ஊரை அளித்தான். திருத்தணியில் நம்பியப்பி என்பவன் வீரட்டானேஸ்வரர் கோயிலைக் கட்டினான். திருவையாற்றுத் தென்கயிலாயமுடையார் கோயிலில் நடராசர்க்கும் சிவகாமிக்கும் முத்தான பொன்னங்கை என்பாள் பல அணிகலன்களைக் கொடுத்தாள் நரலோக வீரன் தில்லையில் பொன்னம்பலத்துக்குப் பொன் வேய்ந்தான. கோவரகுணபாண்டியன் பிள்ளைப் பிறைச் சடைக்கணிந்த பிநாகபாணி எம்பெருமானை உள்ளத்தினில் இனிது இருவி உலகாண்ட பேரன்பினன் ஆவான். யாகம் செய்யும் காலத்தில் சோமபானத்தைப் பருகி மனுசூத்தரான காடக சோம யாஜிகளும் அக்

காலத்தில் இருந்தனர். கூரத்துப் பரமேசுவரகரத்தில் வேதம் ஓத 20 மறையவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வூரில் பாரதம் வாசிக்கப்பட்டது.

வைணவம் : பார்த்திவசேகரபுரத்தில் கருநந் தடக்கன் கோயில்கட்டி விஷ்ணு பட்டாரகரைப் பிரதிஷ்டை செய்தான். விஷ்ணுபட்டாரகரை நாடோறும் மூன்று காலம் அபிஷேகம் செய்யவும் அவருக்கு இண்டையும் மாலையும் சாத்தவும், நொந்தா விளக்கு எரிக்கவும் பங்குனி விசாகத்தில் ஆருட்டு விழா நடத்தவும் தட்டழி மத்தளி முதலிய வாத்யம் வாசிக்கவும் நிலம் வழங்கினான். திருவரங்கப் பெருமாளுக்கு நாராயண ஜீயர் திருவரங்கன் திருப்பதிபிடாகை என்ற ஊரை வழங்கினார். அவுக்குத் திருவேங்கட அய்யங்கார் திருவரங்கருக்கு நாடோறும் நாலுதளிகை அமுது செய்ய வழிவகுத்தார். கிருஷ்ணதேவராயர் சோழ மண்டலத்தில் உள்ள விஷ்ணுஸ்தான சிவஸ்தானங்களுக்குப் பதினாயிரம் பொன்னைச் சர்வ மானிய மாகக் கொடுத்தார். தளவாய்புரச் சேப்பேட்டுக்குப் பிரசஸ்தி எழுதிக் கொடுத்த ஸ்ரீமாதவன் என்பவன் பரம வைஷ்ணவனாக விளங்கியதால் ஸ்ரீமாதவ சரண சேகரன்'' என்று புகழப்பட்டான்.

சமணம் : பருத்திக்குன்றில் வஜ்ஜிரநந்திகுரவர் என்ற சமணசமயப் பெரியார் வாழ்ந்தார். அவருக்குச் சிம்மவர்ம பல்லவன் அமண்சேர்க்கை என்ற நிலத்தையும் பெருநகர நாட்டார் தாமர் என்ற ஊரில் 16½ பட்டி நிலத்தையும் பள்ளிச்சந்தமாகக் கொடுத்தார்கள். மீனாட்சிபுர மலைக்குகையில் வாழ்ந்த நந்த ஸ்ரீ இயக்குவன் என்ற சமணத் துறவிக்கு நெடுஞ்செழியன் முதலியோர் கற்படுக்கை செய்து கொடுத்தனர். சித்தன்னவாசல் மலைக்குகையில் வாழ்ந்த ஈதேன் என்ற துறவிக்கு அவரது தம்பியர் அதிட்டானம் செய்து கொடுத்தனர். ஆர்நாட்டார் மலைக்குகையில் வாழ்ந்த செங்காயபன் என்ற முதிர்ந்த சமணத் துறவிக்கு இளங்கடுங்கோன் கற்படுக்கை செய்து கொடுத்தான். திருநாதர்குன்றில் வச்சிரநந்தி என்ற சமணத்துறவி 57 நாள் உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்தார்.

பௌத்தம் . கடாரத்தரசனுன சூளாமணி பன்மன் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்தப் பள்ளி கட்டினுன். அப்பள்ளிக்கு முதலாம் இராசராசன் ஆனைமங்கலத்தைப் பள்ளிச்சந்தமாக வழங்கினுன் ஆனை மங்கலமானது ஆண்டுதோறும் அரசனுக்கு 8943 கல நெல்லை வரியாகச் செலுத்தி வந்த மிகப் பெரிய கிராமம் 8943 கல நெல்லை அந்தப் பௌத்தப்பள்ளி ஆண்டுதோறும் செலவிடத்தக்க பெரிய நிர்வாகம் உடையது என்பதும் அதில் நூற்றுக்கணக்கான பௌத்தத் துறவிகள் இருந்திருக்க வேண்டும் என்றும் ஊகிக்க நேர்கிறது. இதனுல் அவ்விடத்தில் பௌத்த சமயம் மிகவும் தலை தூக்கி நின்றதெனவும் தெரிகிறது.

57. பாடப்பகுதிக் கல்வெட்டுகளால் தெரியவரும் அளவை முறைகளை விளக்கி வரைக.

பாடப்பகுதிக் கல்வெட்டுகளைத் துருவி ஆராயுமிடத்து அக்காலத்தில் வழங்கிய எண்ணல் அளவை, நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை, பரப்பளவை, காலஅளவை என்பன பற்றிய பல செய்திகள் தெரியவருகின்றன.

எண்ணல் அளவை : "ஒருதன்மை இரு பிறப்பில் முச்செந்தீ நால் வேதத்து அருமரபில் ஐவேள்வி ஆறங்கத்து" "என்றும் ஏழு நாள் திருவிழாச் செய்து பங்குனி விசாகம் ஆறுடுவதாகவும்" என்றும் "எண் கல வித்துப் பாடும்" என்றும், "கருநந்தடக்கனுக்குயாண்டு ஒன்பது நாள் பதினைஞ்சு" என்றும், "குடியிருக்க முதுநிலத்தில் பத்துமாவும்" என்றும், "ஆயிரத்து இரு நூற்றுக் குழிப் படியால்" என்றும் "கலியுகம் தொட்டு நாள் பதினுன்கு நூருயிரத்து" என்றும் வரும் தொடர்களால் ஒன்று இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, நூறு, ஆயிரம், நூருயிரம் என்ற எண்ணுப் பெயர்கள் வழங்கியதை அறியலாம்.

இனி இதுபோன்ற மேல்வாய் இலக்கங்களே யன்றிக் கீழ்வாய் இலக்கமாக—(அதாவது பின்னங்

களாக)—அரை ($\frac{1}{2}$), மா ($\frac{1}{20}$), முக்காணி ($\frac{3}{80}$), அரைக்காணி ($\frac{1}{160}$), முந்திரிகை ($\frac{1}{320}$), என்ற எண்ணுப் பெயர்களும் வழங்கின என்பது, "நிலம் தொண்ணூற்றேழே இரண்டும் மா முக்காணி அரைக்காணி முந்திரிகை" என்று லெய்டன் செப்பேட்டில் வந்துள்ள தொடரால் அறியலாம்.

நிறுத்தல் அளவை : "குடிஞைக் கல்லால் பொன் அறு கழஞ்சு" என்றும், "பொன் அரைக்கழஞ்சே நாலு மஞ்சாடியும் அஞ்சுமாவும்" என்றும் திருவை யாற்றுக் கல்வெட்டில் வந்துள்ள தொடர்களால் மா, மஞ்சாடி, கழஞ்சு என்னும் நிறுத்தல் அளவைப் பெயர்கள் வழங்கியதை அறியலாம்.

மேலும் பொன்னை நிறுக்கும் கல் குடிஞைக்கல் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கியது. (அதுபோல ரத்னங்களை நிறுக்கும் கல் காசுக்கல் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கியது.)

நிறுத்தல் அளவை வாய்பாடு

5 மா = 1 குன்றி

2 குன்றி = 1 மஞ்சாடி

20 மஞ்சாடி = 1 கழஞ்சு.

முகத்தல் அளவை : "விதை மடைப்பள்ளி நாழியால் 120ப நாழி" என்றும், "உடன்வாரம் நாற்கலனே எண் குறுணி நெல்" என்றும், "நெல் எண்ணுபிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து முக்கலனே இருதூணிக் குறுணி ஒரு நாழி' என்றும் வரும் செப்பேட்டுத் தொடர்களால் நாழி, குறுணி, தூணி, கலன் என்னும் முகத்தல் அளவைப பெயர்கள் வழங்கியதை அறியலாம்.

மேலும் மடைப்பள்ளி நாழி, பதினுழிக்கால் என்னும் சிறப்புப் பெயர்களால் சில அளவு கருவிகள் வழங்கியதாகப் பார்த்திவசேகரபுரச் செப்பேட்டால் தெரியவருகிறது.

முகத்தல் அளவை வாய்பாடு

8 நாழி = 1குறுணி (அ) 1 மரக்கால்

2 குறுணி = 1 பதக்கு

4 குறுணி = தூணி

12 குறுணி = 1 கலம்

நீட்டல் அளவை : பாடப்பகுதியல்லாத வேறு கல்வெட்டுகளால் தோரை, விரல், சாண், முழம் என்ற நீட்டல் அளவைப் பெயர்கள் வழங்கியதை அறிய முடிகிறது. பாடப் பகுதியான திருவாமூர்நடுகல் கல்வெட்டில் வந்துள்ள "கங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக்காதமும்" என்ற தொடரால் காதம் என்ற நீட்டல் அளவைப் பெயர் தெரியவருகிறது.

சிவகாசிச் செப்பேட்டால் நிலமளக்கும் கோல் ஒன்று புறஞுஞ்சில் கோல் என்ற சிறப்புப் பெயரால் வழங்கியதை அறிய முடிகிறது.

பரப்பு அளவை : "நீர்நிலன் மூவேலியும்" என்றும், "முதுநிலத்தில் 10 மாவும்" என்றும், "தாமரிலும் திஞறரைப் பட்டி நிலம் கொடுத்தோம்" என்றும், "ஆயிரத்திருநூற்றுக் குழிப் படியால்" என்றும் செப்பேடுகளில் வந்துள்ள தொடர்களால் நிலத்தின் பரப்பு வேலி, மா, குழி, பட்டி என்னும் அளவுப் பெயர்களால் வழங்கியதை அறியலாம்.

நிலத்தைக் கோலால் அளந்து பரப்பளவு சொல்வதே பெரும்பாலான வழக்கம். ஆனல் நிலத்தில் விதைக்கும் விதையளவால் அதன் பரப்பைக் குறிக்கும் வழக்கமும் இருந்தது. இதனைத் தடி பதினைஞ்சு விதை மடைப்பள்ளி நாழியால் ஆயிரத்து இருநூற்று நாழி" "தடி ஏழுவிதை எண்ணூற்று நாற்பதின் நாழி" என்று பார்த்திவசேகரபுரச் சேப்பேடு கூறும் தொடர்களால் தெரிந்து கொள்ளலாம்.

பரப்பு அளவை வாய்ப்பாடு

100 குழி = 1 மா
20 மா = 1 வேலி
1200 குழி = 1 பட்டி

கால அளவை : "கலியுகம் தொட்டு நாள 14,49,087" என்று பார்த்திவ சேகரபுரச் செப்பேட்டிலும், "சகாப்தம் 1467 இதன்மேல் செல்லாநின்ற விசுவாவசு சம்வத்சரத்து பால்குண மாசத்து சுக்ல பட்சத்து சப்தமியும் சோம வாரமும் பெற்ற ரோஹிணி நக்ஷரத்து" என்று சதாசிவராயர் கல்வெட்டிலும் வரும் தொடர்களால் கால அளவுகள் யுகம், சகாப்தம், சம்வத்சரம் (ஆண்டு) மாசம் (திங்கள்)' பட்சம், திதி, வாரம், நக்ஷத்திரம் என்ற பெயர்களால் வழங்கப்பட்டன எனத் தெரிகிறது,

மேலும் "சிம்மவர்மர்க்கு யாண்டு ஆருவது" என்றும், தனக்கு இரண்டாமாண்டின் எதிராமாண்டு" என்றும், "கருநந்தடக்கனுக்கு யாண்டு ஒன்பது நாள் பதிணஞ்சு" என்றும் வரும் தொடர்களால் கால அளவு அரசனின் ஆட்சி ஆண்டு, ஆட்சி ஆண்டோடு எதிராமாண்டு, ஆட்சி ஆண்டோடு நாள் என்ற முறைகளாலும் குறிக்கப்பட்டதெனத் தெரிகிறது.

கால அளவை வாய்பாடு

60 நாழிகை = 1 நாள்
ஏறத்தாழ 1 நாள் = 1 திதி
ஏறத்தாழ 1 நாள் = 1 நக்ஷத்திரம்
7 நாள் = 1 வாரம்
ஏறத்தாழ 15 நாள் = 1 பட்சம்
ஏறத்தாழ 30 நாள் = 1 திங்கள்
12 திங்கள் = 1 ஆண்டு
4,32,000 ஆண்டு = கலியுகம்

குறிப்பு : சாலிவாகன மன்னன் ஆட்சிக்கு வந்தது முதல் கணக்கிடும் ஆண்டு சாலிவாகன சகாப்தம் எனப்படும் இதனையே சகாப்தம் என்றும் சகம் என்றும் சுருக்கி வழங்கிவருகின்றனர்.

58. கீழ்க்கண்டவற்றுள் மூன்றனுக்குக் குறிப்பு வரைக:- (அ) தலவகார சரணத்தார் (ஆ) வளநாடு (இ) கரணத்தான் மத்யஸ்தன் (ஈ) கம்பவர்மன் (உ) மூவேந்த வேளான் (ஊ) கழஞ்சு (79 Sep.)

(அ) தலவகார சரணத்தார் : தலவகாரம் என்பது சாமவேதம். இவ்வேதம் 1000 சாகைகளை (பிரிவுகளை)க் கொண்டது என்று கூறுவர். சரணத்தார் என்பது அந்த வேதம் பயிலும் பயிற்சியில் நடக்கும் மாணவர் என்று பொருள்படும். கோக்கரு நந்தடக்கன் என்ற சேர மன்னன் பார்த்திவ சேகர புரத்தில்வேத பாடசாலை ஒன்று அமைத்து அதில் பவிஷிய சரணத்தார் (ரிக்வேதம் கற்போர்) 45 பேருக்கும், தைத்திரிய சரணத்தார் (யசுர் வேதம் கற்போர்) 36 பேருக்கும், தலவகார சரணத்தார் (சாமவேதம் கற்போர்) 14 பேருக்கும் உண்கலம் வகுத்தான் என்று பார்த்திவ சேகரபுரச் செப்பேடு கூறுகிறது. பழங்காலத்தில் பவிஷ்யம் தைத்திரியம் தலவகாரம் என்ற வேதங்கள் இருந்தன என்றும் இவற்றைக் கற்கமுடியாத சிற்றறிவினோர் பொருட்டு வேதவியாசர் இவற்றைச் சுருக்கமாகத் திரட்டி ரிக் யசுர் சாமம் அதர்வணம் என்ற வேதங்களைத் தொகுத்தார் என்றும் ஒரு குறிப்பை நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார்.

(ஆ) வளநாடு : பல ஊர்கள் சேர்ந்தது நாடு என்றும், பல நாடுகள் சேர்ந்து வளநாடு என்றும், பல வளநாடுகள் சேர்ந்தது மண்டலம் என்றும் அக் காலத்தில் வழங்கின.

வளநாடு என்ற சொல்லாட்சியை முதலாம் இராசராசன்தான் முதன் முதலாகக் கையாளத் தொடங்கினான், அவனுக்கு முற்பட்ட காலத்தில் வளநாடு

என்ற சொல்லாட்சி இல்லை. ஆனால் தொண்டை மண்டலம் மட்டும் பல்லவர் காலத்தில் கோட்டம் என்ற பெயரால் பிரிக்கப்பட்டு வழங்கிற்று. கோட்டமும் வள நாடும் ஒன்றற்கு ஒன்று சமமானவை. நாடு, வளநாடு, மண்டலம் என்பன முறையே தற்காலத்தில் வழங்குகிற வட்டம், மாவட்டம், மாநிலம் என்ற நாட்டுப் பிரிவு களைப் போன்றனவாகும்.

வளநாடுகள் என்பன மன்னனின் சிறப்புப் பெய ரால் குறிக்கப்பட்டுள்ளன. க்ஷத்திரிய சிகாமணி வள நாடு,நித்த விநோத வளநாடு, அருமொழி தேவ வள நாடு போன்ற பெயர்கள் லெய்டன் செப்பேட்டில் காணப்படுகின்றன. இவற்றுள் காணப்படும் க்ஷத்திரிய சிகாமணி, நித்த விநோதன், அருமொழி தேவன் என் பன இராசராசனின் சிறப்புப் பெயர்களாகும்.

(இ) 1. **கரணத்தான் :** ஊர்ச்சபையின் வாரியக் கணக்குகளை எழுதி வைப்பவன் கரணத்தான் எனப் பட்டான். இவன் ஊர்ச் சபையார்க்குக் கீழ்ப் படிந்து அவர் வேண்டியபோது கணக்குகளைக் காட்ட வேண்டும். இவனுக்கு நாளொன்றுக்கு நானாழி நெல் லும் ஓராண்டுக்கு ஏழு கழஞ்சு பொன்னும் இரண்டு ஆடையும் ஊதியமாகக் கொடுக்கப்பட்டன என்று சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஊரின் தரத்துக்கு ஏற்ப ஒரே ஊரில் பல கரணத்தார் இருந்ததும் உண்டு

2. **மத்யஸ்தன்:** ஊர்ச்சபை கூடும்போது வாரியத் தார்களுக்கு நடுவில் இருந்துகொண்டு சபை நிகழ்ச்சி களை உடனுக்குடன் எழுதி வைப்பவன் மத்யஸ்தன் எனப்பட்டான். ஊர்ச் சபைக்கு நடுவில் இருந்து மேற் பார்வை செய்வதனால் இவனுக்கு மத்யஸ்தன் (பொது வனவான்) என்ற பெயர் வழங்கிற்று சில கல்வெட்டு கள் இவனை "நடுவிருக்கை" என்ற பெயரால் குறிப்பிட் டுள்ளன. இவன், தற்காலத்தில் சபாநாயகர் என்று கூறப்படுபவரை ஒத்தவனவான். சில இடங்களில் கரணத்தானே மத்யஸ்தனுக—(இரண்டு வேலைகளைச்

செய்பவனுக) இருந்ததுண்டு. அப்போது அவன் "கரணத்தான் மத்யஸ்தன்' எனப்பட்டான்.

59. கீழ்க்கண்டவற்றுள் மூன்றனுக்குக் குறிப்பு வரைக:- பள்ளிச் சந்தம், வீரநாரயணன், பிரமதேயம், காணம், அற வோலை, தொறு. (79 Ap).

பள்ளிச் சந்தம்: சமண பௌத்தப் பள்ளிகளுக்கு இறையிலியாக வழங்கப்படும் நிலம் பள்ளிச் சந்தம் எனப்படும். சமணத் துறவிகளுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட நிலமும் பள்ளிச் சந்தம் எனப்படும். பருத்திக் குன்றில் வாழ்ந்த வச்சிர நந்திக் குரவர்க்குச் சிம்மவர்மன் அமண் சேர்க்கை என்ற ஊரைப் பள்ளிச் சந்தமாக வழங்கினுன் என்றும் அவர்க்கே பெருநகர நாட்டார் தாமர் என்ற ஊரில் 16½ பட்டி நிலத்தைப் பள்ளிச் சந்தமாக வழங்கினர் என்றும் பள்ளன் கோயிற் செப்பேடு கூறுகிறது. நாகப்பட்டினத்தில் கடாரத் தரசன் எடுப்பித்த சூளாமணிப் பன்ம விகாரம் என்ற பௌத்தப் பள்ளிக்கு முதலாம் இராசராசன் ஆனைமங் கலம் என்ற கிராமத்தைப் பள்ளிச் சந்தமாக வழங்கி ஞன் என்று லெய்டன் செப்பேடு கூறுகிறது.

[வீரநாராயணன்: விடை 11ல் காண்க.]

பிரமதேயம்: பிராமணர்களுக்கு இறையிலியாக வழங்கப்படும் நிலம் பிரமதேயம் எனப்படும் பிரம தேயத்தில் தேவதான பிரமதேயம், ஏகபோகப் பிரம தேயம் என்ற வகைகளும் உண்டு. ஒரு நிலத்தில் ஒரு பகுதி திருக்கோயிலுக்கும், மற்றொரு பகுதி பிராமணர்க்குமாகச் சேர்த்து வழங்கப்படுவது தேவ தானப் பிரமதேயமாகும். ஒரே ஒரு பிராம்மணனுக்கு மட்டும் உரிமையாகும்படி வழங்கப்படுவது ஏகபோகப் பிரமதேயமாகும்.

பரமேஸ்வர மங்கலத்தை 25 பங்காக்கி அவற்றுள் 20 பங்கை 20 சதுர்வேதிகளுக்கு (பிராமணர்களுக்கு) விச்சாவினீத பல்லவன் பிரமதேயமாக வழங்கினுன்

எனக் கூரம் செப்பேடு கூறுகிறது. பாண்டியன் கடுங்கோன் திருமங்கலம் என்ற ஊரை 12 பிராமணர்களுக்குப் பிரமதேயமாக வழங்கினன் என்று தளவாய் புரச் செப்பேடு கூறுகிறது. ஆணமங்கலத்தின் நான்கெல்லைகளில் பிரமதேயம் சிவளக்குடி, பிரமதேயம் பிரம்பில், பிரமதேயம் மூங்கிற்குடி என்பன ஒரு சில எல்லைகளாக அமைந்திருந்தன என்று லெய்டன் செப்பேடு கூறுகிறது.

காணம் : காணம் என்பது குறைந்த மதிப்புள்ள ஒரு பொற் காசாகும். இது 4 குன்றி மணி எடை கொண்டது; அல்லது கழஞ்சு என்ற நிறையில் பத்தில் ஒரு பங்கு கொண்டதாகும்.

சாதுவன் என்ற வணிகனைக் கையிற் காசில்லாதவன் என்று சொல்லிப் பரத்தை கைவிட்டாள் என்ற செய்தியைச் சொல்ல வந்த மணிமேகலை இலக்கியம் "காணம் இலி எனக் கையுதிர் கோடலும்" என்று குறிப்பிடுகிறது ஈண்டுக் காணம் என்பது ஒரு நாணயம் என்ற பொருளில் வந்திருப்பது புலனாகும்.

"விச்சாவினீதப் பல்லவரசன் விலைக் காணம் கொடுத்து 5¼ பட்டி நிலம் வாங்கினன்" என்று கூரம் செப்பேட்டிலும், "ஒரு சட்டனை ஒரு சட்டன் பிழைக்கப் பேசினல் அஞ்சு காணம் தண்டம் இடவேண்டும்" என்று பார்த்திவ சேகரபுரச் செப்பேட்டிலும், "கண்ணலக் காணம், தசக் காணம், கத்திக் காணம்" என்று வரிப் பெயர்களிலும் காணம் என்ற சொல் கையாளப் பட்டுள்ளதைக் காணலாம்.

60. குறிப்பு வரைக:—வச்சிர நந்திக் குரவர், கடுங்கோன்; பொத்தப்பிக் குலச்சோழன், சொக்கனேந்தல், நம்பியப்பி, கம்பவர்மன், மூவேந்த வேளான், ஆணத்தி.

வச்சிர நந்திக்குரவர்:—இவர் ஒரு சமண சமயத் துறவி; நந்தி கணத்தைச் சார்ந்தவர்; சிம்ம வர்ம பல்லவன் காலத்தில் பருத்திக் குன்றில் (ஜின காஞ்சியில்) வாழ்ந்தவர்; சிம்மவர்மனல் வழங்கப்பட்ட அமண

சேர்க்கை என்ற ஊரைப் பள்ளிச் சந்தமாகப் பெற்றவர்; வெண் குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டாரால் தாமர் என்ற ஊரிலிருந்து வழங்கப்பட்ட 16½ பட்டி நிலத்தையும் பள்ளிச் சந்தமாகப் பெற்றவர். பள்ளன் கோயிற் செப்பேட்டில் இவர்பெற்ற கொடைகள் விபரமாகக் கூறப்பட்டுள்ளன. (சமண சமயத்தில் துறவு பூண்ட ஆண்பாலார் குரவர் எனப்படுவர்; பெண் பாலார் குறத்தியர் எனப்படுவர்.)

கடுங்கோன் : சங்க கால இறுதியில் களப் பிரரால் கவரப்பட்ட பாண்டிய நாட்டை அவரிடமிருந்து மீட்டுத் திரும்பவும் பாண்டியராட்சியைத் தோற்றுவித்தவன் பாண்டியன் கடுங்கோனுவான். இவனைப் பற்றித் தளவாய் புரச் செப்பேடு, 'கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாளரைக் களைகட்ட மற்றிரள்தோள் மாக் கடுங்கோன் மானம் பேர்த்தருளியகோன்" என்று குறிப்பிடுகிறது. அதாவது பாண்டி நாடாகிய வயலில் புகுந்த களப்பிரராகிய களையைப் பிடிங்கி எறிந்தவன் என்றும் போன மானத்தை மீட்டுக் கொடுத்தவன் என்றும் பாராட்டுகிறது. மேலும் இக்கடுங்கோன் திருமங்கலம் என்ற ஊரை 12 அநதணர்களுக்குப் பிரமதேயமாக்கிச் செப்பேடு செய்து கொடுத்தான் என்றும் அதே செப்பேடு கூறுகிறது.

பொத்தப்பிக் குலச்சோழன் : இவன் ஸ்ரீ கண்டராசன் என்ற பெயருடையவன்; தெலுங்குச் சோழ மரபைச் சார்ந்தவன்; திருக்காளத்தி மலையை உள்ளடக்கிய பொத்தப்பி நாட்டை ஆண்டவன்; மயிலாப்பூர்க்கும் மன்னனுக இருந்தவன். பகைவரைக் கண்டு நடுங்காதவன்; மானுபரணனின் வழிவந்தவன்; யானையைச் செலுத்துவதில் வல்லவன்; தன்மகளாகிய அக்களநிம்மடி என்பவளை பாண்டியன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கு மணம்செய்து கொடுத்தவன். (இந்த அக்களநிம்மடியின் வயிற்றில் பிறந்தவனே பராந்தக ஸ்ரீவீரநாராயணன் ஆவான்) இவனைப் பற்றிய இச்செய்திகளை எல்லாம் தளவாய்புரச் செப்பேடு கூறுகிறது.

சொக்கனேந்தல் : சொக்கன் என்பது இவனது இயற்பெயர்; இவன் கரடி குலம் என்ற குடியில் பிறந்தவன்; புகழ் மங்கலம் என்ற ஊரில் வாழ்ந்தவன்; சிறந்த வீரன்; அதனுல் ஏந்தல் என்று சிறப்பிக்கப் பட்டவன். ஒரு சமயம் பகைவர் சிலர் புகழ்மங்கலத்துள் நுழைந்து போரிட்டனர். சொக்கனேந்தல் அவர்களை எதிர்த்துப் போரிட்டுத் துரத்தி வெற்றியும் பெற்றுவிட்டான். ஆனுல் போரில்பட்ட விழுப் புண்ணுல் வீர மரணம் எய்தினுன். அவனது வீரச் செயலைப் பாராட்டி அவ்வூரார் அவனுக்கு நடுகல் நட்டனர். அந்த நடுகல்லில் அவனது பேரும் புகழும் நிலைக்கும்படி ஒரு வெண்பாவைப் பொறித்து வைத்துள்ளனர்.

அவ்வெண்பா வருமாறு :—(விடை 42-ல் காண்க.)

நம்பியப்பி : இவன் அபராஜிதவர்ம பல்லவன் காலத்தவன். இவனைப் பாராட்டி அப்பல்லவன் பாடிய வெண்பா ஒன்று திருத்தணியில் உள்ள வீரட்டானேஸ்வரர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது.

அவ்வெண்பா வருமாறு : (விடை 42-ல் காண்க.) மேற்கண்ட வெண்பாவிலிருந்து நம்பியப்பி பல கலைகளிலும் வல்லவன் என்பதும், திருத்தணி வீரட்டானேஸ்வரர் கோயிலைக் கற்றளியாக எழுப்பியவன் என்பதும் தெரிய வருகின்றன. அக்கல்வெட்டுப் பாடல் "நற்கலைகள் எல்லாம் நவின்ற சீர் நம்பியப்பி" என்று கூறுவதனுல் இவன் ஒரு சிற்பியாக இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. நம்பி என்பது இவனிடம் அமைந்திருந்த கலைச் சிறப்பு நோக்கிக் கொடுக்கப்பட்ட சிறப்புப் பெயராகும்; அல்லது அந்தணர் குலத்தவன் என்பது பற்றி அமைந்த பெயராகவும் இருக்கலாம். அப்பி என்பது அப்புலிங்கேஸ்வரன் என்ற பெயரின் மரூஉவாகும்.

கம்பவர்மன் : இவன் பல்லவ மரபைச் சார்ந்த மன்னன். முந்தைய வரலாற்ருசிரியர்கள் "பல்லவரது

ஆட்சி அபராஜிதவர்மனோடு முடிந்து விட்டது'' என்று கூறி வந்தார்கள் தற்போது கம்பவர்மனின் ஆட்சியில் நடப்பட்ட நடுகற் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. எனவே அபராஜிதனுக்குப் பின் பல்லவ மரபில் கம்ப வர்மனும் அரசனாக இருந்துள்ளான் என்பது தெரிய வருகிறது கம்பவர்மன் காலத்து நடுகற்களில் அவனது 25-வது ஆண்டு குறித்த கல்வெட்டுக் கிடைத்திருப்ப தால் அவன் குறைந்தது 25 ஆண்டுகள் ஆண்டிருக்க லாம் என்பது புலனாகிறது. அக்கல்வெட்டுகளால் வயிரமேக வாணகோவரையர் என்பவர்கள் கம்பவர்ம னுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தனர் என்ற செய்தியும் தெரிகிறது.

மூவேந்த வேளான் : இது ஒரு பட்டப் பெயர்; முற் காலத்தில் அரசியல் பெருந்தரத்து அதிகாரிகள் சிலர்க்கு இப்பட்டப் பெயர் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சர், படைத்தலைவர், நாடாள்வோர், ஸ்ரீகாரியம் ஆராய்வோர் (கோயிலதிகாரி) போன்ற அதிகாரிகளாக அந்தணர்களும் வேளாளர்களும் நியமிக்கப்பட்டிருந் தனர். இவர்களில் அந்தணர்களுக்குப் பிரம்மராஜன், பிரம்ம மாராயன் போன்ற பட்டங்களும், வேளாளர் களுக்கு மூவேந்த வேளான் என்ற பட்டமும் வழங்கப் பட்டன.

பருத்திக்குடையான் வேளான் உத்தம சோழனான மதுராந்தக மூவேந்த வேளான், தத்தன் சேந்தனான செம்பியன் மூவேந்த வேளான், பிசங்கன் பாளூரானான மீனவன் மூவேந்த வேளான் முதலாகப் பல பேர் இந்தப் பட்டப் பெயரைப் பெற்றிருந்ததாக லெய்டன் செப்பேடு குறிக்கிறது.

ஆணத்தி : அரசனது ஆணை எழுதப்பட்ட திரு முகத்தை உரிய இடத்துக்கு எடுத்துச் சென்று அந்த ஆணையை நிறைவேற்றி வைப்பவன் ஆணத்தி எனப் படுவான். ஆக்ஞாபதி என்ற ஆரியச் சொல் ஆணத்தி எனத் திரித்து வழங்கப்பட்டிருக்கிறது. அரசனின் நம்பிக்கைக்கு உரிய அமைச்சனோ படைத்தலைவனோ

ஒவ்வொரு சமயத்தில் அரசனால் ஆணத்தியாக நியமிக்கப்படுவான். ஆணத்தி என்பது எப்போதும் ஒருவருக்கு நிலையாக இருக்கும் தொழிலன்று; அவ்வப்போது நியமிக்கப்படும் தொழிலாகும் பள்ளன் கோயிற் செப்பேட்டில் நரபயன் என்பவன் ஆணத்தியாகக் குறிக்கப்பட்டுள்ளான். சிவகாசிச் செபபேட்டில் தென்னவன் உத்தர மந்திரியான இயக்கஞ் செல்வன் ஆணத்தியாகக் குறிக்கப்பட்டுள்ளான்.

61. குறிப்பு வரைக: அறவோலை, எதிரா மாண்டு, கழஞ்சு, சதுர்வேதிமங்கலம், பரகேஸரி, க்ஷத்திரிய சிகாமணி.

அறவோலை: இது அறையோலை என்பதன் திரிபாகும். ஊர்ச்சபையார் அரசனிடத்திலிருந்து வந்த திருமுகத்தை ஏற்று அதில் கண்ட ஆணை நிறைவேற்றும் பொருட்டு ஊரார்க்குப் பறையறைந்து தெரிவித்துப் பிடிசூழ்ந்து கல்லும் கள்ளியும் நாட்டி நான்கெல்லைகளை வரையறை செய்து, அரசனின் திருமுகத்தின் கீழே தம் செயல்களையும் நான்கெல்லைகளையும் எழுதிக் கையொப்பமிடுவர். அரசனது திருமுகம், இங்ஙனம் செய்து கையொப்பமிட்ட பிறகு அறையோலை என்ற பெயர் பெறும். அதாவது அரசனது ஆணையைப் பறை அறைந்து தெரிவிததபடியாலும், நான்கெல்லைகளை வரையறை செய்தபடியாலும் இதற்கு அறையோலை என்ற பெயர் ஏற்பட்டது.

பள்ளன் கோயிற் செப்பேட்டில் அறையோலை என்றும், லெய்டன் செப்பேட்டில் அறவோலை என்றும் ஆளப்படடிருக்கிறது. அறவோலை என்பது வடமொழியில் தர்ம சாஸனம் என மொழி பெயர்க்கப்பட்டு நாயக்கர் காலத்தில் கையாளப்பட்டிருககிறது.

எதிராமாண்டு: பாண்டியர்கள் தமது கல்வெட்டுகளில் தம்முடைய ஆட்சி ஆண்டைக் குறித்துள்ளனர். ஆயினும் குறிப்பிட்ட ஓர் ஆண்டோடு எதிராமாண்டு என்பதையும் இணைத்துக் கூறும் வழக்கத்தையும் பின்பற்றியுள்ளார்கள். "கோமாறஞ்சடையற்கு யாண்டு

நாலாவதற்கு எதிர் ஒன்பதாவது" என்ற பகுதியை எடுத்துக்காட்டாகக் கூறலாம் இங்ஙனம் கூறப்பட்ட போது நான்கையும் ஒன்பதையும் கூட்டிப் பதின்மூன்ரு வது ஆட்சியாண்டு என்று கொள்ள வேண்டும். இந்த இரண்டு வகை ஆண்டுகளைக் கூட்டிக் கொள்ள வேண்டும் என்பது சின்னமனூர்ச் செப்பேட்டால் புலனு கிறது. அதாவது இரண்டாம் இராசசிம்ம பாண்டி யனின் ஆட்சி ஆண்டைச் சின்னமனூர்ச் செப்பேட்டின் வடமொழிப் பகுதி 16 என்றும் தமிழ்ப் பகுதி இரண்டா வதின் எதிர் பதினுன்காவது என்றும் குறித்துள்ளது. தமிழ்ப் பகுதி கூறும் இரண்டு வகை ஆண்டுகளையும் கூட்டினுல்தான் வடமொழிப் பகுதி கூறும் ஆண்டுக்கு ஒத்து வரும்.

மற்றும் ஆட்சியாண்டை இங்ஙனம் இரண்டாகப் பகுத்துக் கூறுவதற்கு ஏதாவது உள்நோக்கம் இருக்கத்தான் வேண்டும். அந்த நோக்கம் யாதெனில் முதலில் குறித்தது இளவரசனுக இருந்து ஆண்ட ஆண்டையும், எதிராமாண்டு என்பது முடிசூடியது முதல் நிகழ்ந்த ஆண்டையும் குறிப்பிட்டதாகும் என்று ஆய்வாளர்கள் கருதுகிருர்கள்.

கழஞ்சு : பொன்னை நிறுக்கும் அளவுப் பெயர் களில் கழஞ்சு என்பதும் ஒன்ரும். இது கழற்சிக் காயின் நிறைக்குச் சமமானது. அக்காலத்தில் வழங்கிய பொற்காசு ஒரு கழஞ்சு பொன்ஞல் செய்யப்பட்டது என்று சில கல்வெட்டுகளால் தெரிகிறது. கழஞ்சு என்பதே பொன்னை நிறுக்கும் நிறையளவுப் பெயர் களில் பெரியது. அதேபோல மா என்பது நிறையளவுப் பெயர்களில் சிறியது 5 மா கொண்டது 1 குன்றி. 2 குன்றி கொண்டது 1 மஞ்சாடி. 20 மஞ்சாடி கொண் டது 1 கழஞ்சு. இந்தக் கழஞ்சு என்னும் நிறை தற் காலத்தில் வழங்கும் 10 கிராம் நிறைக்குச் சமமாகும்

பார்த்திவசேகர புரச் செப்பேட்டில் "தேவர் சென் னடையும் பதினுழிச்சாலேயும் எவ்வழக்குச் சொல்லியும் நீக்கக் கூடாது. அங்ஙனம் நீக்கினுல் நியதி ஐங்கழஞ்சு

பொன் தண்டம் இடவேண்டும்'' என்று கூறப்பட்ட இடத்தும், திருவையாற்றுக் கல்வெட்டில் "திருக்கைக் காறை ஒன்று பொன் இரு கழஞ்சாக" என்று கூறப் பட்ட இடத்தும் கழஞ்சு என்ற சொல் கையாளப்பட்டி ருக்கிறது.

சதுர்வேதி மங்கலம் : நான்கு வேதங்களையும் முறை யாக ஓதும் அந்தணர்களுக்கு இறையிலியாக வழங்கப் படும் ஊர் சதுர்வேதி மங்கலம் எனப்படும். (சதுர்— நான்கு; வேதி—வேதத்தை ஓதும் அந்தணர்; மங்கலம்— நன்மை வாய்ந்த ஊர்.) இந்தச் சதுர்வேதி மங்கலங்கள் தானம் வழங்கிய மன்னர் முதலியோரது பெயரை இணைத்துக் கூறப்படும். "வீரநாராயண சதுர்வேதி மங்கலம், கேரளாந்தக சதுர்வேதி மங்கலம்'' என்பன லெய்டன் பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ளன. முற் காலத்தில் அரசர்களால் எண்ணற்ற ஊர்கள் சதுர் வேதி மங்கலங்களாக வழங்கப்பட்டிருந்தன என்று கல் வெட்டுகளால் தெரிகிறது மங்கலம் என்ற வட சொல் சில இடங்களில் நல்லூர் எனத் தமிழில் மொழி பெயர்க் கப்பட்டு வழங்கி வருகிறது.

பரகேஸரி : சோழ மன்னர்கள் பட்டத்துக்கு வந்த வுடன் தம்பெயருக்கு முன் மாறி மாறிப்புனைந்து கொண்ட பட்டப் பெயர்களில் பரகேஸரி என்பது ஒன்றாகும். அதாவது ஒருசோழன் பரகேஸரி என்று புனைந்திருந்தால் அவனுக்கு அடுத்து வந்த சோழன இராஜகேஸரி என்றும் அவனுக்கும் அடுத்து வந்த சோழன் பரகேஸரி என்றும் மாறி மாறிப்புனைந்து கொண்டார்கள். பரகேஸரி என்பது மற்றவர்க்கெல் லாம் சிங்கம் போன்றவன் அல்லது சிறந்த சிங்கம் போன்றவன் என்று பொருள் படும் (இராஜகேஸரி என்பது மன்னர்க்கெல்லாம் சிங்கம் போன்றவன் என்று பொருள்படும்.)

முத்தரையரிடமிருந்து சோழ நாட்டை மீட்டுத் திரும்பவும் சோழராட்சியைத் தோற்றுவித்த விஜயாலய சோழன் தான் முதன் முதலில பரகேஸரி என்ற

பட்டத்தைப் புனைந்து கொண்டவன். அவனுக்குப் பின் வந்த மன்னர்களில் முதற்பராந்தகன், அரிஞ்சய சோழன், உத்தம சோழன் முதலியோர் பரகேஸரி என்ற பட்டம் புனைந்திருந்தனர்.

க்ஷத்திரிய சிகாமணி : இது முதலாம் இராச ராசனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும். இது க்ஷத்திரிய குலத்தவர்க் கெல்லாம் தலை மணி போன்றவன் என்று பொருள்படும். சோழ மண்டலத்தில் இருந்த வளநாடுகளில் ஒன்றுக்கு க்ஷத்திரிய சிகாமணி வளநாடு என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. "க்ஷத்திரிய சிகாமணி வள நாட்டுப் பட்டினக் கூற்றத்து நாகப் பட்டினம்" என்றும், "க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு ஸ்ரீ துங்க மங்கலம்' என்றும் லெய்டன் செப்பேட்டில் வரும் தொடர்களால் இந்த வளநாட்டில் நாகப்பட்டினம் திருநறையூர் (நாச்சியார் கோயில்) முதலிய ஊர்கள் அடங்கி இருந்தன எனத் தெரிகிறது. அதனால் க்ஷத்திரிய சிகாமணி வளநாடு என்பது ஏறத்தாழ அரசிலாற்றுக்கும் கடுவாய் ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு என்று ஊகிக் கலாம்.

---

2. கல்வெட்டியல்

1. தொல்லெழுத்தியல் பற்றி ஒரு கட்டுரை வரைக. (79 Sep.)

தொல்லெழுத்தியல்

முன்னுரை : எழுத்துக்கள் கையால் எழுதப்படுவ தால் அவற்றுக்கு எழுத்து என்று பெயர் வந்தது. இது வடிவெழுத்துக்குப் பொருத்தமான காரணம். இனி எழுத்துக்கள் வாயால் ஒலியாக எழுப்பப்படுவதாலும் அவற்றுக்கு எழுத்து என்று பெயர் வந்தது இது ஒலி எழுத்துக்குப் பொருத்தமான காரணம். இந்த இருவகை

களில் ஒலி எழுத்துப் பெரும்பாலும் மாறுதலின்றி ஒரு படித்தாக இருக்கும். ஆனால் வடிவெழுத்து, காலத்துக் காலம் மாறிக் கொண்டே வருகிறது இன்று எழுதும் வடிவில் முற்கால எழுத்துக்கள் எழுதப்படவில்லை. இன்றைய வடிவெழுத்தின் தோற்றத்துக்கு முற்கால எழுத்துக்கள் அடிப்படையாகும். இங்ஙனம் அடிப் படையாய் அமைந்த முற்கால எழுத்துக்களை ஆராயும் ஆராய்ச்சியே தொல்லெழுத்தியல் எனப்படும்.

ஆராய்ச்சி : தொல்லெழுத்துக்களை ஆராயும் ஆராயச்சி தமிழகத்திற்குப் புதியதன்று. நன்னூல் நூற்பா ஒன்று "தொல்லை வடிவின எல்லா எழுத்தும்" என்று கூறுகிறது நச்சினார்க்கினியர், "முன்னோர் புள்ளியாக எழுதியதை இக்காலத்தார் காலாக எழுதினர்" என்று கூறியுள்ளார். இங்ஙனம் நம் முன்னோர் மிகச்சிறிதளவே ஆராய்ந்தனர். ஆழமாக ஆராயவில்லை. தற்காலத்தில தான் தொல்லெழுத்தியல் ஆய்வு உயர்நிலை எய்தி இருக்கிறது.

கடவுளின் படைப்பா? : உலகப் பொருட்களை எல்லாம் படைத்தது போலவே எழுத்துக்களையும் கடவுள் தான் படைத்தார் என்று முற்காலத்தவர்கள் நம்பினர். எழுத்துக்கள் கடவுளால் படைக்கப்படவில்லை; மனிதர் களால் தான் எழுத்துக்கள் தோற்றுவிக்கப்பட்டன. மனிதர்களால் கூட நினைத்த மாத்திரத்தில் அவை தோற்று விக்கப்படவில்லை. முதலில் ஓவியங்களாக எழுதப்பட்டுப் பிறகு சிறு ஓவியங்களாகப் பிரிந்து, அது ஓவியக் குறியாகி ஒரு சொல்லின் முதலெழுத்தின் அடையாளமாக வந்தது. அந்த ஓவியக்குறியும் பல தலை முறையினரின் முயற்சியால் திரிந்து திரிந்து எழுத்துக்கள் உண்டாயின.

ஓவியங்கள் : எழுத்துக்களின் தோற்றத்துக்கு முதல் அடிப்படை ஓவியங்களேயாகும். வேட்டையாடித் திரிந்த தொல்புழங்கால மக்கள் தமது கருத்தை ஓவியமாக வரைந்து வைத்தனர். அத்தகைய

ஓவியங்கள் பிரஞ்சு, ஸ்பெயின் நாடுகளில் குகைகளில இன்றும் காணப்படுகின்றன.

ஓவிய எழுத்துக்கள் : ஓவியங்கள் மனக்கருத்தை அறிவிக்கும் அறிகுறியாகும். அதாவது பலவாக்கியங் களின் தொகுப்பு என்று சொல்லலாம். அவை சின்னஞ் சிறு ஓவியமாகப் பிரிந்து ஒவ்வொரு சிறு ஓவியமும் ஒவ்வொரு சொல்லின் அறிகுறியாக வளர்ச்சி யடைந்தன. எழுதத்தெரியாத பழங்காலத்தில் ஒரு கோயிலுக்குப் பல மாடுகள் இனமாக வழங்கப்பட்டன என்றால், கோயிலார் சுவரில் ஒரு மாட்டின் தலையை ஓவியமாக எழுதி எத்தனை மாடுகள் வந்தனவோ அத்தனைப் புள்ளிகளைப் பக்கத்தில் இட்டனர். இங்ஙனம் மாட்டின் தலையை எழுதி அது மாடு என்பதன் அறிகுறி என்று கருதப்பட்ட காலமானது, ஒரு சொல்லுக்கு ஒரு ஓவியம் என்று எழுதப்பட்ட கால மாகும். சீனம், ஜப்பானியம் போன்ற மொழிகளில் ஒரு சொல்லுக்கு ஒரு வடிவம் என்ற ஓவிய எழுத்து முறை இன்றும் இருந்து வருகிறது.

கருத்தெழுத்துக்கள் : ஓவிய எழுத்துக்கள் நாளடை வில் கருத்தெழுத்தாக வளர்ச்சியுற்றன. சூரியனின் ஓவியத்தை எழுதி இது சூரியன் என்று சொல்லப் பட்டால் அது ஓவிய எழுத்து எனப்படும். அந்தச் சூரியனின் ஓவியம், சூரியனோடு தொடர்புடைய பகற் காலத்தையோ சூரிய வெப்பத்தையோ குறிக்கிறதாகக் கொள்ளப்பட்டால் அது கருத்தெழுத்து எனப்படும். சீனம், ஜப்பானியம் போன்ற மொழிகளில் ஓவிய எழுத்து, கருத்தெழுத்து என்ற இருவகை நிலைகளும் உள்ளன.

ஒலிஎழுத்துக்கள் : ஒரு சொல்லுக்கு ஒரு அடையாள மாக எழுதிய ஓவியம், நாளடைவில் அச்சொல்லின் முதல் ஒலிக்கு உரிய அடையாளமாக ஏற்கப்பட்டது இங்ஙனம் ஒரு ஒலிக்கு ஒரு அடையாளம் என்று ஏற்பட்ட நிலையே ஒலி எழுத்தாகும். அதாவது ஓவிய எழுத்திலிருந்து ஒலி எழுத்துத் தோன்றிய மாற்றம்

புரட்சிகரமான மாற்றமாகும். கிரேக்க மொழியில் காளை மாட்டை ஆல்பா என்பர். எனவே காளை மாட்டின் தலையை எழுதி முதலில் ஆல்பா என்று கூறிவந்தனர். பிறகு அதே ஓவியம் ஆல்பா என்ற சொல்லின் முதல் ஒலியாகிய அ அல்லது A என்பதன் அறிகுறியாகக் கொள்ளப்பட்டது.

எழுத்து வகை : ஒலி எழுத்துக்கள் அகர வகை என்றும உயிர்மெய் வகை என்றும் இருவகைப்படும். ஒரு உயிர்மெய் எழுத்தை ஒரே வடிவாக எழுதாமல், மெய் வடிவமும் உயிர் வடிவமுகமாகப் பிரித்து எழுதும் முறையே அகர வகையாகும். தமிழில் எழுதும் க என்ற உயிர்மெய்யை, ஆங்கிலத்தில் KA என மெய்யும் உயிருமாகப் பிரித்தெழுதுவர். இங்ஙனம் பிரித்து எழுதும் முறையே அகரவகையாகும். இனி இவ்வாறு பிரித்து எழுதாமல் க என்று தமிழில் எழுதுவது போல ஒரே எழுத்து வடிவில் எழுதுவதே உயிர்மெய் வகையாகும்.

உயிர்மெய் வகை : ஓவிய எழுத்திலிருந்து ஒலி எழுத்துத் தோன்றிய போது முதலில் உயிர்மெய் வகைதான் தோன்றியிருக்கும். இந்த வகையின் எழுத்துக்கள் எண்ணற்றனவாகப் பல்கி இருக்கும். இவற்றை நினைவில் வைப்பது மிகவும் கடினமாகவே இருந்திருக்கும்.

அகரவகை : சிரியாவிலும் பாலஸ்தீனத்திலும் வாழ்ந்த வடசெமிடிக் மக்கள் கி. மு. 1500-ல் அகரவகை எழுத்தைக் கண்டுபிடித்தனர். இந்த வகையில் எழுத்துக்கள் குறைவாகவே இருக்கும் நினைவில் வைப்பதும் எளிதாக இருக்கும். ஹீப்ரூ, ரோமானியம் போன்ற மொழிகள் அகரவகை எழுத்துக்களை உடையனவாகும். இந்த மொழிகளைப் பின்பற்றி ஆங்கிலம் பிரஞ்சு முதலிய மொழிகளிலும் அகரவகை ஏற்பட்டது.

சிந்துவெளி எழுத்துக்கள் : ஹாரப்பா, மொகஞ்சதரோ என்ற இடங்களில் கிடைத்த எழுத்துக்கள்

கி. மு. 3000 ஐச் சார்ந்தவை. இவ்வெழுத்துக்கள் பெரும்பாலும் ஓவிய எழுத்துக்களாக உள்ளன. இவற்றுள் உயிர் மெய் வகையைச் சார்ந்த ஒலி எழுத்துக்கள் சிலவும் காணப்படுகின்றன.

முடிவுரை : கி. மு. 300-ல் அசோகன் காலத்தில் பிராமி கரோஷ்டி என்ற வடிவங்கள் இருந்தன என்பதற்குச் சான்று கிடைத்துள்ளது. அதேகாலத்தில் தமிழகத்தில் வழங்கிய தமிழி என்ற வடிவத்துக்கும் சான்று கிடைத்துள்ளது. தமிழியிலிருந்து நாளடைவில் வட்டெழுத்து, தமிழ் எழுத்து, தமிழ்க்கிரந்தம் போன்ற வடிவங்கள் தோன்றின. இங்ஙனம் படிப்படியாகவளர்ந்த பழங்காலஎழுத்துக்களை ஆராயும் ஆராய்ச்சிதான் தொல்லெழுத்தியல் எனப்படுகிறது.

2. தமிழி எழுத்துக்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக. (79Ap.)

தமிழி எழுத்துக்கள்

முன்னுரை : வடஇந்தியாவில் கி. மு. 3-ம் நூற்றுண்டில் அசோகன் காலத்தில் வழங்கிய எழுத்து, பிராமி எனப்படும். அதே காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்து வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்த எழுத்துக்களே தமிழி எழுத்துக்கள் ஆகும். தமிழி எழுத்துக்கள் பெரும்பாலும் பிராமியின் வடிவத்தை ஒத்திருப்பதால் ஒருசிலர் இதனைத் தமிழ்ப் பிராமி என்று கூறுகின்றனர். மற்றும் தமிழி எழுத்துக்கள் குகைகளில் காணப்படுவதால் லேேணு எழுக்கள் (குகை எழுத்துக்கள்) என்று சிலரால் சொல்லப்படுகிறது.

பெயர்க் காரணம் : தமிழி எழுத்துக்கள் பிராமியை ஒத்திருந்த போதிலும் தமக்கெனச் சில தனித் தன்மைகள் கொண்டிருக்கின்றன. எனவே தமிழ்ப் பிராமி என்ற பெயர் பொருத்தமாக இல்லை. மேலும் தமிழி எழுத்துக்கள் குகைகளில் மட்டுமின்றிப் பானை ஓடுகள், பாறைகள், காசுகள் ஆகியவற்றின் மேலும்

காணப்படுகின்றன. எனவே, லேனு எழுத்துக்கள் என்ற பெயரும் பொருத்தமாக இல்லை. கி. பி. 5 அல்லது 6-ம் நூற்றாண்டைச் சார்ந்த லலித விஸ்தரம் என்ற நூலில் 64 வகை எழுத்தின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் திராவிடி என்ற பெயரும் ஒன்றாக இருக்கிறது. எனவே திராவிடி என்று கூறலாம் என்பர் சிலர். ஆனால் அது தெலுங்கு கன்னடம் கிரந்தம் ஆகிய எழுத்துக்களைக் குறிக்கும் பொதுப் பெயராகலின் திராவிடி என்ற பெயரும் பொருத்தமாக இல்லை. கி. மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்த சமவயங்க சுத்த என்ற சமண நூலில் 18 வகை எழுத்தின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் பிராமி, கரோஷ்டி என்பவற்றோடு தமிழி என்ற பெயரும் ஒன்றாக இருக்கிறது. எனவே, பிராமியும் தமிழியும் வேறானவை என்பதும், கி. மு. முதல் நூற்றாண்டில் தமிழகத்தில் வழங்கிய எழுத்துத் தமிழி என வழங்கியது என்பதும் நாமும் அந்தத் தொல்லெழுத்தைத் தமிழி என்று வழங்குவதே பொருத்தமானது என்பதும் புலனாகும்.

தமிழியின் தோற்றம்: முதலில் ஓவியம் எழுதப்பட்டன. ஓவியத்திலிருந்து ஓவிய எழுத்துக்கள் தோன்றின. ஹாரப்பா மொகஞ்சதாரோவில் கிடைத்த எழுத்துக்கள் ஓவிய எழுத்துக்களாகும். இவை கி. மு. 3000ஐச் சார்ந்தவை. பிறகு ஓவிய எழுத்திலிருந்து ஒலி எழுத்துக்கள் தோன்றின. ஒலி எழுத்திலும் உயிர்மெய் வகைதான் முதலில் தோன்றியது. பிறகு கி. மு. 1500-ல் வடசெமிட்டிக் மக்களால் அகர வகை எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதிலிருந்து வடநாட்டுப் பிராமி தோன்றியது. ஆனால், தமிழி எழுத்துக்கள் உயிர்மெய் வகையைச் சார்ந்தவையாக உள்ளன. எனவே தமிழி எழுத்துக்கள் வட செமிட்டிக் எழுத்திலிருந்தோ பிராமியிலிருந்தோ தோன்றியிருக்க முடியாது. அவற்றுக்குமுற்பட்ட மொகஞ்சதரோ எழுத்திலிருந்து தான் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் எககாலத்தில் தோன்றியது என்பதற்குச்சான்று கிடைக்கவில்லை. தற்போது

கிடைத்துள்ள தமிழியின் வடிவங்கள் கி. மு. 3-ம் நூற்றுண்டு முதல் கி. பி. 3-ம் நூற்றுண்டுவரையான காலத்தைச் சார்ந்தன வாகும்.

தமிழி இருக்கும் இடங்கள்: வெங்கோபராவ் என்பவர் முதன் முதலில், கீழவளவு என்னும் இடத்தில் தமிழி எழுத்துக்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார். பிறகு கெமைடு என்பவர் மறுகால்தலே என்ற இடத்தில் தமிழி எழுத்தைக் கண்டுபிடித்தார். பிறகு பலர் பல்வேறு இடங்களில் தமிழி இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். குகைகளில் வாழ்ந்த சமணத் துறவிகளுக்கு அரசர்கள் வணிகர்கள் முதலியோர் கற்படுக் கைகளே அமைத்துக் கொடுத்து அச்செய்திகளேப் பாறைமுகப்பிலும் கற்படுக்கையின் தலேப்பிலும் தமிழி எழுத்துக்களில் பொறித்துவைத்தனர். இத்தகைய பொறிப்புக்கள் மீனுட்சிபுரம், திருவாதவூர், சித்தன்னவாசல், புகளூர் முதலான இடங்களில் உள்ளன. இங்ஙனம் குகைகளில் அமைந்துள்ளதோடு அரச்சலூரில் பாறைத் தளத்தில் ஓர் இசைக் கல்வெட்டுத் தமிழியில் பொறிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் அரிக்கமேட்டில் கிடைத்த சில பானே ஓடுகளிலும், செங்கம் பகுதியில் கிடைத்த சில காசுகளிலும் தமிழி வடிவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் தமிழகத்தின் வடபகுதியிலிருந்து தென்பகுதி வரையும் தமிழி எழுத்துக்கள் பரவலாகக் கிடைத்திருப்பதால் இவ்வெழுத்து எல்லாராலும் பரவலாகக் கையாளப்பட்டுப் பெருவழக்காக இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

தமிழியின் வடிவம்: தமிழி எழுத்துக்கள் எளிமையான வடிவமுடையன. தமிழ் மொழியின் ஒலிகள் பலவற்றுக்கும், வடமொழியின் ஸ, த (dha) என்ற ஒலிகளுக்கும் வரிவடிவங்கள் கிடைத்துள்ளன. மெய்கள் பெரும்பாலும் புள்ளிபெறவில்லே. சில இடங்களில் புள்ளி பெற்றுள்ளன. எகர ஏகாரமும் ஒகர ஓகாரம் வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளன. சில இடங்களில் எகர ஒகரக் குறில்கள் புள்ளி பெற்றுள்ளன.

முடிவுரை : இது காறும் கிடைத்த தமிழி எழுத்துக்கள் கி. மு. 300 முதல் கி. பி. 300 வரையான காலத்தன வாகும். கி. பி. 2-3-ம் நூற்றாண்டைச் சார்ந்த அரச்சலூர்க் கல்வெட்டில் தமிழி எழுத்தில் சில மாற்றம்—அதாவது புதியதோர் வளர்ச்சி—காணப்படுகிறது. இவ்வளர்ச்சி, தமிழ் வடிவம், வட்டெழுத்து வடிவம் ஆகிய இரண்டின் தோற்றத்தை அறிவுறுத்துகிறது. அதாவது கி. பி. 3-ம் நூற்றாண்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் தோன்றலாயின என்று தெரிகிறது.

3. தமிழ் எழுத்துக்களில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை வரலாற்று அடிப்படையில் விளக்குக. (78 Ap.)

தமிழ் எழுத்துக்கள்

முன்னுரை : கி. பி. 3-ம் நூற்றாண்டில் தமிழி எழுத்திலிருந்து தமிழ் எழுத்து, வட்டெழுத்து என்னும் இருவகை எழுத்துக்கள் தோன்றின. இந்த இருவகை எழுத்துக்களும் சில இடங்களில் ஒரே கல்வெட்டில் கலந்தும் காணப்படுகின்றன. விரைந்து எழுதும் காரணத்தாலும், அழகுக்காக இட்ட கோடுகளாலும், எழுதப் பயன்பட்ட பொருள்களின் தன்மையாலும் இவ்வெழுத்துக்கள் நாளடைவில் உருமாற்றம் பெற்றன.

பல்லவர் காலம் : முற்காலப் பல்லவரின் செப்பேடுகள் தெலுங்கு, கிரந்தம், கன்னடம் ஆகிய மூவகை வடிவில் எழுதப்பட்டுள்ளன. சிம்மவிஷ்ணுவின் பள்ளன் கோயில் செப்பேடுகள் கிரந்த எழுத்திலும் தமிழ் எழுத்திலும் அமைந்துள்ளன. மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டு முழுவதும் தமிழில் அமைந்துள்ளது. முதல் நரசிம்மவர்மனின் திருக்கழுக்குன்றக் கல்வெட்டில் சிலவட்டெழுத் துக்கள் கலந்துள்ளன. பிற்காலப் பல்லவர் செப்பேடுகள் கிரந்தத்திலும் தமிழிலும் அமைந்துள்ளன. அவர்களின் கல்வெட்டுகள் தமிழ், கிரந்தம், நாகரம் ஆகிய மூன்று வடிவங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவர் கால நடுகற் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் பொறிக் கப்பட்டுள்ளன.

2286—7

சோழர் காலம். முற்காலச் சோழரின் தமிழ் எழுத்துக்கள் பெரிதாகவும் அழகாகவும் உள்ளன. கவனத்துடன் எழுதப்பட்டதால் பிழைகள் குறைவாகவும் உள்ளன. முதலாம் இராசராசன் கால எழுத்துக்கள் ஒப்பற்ற வனப்பு உடையன. பிற்காலச் சோழரின் எழுத்துக்களில் அழகும் அமைதியும் இல்லை. 13ம் நூற்றுண்டு முதல் தமிழ எழுத்துக்களின் அழகு குறையத் தொடங்கிவிட்டது.

பாண்டியர் காலம் : கி. பி. 7, 8, 9ம் நூற்ருண்டுகளில் ஆண்ட பாண்டியரின் கல்வெட்டுகளில் சில தமிழிலும் பல கிரந்தத்திலும் அமைந்துள்ளன. இவர்களின் செப்பேடுகள் கிரந்தத்திலும் வட்டெழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

நாயக்கர் காலம் : விஜய நகர மன்னரின் கல்வெட்டுகள் கிரந்தத்திலும் தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துக்கள் அழகின்றிப் பிழை மலிந்து காணப்படுகின்றன. இவர்கள் கல்வெட்டுகளில் வட்டெழுத்தின் வடிவம் காணப்படவில்லை.

தமிழ் எழுத்தின் வடிவம் : மெய் எழுத்துக்களுக்குப் பெரும்பாலும் புள்ளியிடப்படவில்லை. சில இடங்களில் மட்டும் புள்ளிகள் காணப்படுகின்றன. ஆகாரக் குறி முதலில் செங்குத்துக் கோடுபோல இருநது நாளடைவில் வளர்ந்து காலாக மாறியது. இகரக் குறி மெய் மேல் வலப்புறம் நேர்கோணம் போல் இருந்து பிறகு வளை கோடாக மாறியது. ஈகாரக் குறி மெய்யின்மேல் இரண்டு வளைகோடாக இருந்து, பின் இடப்புறம் சுழி பெற்ற ஒரு வளைகோடாக மாறி, அதன்பின் வலப்புறம் சுழி பெற்றவளைகோடாக மாறியது. எகர ஏகாரக் குறி மெய்க்குமுன் ஒரு கொம்பாக அமைந்து வேறுபாடின்றி அமைந்துள்ளது. சில இடங்களில மட்டும் எகரக்குறி புள்ளியுடன் எழுதப்பட்டிருக்கிறது. ஐகாரக்குறி முதலில் இரண்டு கொம்புகளாக இடப்பட்டு பிறகு இரண்டும் இணைந்து தற்காலவடிவைப் பெற்

றுள்ளது. ஒகர ஓகாரக் குறி மெய்க்கு முன் ஒரு கொம்பும் மெய்க்குப்பின் ஆகாரக் குறியும் இட்டு எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில் மட்டும் ஒகரக்குறி புள்ளியுடன் எழுதப்பட்டிருக்கிறது. ஔகாரக்குறி பண்டைய எழுத்துக்களில் இல்லை. ஔகார ஒலி மெய்க்குப் பின் வகர ஒற்றுச் சேர்த்து எழுதிக்காட்டப்பட்டுள்ளது. பிற்கால நாயக்கர் கல்வெட்டுகளில் ஔகாரக் குறி தற்கால வடிவம் போல் எழுதப்பட்டுள்ளது.

4. ''கல்வெட்டில் தமிழ் எழுத்து''ப் பற்றிக் குறிப்பு வரைக. (79 Sep.)

விடை : 3ல் காண்க.

5. வட்டெழுத்துப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

வட்டெழுத்து

முன்னுரை : தமிழ்மொழியை எழுதுவதற்கு வழங்கிய வட்ட வடிவமான ஒருவகை எழுத்து வட்டெழுத்தாகும் 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்றில் "ஜீர்ணோத்தாரணம் செய்யுமிடத்து முன்புள்ள கல்வெட்டு வட்டமாகையால் தமிழாகப் படிஎடுத்து வெட்டப்பட்டது' என்ற செய்தி கூறப்பட்டிருக்கிறது. இதனால் வட்டம் என்ற பெயர்வழக்கு 13ம் நூற்றாண்டில் இருந்திருக்கிறது என்பது தெரிகிறது. மலையாள நாட்டிலும் வட்டெழுத்து வழங்கி வந்தது. ஆனால் அந்த எழுத்து, தெக்கன் மலையாளம் என்றும் நாநாமோன என்றும் பெயரிட்டு அழைக்கப்பட்டது.

வட்டெழுத்தின் தோற்றம் : வட்டெழுத்து பிராமியிலிருந்து தோன்றியது என்றும், கரோஷ்டியிலிருந்து தோன்றியது என்றும். பினீஷிய எழுத்திலிருந்து தோன்றியது என்றும் பலர் பலவாறாகக் கூறி வந்தனர். ஆனால் வட்டெழுத்து கி. பி. 3ம் நூற்றாண்டில் தமிழ் எழுத்திலிருந்து தோன்றியது என்று

கல்வெட்டுத் துறையினர் முடிவு செய்துள்ளனர். இதுவே உண்மையாகும்.

இருக்கும் இடங்கள் : தமிழகத்தின் தென் பகுதியான பாண்டி நாட்டிலும், வடபகுதியான வடார்க்காடு தென்னார்க்காடு செங்கற்பட்டு தர்மபுரி மாவட்டங்களிலும், மேல் பகுதியான கோவை மாவட்டத்திலும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

வளர்ச்சி : கி. பி. 2-3ம் நூற்றுண்டைச் சார்ந்த அரச்சலூர் கல்வெட்டில் தொடக்க கால வட்டெழுத்துகள் காணப்படுகின்றன கி. பி 5ம் நூற்றுண்டில் எழுந்த திருநாதர் குன்று கல்வெட்டும், கி. பி 6 முதல் 8ம் நூற்றுண்டுவரை எழுந்த பல்லவர் காலத்திய நடுகற் கல்வெட்டுகளும் வட்டெழுத்தில் அமைந்துள்ளன. முற்காலப் பாண்டியரது செப்பேடுகளின் தமிழ்ப் பகுதி வட்டெழுத்தால் எழுதப்பட்டுள்ளன. சோழர்கள் பாண்டிய மண்டலத்தைக் கைப்பற்றி ஆண்டகாலத்தில் பாண்டி நாட்டில் வரைந்த கல்வெட்டுகள் வட்டெழுத்தாக அமைந்துள்ளன. கொங்குச் சோழர்களின் கல்வெட்டுகளில் பல வட்டெழுத்தாக அமைந்துள்ளன.

முடிவுரை : கி. பி. 3ம் நூற்றுண்டில் தோன்றிய வட்டெழுத்து தொண்டை நாட்டில் 8ம் நூற்றுண்டுக்குப்பின் வழக் கொழிந்தது; பாண்டி நாட்டில் 12ம் நூற்றுண்டுவரை வழங்கிப் பிறகு வழக் கொழிந்துவிட்டது, ஆனுல் இந்த வட்டெழுத்து மலேயாள நாட்டில் அண்மைக் காலம்வரை வழங்கி வந்து பிறகு கிரந்த எழுத்தின் வடிவத்தோடு இணேந்து இன்றைய மலேயாள எழுத்தாக உருமாறிவிட்டது.

6. தமிழில் கிரந்த எழுத்துக்களின் வழக்காறு குறித்து ஒரு கட்டுரை வரைக. (78 Ap.)

கிரந்த எழுத்து

முன்னுரை : தமிழகத்தில் வடமொழியை எழுதத் தொன்று தொட்டுப் பயன்பட்டுவரும் ஒரு வகை

எழுத்து கிரந்த எழுத்து எனப்படும். கிரந்தம் என்ற சொல் வடமொழியில் நூல் என்று பொருள்படும். எனவே நூலை எழுதுவதற்கு அடிப்படையான எழுத்தையும் கிரந்தம் என்ற சொல்லால் குறித்தனர் போலும், சமவயங்க சுத்த என்ற நூலிலும் லலித விஸ்தரம் என்ற நூலிலும் கூறப்பட்டுள்ள பல்வகை எழுத்துக்களின் பெயர்களில் கிரந்தம் என்ற பெயர் காணப்படவில்லை. லலித விஸ்தரத்தில் திராவிடி என்ற பெயர் காணப்படுகிறது, திராவிடி என்பது தெலுங்கு, கன்னடம். கிரந்தம் என்ற மூவகை எழுத்துக்கும் பொதுவாக வழங்கிய பெயராகும். கிரந்த எழுத்தின் வடிவை உற்று நோக்குமிடத்து, இவ் வடிவம், தமிழ் எழுத்து வடிவின் அடிப்படையில் வட மொழியின் ஒலிகளுக்காக ஆக்கிக் கொள்ளப்பட்டதெனத் தெரிகிறது.

தோற்றம் : கிரந்த எழுத்து எப்பொழுது தோன்றியது என்று சரியாகத் தெரியவில்லை. தமிழ்க் கல்வெட்டுகளில், ஸ, த என்ற வடமொழி எழுத்துக்கள் கிரந்தவடிவில் காணப்படுகின்றன. அரிக்கமேட்டில் கிடைத்த பானை ஓடுகளின் மேலுள்ள தமிழ் எழுத்துக் களோடு கிரந்த எழுத்துச் சிலவும் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்களைக் கிரந்த எழுத்தின் முன்னோடிகள் என்று கூறலாம்.

பல்லவர் காலம் : கி. பி. 3-4ம் நூற்றுண்டுகளில் பல்லவர் அரசில் பிராகிருத மொழி செல்வாக்குப் பெற்றிருந்தது. 4ம் நூற்றுண்டில் சமஸ்கிருத நூல் பல இயற்றப்பட்டன. 5ம் நூற்றுண்டில் பல்லவர் ஆட்சியில் சமஸ்கிருதம் செல்வாக்குப் பெற்றிருந்தது. எனவே 3, 4, 5ம் நூற்றுண்டுகளில் பல்லவர்கள் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தினர். இக்காலக் கிரந்த எழுத்து மிக அழகாக எழுதப்பட்டிருக்கிறது. எனவே இந்த வடிவத்தைக் சிறப்பாக பிரித்தறிவதற்காகப் **பல்லவ கிரந்தம்** என்று அழைக்கின்றனர். கி. பி. 8ம் நூற்றுண்டில் ஆண்ட இராச சிம்ம பல்லவன் தான் கட்டிய கயிலாச நாதர் கோயிலில் மூன்று வகையான கிரந்த வடிவங்

களும் தேவ நாகரி வடிவமும் ஆகிய 4 வகையான எழுத்துக்களில் கல்வெட்டுகளைப் பொறித்துள்ளான். பல்லவர் கடல் கடந்து கீழை நாடுகளுடன் தொடர்பு கொண்டதால் அங்கேயும் பல்லவ கிரந்த எழுத்து பரவியது.

பாண்டியர் காலம் : 8ம் நூற்றுண்டைச் சார்ந்த பாண்டியரின் செப்பேடுகளின் பிரசஸ்திகள் கிரந்த எழுத்தால் எழுதப்பட்டுள்ளன. அவர்களின் கல்வெட்டுகளில் சிலவும் கிரந்த எழுத்தால் அமைந்துள்ளன. ஆனைமலை, அழகர்மலை, திருமெய்யம், குடுமியாமலை என்ற இடங்களில் உள்ள கல்வெட்டுகளிலும், வேள்விக்குடி, சின்னமனூர், சீவர மங்கலம் ஆகிய செப்பேடுகளிலும் கிரந்த எழுத்தைக் காணலாம்.

சோழர் காலம் : சோழர்கள் தமிழ் எழுத்தையும் கிரந்த எழுத்தையும் கையாண்டுள்ளனர். சோழரது செப்பேட்டிலும் கல்வெட்டிலும் வடமொழிப் பகுதிகள் கிரந்த எழுத்தால் எழுதப்பட்டுள்ளன. செப்பேட்டு முத்திரைகளில் கிரந்த வடிவே அமைந்திருக்கிறது. சோழரது காசுகளில் மதுராந்தகன், கங்கை கொண்ட சோழன் என்ற பெயர்கள் கிரந்த எழுத்தால் பொறிக்கப் பட்டுள்ளன.

முடிவுரை : விஜயநகர நாயக்கர்களும், மதுரை நாயக்கர்களும் தமது கல்வெட்டுகளில் வடமொழிப் பகுதியை எழுதக் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தினுர் கள். தமிழகத்தில் வெளியான வடமொழி நூல்கள் பெரும்பாலும் கிரந்த எழுத்திலேயே அச்சிடப்பட்டுள் ளன. 20ம் நூற்றுண்டில் இவ்வெழுத்துச் செல்வாக்குக் குறைய, இதனிடத்தைத் தேவநாகரி எழுத்து கவர்ந்து கொண்டு வருகிறது.

7. கல்வெட்டின் அமைப்புப் பற்றி விவரிக்க.

கல்வெட்டின் அமைப்பு

முன்னுரை : வீரமரணம் அடைந்தவர்க்குக் கல் நட்டு அக்கல்லில் அவரது பீடும் பெயரும் பொறிக்கப்

பட்டன என்று தொல்காப்பியமும் அகநானூறும் புறநானூறும் தெரிவிக்கின்றன. இதனால் கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் வழக்கம் தொல்காப்பியரின் காலமான கி.மு. 400க்கும் முற்பட்டது எனத்தெரிகிறது. ஆனால் சங்க காலத்திய நடுகற்கள் எதுவும் இதுகாறும் கிடைக்க வில்லை. பல்லவர்கால நடுகற்கல் வெட்டுகள் கிடைத்துள்ளன. நடுகற்களில் மட்டுமின்றிக் குகைத் தளங்கள், பாறைகள், கற்றூண்கள், மதிற் சுவர்கள் முதலான இடங்களில் வெட்டிய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கல்வெட்டுகளில் சில சொற்களாகவும், மற்றும் சில சொற்றொடர்களாகவும், பல சாசனங்களாகவும் கிடைத்துள்ளன. (சாசனம் என்பது அரசனின் ஆணை; அந்த ஆணைப்படி ஒருவர்க்கு வழங்கப்பட்ட கொடையின் விபரத்தைச் சாசனம் என்று கூறுகிறோம்.) சாசனமாக அமைந்த கல்வெட்டில் மங்கலச் சொல், காலம், செய்தி, கையெழுத்து ஓம்படைக் கிளவி என ஐந்து பகுதிகள் அமைந்திருக்கும்.

மங்கலச் சொல் : மங்கலச் சொல் என்பது கல்வெட்டின் தொடக்கத்தில் அமைந்திருக்கும் முதற் சொல்லாகும். பெரும்பாலான கல்வெட்டுகளில் **ஸ்வஸ்தி ஸ்ரீ** என்பதே மங்கலச் சொல்லாக அமைந்திருக்கிறது. இது மங்களம் உண்டாகட்டும் என்று பொருள்படும். சிற்சில கல்வெட்டுகளில் சுபமஸ்து, சிவமயம், அருளிச் செயல் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்று மங்கலச் சொல்லாக வந்திருக்கிறது.

காலம் : அரசனின் பெயரும் அவனது ஆட்சி ஆண்டுமாகக் குறிக்கப்பட்ட பகுதியே காலம் எனப்படும். சில கல்வெட்டுகளில் ஆட்சி ஆண்டுக்குப் பதிலாகச் சக ஆண்டு, கலி ஆண்டு, கொல்ல மாண்டு போன்றவற்றில் ஏதேனும் ஒன்று குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் அரசனின் பெயரைக் குறிக்குமிடத்து அவனது மெய்க் கீர்த்தியை இணைத்துக் கூறுவதும் உண்டு. மெய்க் கீர்த்தி எழுதும் வழக்கம் முதலாம் இராசராசன் காலம் முதலாகத்தான் வழக்கிற்கு வந்தது. மெய்க் கீர்த்தியின் தொடக்கத்

தைக் கண்டே இது இன்ன அரசனுடையது என்று கூறிவிடலாம். மெய்க் கீர்த்திப் பகுதியில் அரசனின் ஆட்சிச் சிறப்பும் வெற்றிச் சிறப்பும் கூறப்பட்டிருக்கும். சில மெய்க் கீர்த்திகளில் அரசனின் பட்டத்தரசியர் உறவினர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

செய்தி : சாஸனத்தின் நோக்கமே செய்தி எனப்படும். இது காலம் என்ற பகுதிக்குப் பின் குறிக்கப்படும். கோயிலுக்கு நிலம் வழங்கியது, நொந்தா விளக்கு வைத்துப் பசு எருமை ஆடு வழங்கியது, பூசைக்கு முதற்பொருளாகப் பொற்காசு வழங்கியது முதலானவற்றில் ஏதாவதொன்று செய்தியாகக் குறிக்கப்படும். தர்மம் செய்தவரின் பெயரும், தர்மத்தை நடத்தவேண்டிய முறையும், நிலத்தின் நான்கெல்லைகளும், வேறு பிற விபரபங்களும்கூட இடம்பெறும். இப்பகுதியே கல்வெட்டின் நீண்ட பெரும் பகுதியாகும்.

கை எழுத்து : கொடையளித்தவர், சாஸனத்தை எழுதிய கணக்கன், சாட்சிகள், நான்கெல்லை கண்டோர் போன்றவர்களின் கையொப்பமே கை எழுத்து என்ற பகுதி. இது செய்திப் பகுதிக்குப் பின் அமையும்.

ஓம்படைக் கிளவி : தர்மம் நிலையாக நடைபெற வேண்டும் என்பதற்காகக் கூறப்படும் பாது காவற் சொல் ஓம்படைக் கிளவி எனப்படும். இது கை எழுத்துப் பகுதிக்குப் பின் அமையும். ஒரோவழிக் கை எழுத்துக்கு முன்னும் அமையும். "பன்மாகேஸ்வரர் ரக்ஷை, வைஷ்ணவர் ரக்ஷை, இதற்குத் தீங்கு நினைத்தவன் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற் போவான், இதற்கு அகிதம் நினைத்தவர் பார்ப்பாராயின் கள்குடித்த பாவத்திற் போவார் துலுக்கராயின் மக்காவில் பன்றியைக் கொன்ற பாவத்திற் போவார்" என்ற தொடர்களில் ஏதேனும் ஒன்று ஓம்படைக் கிளவியாக எழுதப்பட்டிருக்கும். இனி இதனை ரக்ஷித்தார் அஸ்வமேதம் செய்த பலன் பெறுவார், இத் தன்மத்தைக் காத்தவர் அடி இரண்டும் என்

முடி மேலின" என்ற தொடர்களில் ஏதேனும் ஒன்று குறிக்கப்படுவதும் உண்டு.

வேறு பிற செய்திகள் : (1) சில கல்வெட்டுகளில் "செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்க" என்ற தொடர் காணப்படுவதால் கல்லில் வெட்டிய சாஸனத்தின் பிரதி செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டன எனத் தெரிகிறது. (2) சில கல்வெட்டுகளில் "செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வார்களாகவும் நாம் ஓலை கொடுத்தோம்" என்ற தொடர் காணப்படுவதால் கல்லில் வெட்டுவதற்குமுன் அச்சாஸனம் ஓலையில் எழுதப்பட்டு அரச ஆணையாக அனுப்பப்பட்டது எனத் தெரிகிறது. (3) உத்தரமேரூர்க் கல்வெட்டால் ஊர்ச்சபை உறுப்பினரைக் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கும் விபரம் தெரிகிறது. (4) வாயலூர்க் கல்வெட்டாலும் கன்னியாகுமரிக் கல்வெட்டாலும் அரசர்களின் மரபுமுறை தெளிவாகத் தெரிகிறது. (5) கோயில்களுக்கு நிலம் பசு ஆடு எருமை பொற்காசு என்பன வழங்கப்பட்டதோடு அணிகலன்கள் விளக்குள் பூசாபாத்திரங்கள் அளித்தமையும், தெய்வத் திருமேனிகள் பிரதிமங்கள் செய்து வைத்தமையும், திருப்பதியம் திவ்யப் பிரபந்தம் பாட ஏற்பாடு செய்தமையும், மண்டபம் கோபுரம் முதலியவை கட்டியமையும், திருவிழாக்கள் செய்வித்தமையும் தெரிகிறது. (6) சமயத் தொண்டுகளோடு சமூகத் தொண்டாகக் கல்விச் சாலை, மருத்துவச்சாலை, அன்ன சத்திரம் என்பன நடத்தியமையும் தெரிகிறது. (7) அக்கால மக்களின் பழக்க வழக்கங்கள், அளவுப் பெயர்கள் வரிவகைகள், நீதி வழங்கிய முறைகள் முதலான பல திறத்துச் செய்திகள் தெரிகின்றன.

8. தமிழி கல்வெட்டுகள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

தமிழி கல்வெட்டுகள்

முன்னுரை : தமிழி கல்வெட்டுகள் பெரும்பாலும் இயற்கையாய் அமைந்த மலைக் குகைளில் பாறைமுகப்பிலும், கற்படுக்கைகளின் தலைப்பிலும் காணப்படுகின்

றன. தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டுகளில் தமிழி கல்வெட்டுகளே காலத்தால் முற்பட்டவையாக உள்ளன. அவைகள் கி. மு. 3ம் நூற்றுண்டு முதல் கி. பி. 3ம் நூற்ருண்டு வரையான காலத்தனவாகும்.

இருப்பிடங்கள் : தமிழி கல்வெட்டுகள் மீனுட்சிபுரம், திருவாதவூர், அழகர் மலே, கீழவளவு, ஆனேமலே திருப்பரங்குன்றம், மறுகால்தலே, புகளூர், அரச்சலூர் முதலான ஊர்களில், ஊருக்கு ஒதுக்குப்புறமான மலேக் குகைகளிலும், பாறைத் தளத்திலும் காணப்படுகின்றன.

செய்திகள் : மலேக்குகைகளில் வாழ்ந்த சமணத் துறவிகளுக்கு அரசர்களும் வணிகர்களும் கற்படுக்கை செய்து கொடுத்த செய்திகளே மிகுதியாகக் காணப்படுகின்றன அரச்சலூர் கல்வெட்டு மட்டும் இசை நாட்டிய செய்தி பற்றியதாக இருக்கிறது. நந்தஸ்ரீ இயக்குவன் என்ற சமணத் துறவிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன், சடிகன், பிணவூ, சந்தரிதன், வெள்ளறை நிகமத்தோர் ஆகிய ஐவர் கற்படுக்கை செய்து கொடுத்த செய்தியை மீனுட்சிபுரம் கல்வெட்டு கூறுகிறது. ஈதேன் என்பவர்க்கு அவரது தம்பிமார்கள் சிறுபோ என்னும் சித்தன்ன வாசலில் அதிட்டானம் செய்து கொடுத்த செய்தியைச் •சித்தன வாசல் கல்வெட்டு கூறுகிறது. மதுரைப் பொற் கொல்லனுதன், கணிநாகன், உப்பு வணிகன் வியகன், கொழு வணிகன் நெடுமலன் அறுவை வணிகன் இளய அடன் முதலிய சமணத் துறவியர் கற்பக்கை பெற்றிருந்த செய்தியை அழகர்மலேக் கல்வெட்டு கூறுகிறது. கோஆதன் செல்லிரும் பொறையின் பேரனும் பெருங்கடுங்கோனின் மகனுமாகிய இளங்கடுங்கோன் ஆற்றூர்ச் செங்காயபனுக்குக் கற்படுக்கை செய்து கொடுத்த செய்தியைப் புகளூர் கல்வெட்டு கூறுகிறது.

சொல்லமைதி : (1) பணஅன், கடல்அன், இகுஅன் என்பன போல விகுதிகள் பிரித்து எழுதப்பட்டுள்

ளன. (2) அந்தை அ, ஆதன் அ, இகுஅன் கேஎன்பன போல வேற்றுமை உருபுகளும் பிரித்து எழுதப்பட்டுள் ளன. (3) குமிழ் ஊர், ஏழை ஊர், பதின் ஊர் என்பன போலச்சொற்கள் சில பிரித்து எழுதப்பட்டுள்ளன. (4) கணிய்பளிய், மணிய், வழுதிய் என்பனபோல் இகர ஈற்றுச் சொல்லின் இறுதியில்யகர ஒற்றுஒன்றுஅதிகப் படியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. (5) வெள்ளறைய் அந்தைய், உறைய் என்பனபோல ஐகார ஈற்றுச் சொல்லின் இறுதியிலும் யகர ஒற்று ஒன்று அதிகப் படியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. (6) மகன்+ இளங்கீரன்=மகன்ளங்கீரன், மகன்+இளங்கடுங்கோ= மகன்ளங்கடுங்கோ என்பனபோல னகர ஈற்றின் முன் வந்த இகர முதல் உயிர் கெட்டுப் புணரும் புணர்ப்பு சில இடங்களில் அமைந்திருக்கிறது. (7) கொட்டுவித்த என்பது கொடு பித எனவும், மதுரை என்பது மத்திரை எனவும், காவிதி என்பது காவுடி எனவும் திரிந்த உரு வங்களாக எழுதப்பட்டுள்ளன. (8) கணி, இகுவன், தம்மம், உபாசன் முதலிய பிராகிருதச் சொற்களும், அதிட்டானம் இவம் என்ற சமஸ்கிருதத்தின் திரிபுச் சொற்களும் கையாளப்பட்டுள்ளன.

முடிவுரை: தமிழி கல்வெட்டுகளை ஆராயும்போது, சங்க காலத்தில் தமிழகமலைக்குகை பலவற்றில் சமணத் துறவியர் வாழ்ந்தனர் என்பதும், அவர்களுக்குப் பாண்டியரும் சேரரும் வணிகரும் பிறரும் கற்படுக்கை செய்து கொடுத்தனர் என்பதும், கொங்கு நாட்டுக் கருவூர் சேரரின் தலைநகராக இருந்தது என்பதும் சேரரின் மூன்று தலை முறையின் பெயரும், இசை நாட் டிய நிலையும், எழுத்துருவமும், சொல்லமைதிகளும் அறிய வருகின்றன.

9. பல்லவர் காலத் தமிழ்க் கல்வெட்டுகளைப் பற்றி விவரிக்க.

பல்லவர் கல்வெட்டுகள்

கி. பி. 6ம் நூற்றூண்டுகளுக்கு முற்பட்ட பல்லவ ரின் செப்பேடுகள் பிராகிருத மொழியிலும் சமஸ்கிருத

மொழியிலும் அமைந்துள்ளன. இக்காலக் கல்வெட்டாக எதுவும் கிடைக்கவில்லை. சிம்மவர்மனின் பள்ளன்கோயில் செப்பேட்டின் தமிழ்ப் பகுதிதான், பல்லவர் காலத் தமிழ்ச் சாஸனங்களில் காலத்தால் முற்பட்டதாக உள்ளது. சிம்ம விஷ்ணுவின் 21ம் ஆண்டு முதலாகத் தமிழில் அமைந்த நடுகற் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. 2ம் நந்தி வர்மன் காலம் முதலாகத் தான் சாஸனமாக அமைந்த தமிழ்க் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

சிம்ம விஷ்ணு, முதலாம் மகேந்திரன், முதலாம் நரசிம்மன், 2ம் மகேந்திரன், முதலாம் பரமேஸ்வரன், 2ம் பரமேஸ்வரன், 2ம் நந்திவர்மன் காலத்தியவான நடுகற்கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. இவை வட்டெழுத்திலும், தமிழ் எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன இவை பெரும்பாலும் தொண்டை நாட்டில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளால் அக்கால மக்கள் வாழ்க்கையும்' ஆனிரை கவரும்போது அதனை மீட்டுப்பட்ட வீரர்களின் சிறப்பும், ஒரு சில அரசியல் செய்திகளும் தெரிய வருகின்றன.

பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட சாஸன வடிவத் தமிழ்க் கல்வெட்டுகளாக 260 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவை தொண்டை மண்டலத்திலும் சோழ மண்டலத்திலும் காணப்படுகின்றன.

பல்லவர் காலக் கல்வெட்டுகளால் அறிய வருகின்ற சிறப்பு அம்சங்கள் வருமாறு:—(1) பல்லவர் காலக் கல்வெட்டுகள் கோவிசைய என்று தொடங்குகின்றன. (2) பல்லவ மன்னர்கள் வர்மர், போத்தரையர், விக்ரம பருமர் என்ற சொற்களால் குறிக்கப்பட்டுள்ளனர். (சான்று: மகீந்திர பருமர், நரசிம்ம பருமர், மயேந்திர போத்தரசரு) (3) ஸ்வஸ்திஸ்ரீ என்ற மங்கலச் சொல் பல்லவர் கல்வெட்டுகளில் 2ம் நந்திவர்மன் காலம் முதலாகத்தான் காணப்படுகிறது. (4) பல்லவர்கள். தாம் வென்ற ஊரின் பெயரைத் தம் பெயருக்குமுன் சேர்த்து வழங்கினர். (சான்று: வாதாபிகொண்ட

நரசிம்ம வர்மன், தெள்ளாறெறிந்த நந்திவர்மன்; (5) பல்லவ மன்னரில் சிலர் செய்யுளியற்றும் திறம் படைத்திருந்தனர். (சான்று; திருத்தணி வீரட்டா னேஸ்வர் கோயில் கல்வெட்டில் உள்ள வெண்பா அபராஜிதவர்மனுல் இயற்றப்பட்டதாகும்) (6) பல்ல வரது ஆட்சிமுறை, வேளாண்மை, சமய வழிபாடு, கலே, பண்பாடு போன்றனவும் தெரியவருகின்றன

10. சோழர் காலத் தமிழ்க் கல்வெட்டுகள் என்னும் தலேப் பில் ஒரு கட்டுரை வரைக.

சோழர் காலத் தமிழ்க் கல்வெட்டுகள்

முன்னுரை : கி. பி 9 முதல் 13ம் நூற்றுண்டு வரை சோழர்கள் ஆட்சி செய்தனர். இவர்களால் வெட்டப் பட்ட கல்வெட்டுகள் ஆயிரக் கணக்கில் கிடைத்துள் ளன. இவைகளே இராசராசனுக்கு முந்தியோர் கல்வெட்டு என்றும் பிந்தியோர் கல்வெட்டு என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

முந்தியோர் கல்வெட்டுகள் : இராசராசனுக்கு முற் பட்ட மன்னரின் கல்வெட்டுகள் சுருக்கமான வடிவுடை யன. பெரிய எழுத்துக்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன, மெய்க்கீர்த்தி என்றப் பகுதி இடம் பெறவில்லே. அரசர் களின் பெயர்கள் குறிக்கப் படாமல் பரகேஸரி, இராச கேஸரி என்றப் பட்டப் பெயர் மட்டும் குறிக்கப்பட்டுள் ளன. தஞ்சை கொண்ட பரகேஸரி, தொண்டை நாடு பரவிய இராசகேஸரி என்பன போலத் தாம் தாம் பெற்ற வெற்றிச் சிறப்பைப் பட்டப் பெயர்க்கு முன் இணைத் துக் கொண்டதாகவும் தெரிகிறது.

பிந்தியோர் கல்வெட்டுகள்: இராசராசன் முதலாகப் பின் வந்தோர் கல்வெட்டுகள் பல, அளவில் பெரிதாக அமைந்துள்ளன. மெய்கீர்த்தி என்ற பகுதி இடம் பெற் றிருக்கிறது. ஆட்சிதுறை, வேளாண்மை, சமயவழி பாடு, கலே, பண்பாடு, வரிகள் முதலான பல்வேறு செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மெய்க்கீர்த்தி : முதலாம் இராசராசன்தான் மெய்க் கீர்த்தி எழுதும் வழக்கத்தை ஏற்படுத்தினான். இது செய்யுள் வடிவாக அமைந்திருக்கும் மெய்க்கீர்த்தி ஒரு மன்னனின் ஆட்சித்தொடகத்தில் சுருக்கமாக இருக்கும் ஆட்சி ஆண்டு வளர வளர அவ்வப்போது நிகழ்ந்த வெற்றிச் சிறப்புகள்சேர்க்கப்பட்டுமெய்கீர்த்திவளர்ந்து கொண்டேவரும். ஒரு மன்னனுக்கு ஒன்றுக்கு மேல் இரண்டு மூன்று வகை மெய்கீர்த்திகளும் உள்ளன. பொதுவாக மெய்க்கீர்த்தியின் தொடக்கத்தைக் கண்ட வுடன் இது இன்ன மன்னனுடையது என்று சொல்லி விடலாம்.(சான்று: இராசராசனது மெய்க்கீர்த்தி திரு மகள் போலப் பெருநிலச் செல்வியும் என்றும், இராசேந் திரனது மெய்க்கீர்த்தி திருமன்னி வளர எனவும் தொடங்குகின்றன.)

ஆண்டு: சோழர் கல் வெட்டுகளில் பெரும் பாலும் ஆட்சி ஆண்டு குறிக்கப்பட்டுள்ளன. சில கல்வெட்டு களில் கலி அல்லது சக ஆண்டும் மாதம் திதி வாரம் நக்ஷத்திரம் சூரிய கிரகணம் போன்றனவும் குறிக்கப் பட்டுள்ளன

நாட்டுப்பிரிவு: மண்டலம், வளநாடு, நாடு, ஊர் என நாட்டுப் பிரிவுகள் குறிக்கப்பட்டுள்ளன. வளநாடு என் பது இராசராசன் காலத்தில் ஏற்பட்டது. மற்றவை தொன்று தொட்டு வழங்கி வந்தவையாகும்

அளவைகள்: நிலங்கள் வேலி மா குழி என்ற அளவை களாலும், தானியங்கள் கலம் தூணி குறுணி நாழி உழக்கு என்ற அளவைகளாலும், பொன் முதலிய உலோகங்கள் மா, குன்றி, மஞ்சாடி,கழஞ்சு, பலம் என்ற அளவைகளாலும், விக்ரகங்களின் உயரம் முழம் : சாண் விரல் தோரை என்ற அளவைகளாலும் மிக நுணுக் மாக அளந்து கூறப்பட்டுள்ளன.

அதிகாரிகளும் அலுவலர்களும் : அமைச்சர் படைத் தலைவர் திருமந்திர ஓலை நாயகம் கருமமாராய்வோர் முதலிய அதிகாரிகளும், திருமந்திர ஓலை, கண்காணி,

வரிப் பொத்தகம், முகவெட்டி, கணக்கன் முதலிய அலுவலர்களும் சோழராட்சியில் இடம் பெற்றிருந் தனர்.

ஊர்ச்சபை : ஒவ்வொரு ஊரும் ஊர்ச்சபையால் ஆளப்பட்டு வந்தன. ஊர்ச் சபையானது சம்வஸ்திர வாரியம் தோட்டவாரியம் ஏரிவாரியம் முதலிய பல வாரியகளைக் கொண்டிருந்தது. ஊர்ச்சபை உறுப் பினர் குடவோலை முறையால் தேர்ந்தெடுக்கப்பட்டனர் உறுப்பினர் தகுதி, கடமை, உறுப்பினரின் தேர்வு முறை முதலிய விபரங்கள் உத்தரமேரூர்க்கல்வெட் டால் தெளிவாக விளங்குகின்றன.

கல்வியும் மருத்துவமும் : எண்ணாயிரம் என்ற ஊரில் உள்ள கல்வெட்டு கல்வி கற்பிக்கும் முறையும் கற்போர்க்கு உணவளித்த விபரமும் ஆசிரியர்க்கு அளித்த வசதியும் பற்றி விவரிக்கிறது. மற்றோர் கல் வெட்டு மருத்துவசாலை நடத்தியதைத் தெளிவாக விவரிக்கிறது. குந்தவையார் தனது தந்தையின் பேரால் தஞ்சையில் ஒரு ஆதுரசாலை (மருத்துவமனை) ஏற்படுத்தியதை ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது.

கொடைகள் : திருக் கோயில்களுக்கு வழிபாடு செய்யவும் விளக்கெரிக்கவும் திருப்பதியம் ஓதவும் நாட்டிய மாடவும் நிலம் பொற்காசு அணிகலன் பசு ஆடு எருமை முதலியன கொடுக்கப்பட்டன. திருக் கோயில்களில் திருமேனிகளும் பிரதிமங்களும் வாகனங் களும் செய்து வைக்கப்பட்டன. அந்தணர், கூத்தர், புலவர் முதலானோர்க்கு நிலம் வழங்கப்பட்டன. ஏழை களுக்கு அன்னசத்திரம் அமைத்துச் சோறளிக்கப் பட்டது. தண்ணீர்ப் பந்தல் அமைத்து நீர் வார்க்கப் பட்டது.

கல்வெட்டின் நடை : கல்வெட்டுகள் நல்ல தமிழ் நடையில் அமைந்துள்ளன. பிழைகளும் மிகக் குறை

வாகவே உள்ளன. ஒரு சில வழக்குச் சொற்களும் உள்ளன. செய்யுள் நடையில் அமைந்த கல்வெட்டு களும் உள்ளன. நரலோக வீரனின் திருப்பணிகளைக் கூறும் வெண்பா நடைக் கல்வெட்டுகள் தில்லையிலும் திருவதிகையிலும் வெட்டப்பட்டுள்ளன.

முடிவுரை : இதுகாறும் கண்ட செய்திகளால் சோழர் கல்வெட்டுகள் எண்ணிக்கையில் மிகுதியாகக் கிடைத்துள்ளன என்பதும், அக்கால மக்களின் பழக்க வழக்கம் வரி வகைகள் நாட்டுப் பிரிவுகள் ஆட்சி முறை வேளாண்மை கலை பண்பாடு முதலானவற்றைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் துணை செய்கின்றன என்பதும் புலனாகின்றன.

11. பாண்டியரது தமிழ்க் கல்வெட்டுகள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

பாண்டியரது தமிழ்க் கல்வெட்டுகள்

முன்னுரை : பாண்டியர்களைப் பல்லவர் காலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர் என இரு பிரிவாகப் பிரிக்கலாம். பல்லவர் காலப் பாண்டியரது கல்வெட்டுகள் தமிழில் அமைந்து வட்டெழுத்தால் பொறிக்கப்பட்டுள்ளன. பாண்டியரது கல்வெட்டுகளில் வைகைக் கரையில் கிடைத்த கல்வெட்டே காலத்தால் முந்தியதாகும். இது சேந்தன் என்ற பாண்டியன் தனது 50-வது ஆட்சி ஆண்டில் மங்கலா புரம் என்ற ஊரை அமைத்ததையும், வைகையாற்றில் மதகு கட்டியதையும், அரிகேசரி என்ற வாய்க்கால் வெட்டியதையும் அறிவிக்கிறது.

ஆண்டு : பல்லவர்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் சிலவற்றில் ஆட்சி ஆண்டோடு கலி அல்லது சக ஆண்டு குறிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவர்களின் கி. பி. ஆண்டை எளிதில் தெரிந்து கொள்ள முடிகிறது. பிற்காலப் பாண்டியரது கல்வெட்டுகளில் ஆட்சி ஆண்டு மட்டுமே குறிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும்

ஒரு சில கல்வெட்டுகளில் திதி வார நக்ஷத்திரம் கூறப் பட்டிருக்கிறது. இதனுல் கி. பி. ஆண்டை ஒருவாறு ஊகித்தறிய முடிகிறது. மேலும் ஆட்சி ஆண்டோடு எதிரா மாண்டு கூறும் வழக்கமும் காணப்படுகிறது.

நாட்டுப் பிரிவு : மண்டலம், வளநாடு, நாடு, ஊர் என்று நாட்டுப் பிரிவுகள் குறிக்கப்பட்டுள்ளன. சோழர் வகுத்த வளநாட்டுப் பெயர்கள் சிலவற்றைப் பிற்காலப் பாண்டியர் வேறு பெயரிட்டழைத்துள்ளனர்.

அதிகாரிகள் : பிற்காலப் பாண்டியரது ஆட்சியில் அமைச்சர் படைத் தலைவர் முதலிய அதிகாரிகள் இருந் தார்கள். இவர்களுக்கு அரையன், பேரரையன், விசை யரையன், தென்னவன் பிரமராயன், பாண்டிய விழுப் பரையன் முதலான விருதுப் பெயர்கள் வழங்கப் பட்டன.

ஊராட்சி : ஒவ்வொரு ஊரும் ஊர்ச்சபையால் ஆளப்பட்டன. ஊர்ச்சபை உறுப்பினர்கள் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். குடவோலை முறையை மானூரில் கிடைத்த பாண்டியரது கல் வெட்டு விவரிக்கிறது.

மெய்க்கீர்த்தி : சோழர்களைப் போலவே பிற்காலப் பாண்டியரும் தமது கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திப் பகுதியை இணைத்திருக்கிருர்கள். அந்த மெய்க்கீர்த் திகள் தமது செய்திகளை மட்டுமின்றி முன்னேர் செய்தி களையும் தம் செய்தி போலப் புனைந்து கூறுமாறு அமைந்துள்ளன. ஒரு சில மெய்க்கீர்த்திகள் சிறந்த இலக்கிய நயம் வாய்ந்தனவாக உள்ளன.

அரியணை : பாண்டியர் அமர்ந்திருந்த அரியணை களுக்கு மழவராயன், காலிங்கராயன், பல்லவராயன் என்ற சிறப்புப் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன.

காசுகள் : பாண்டியர்கள் பொன்னுலும் செம் பாலும் காசுகள் வெளியிட்டிருந்தார்கள். இவைகளில் ஒரு சில "சோணுடு கொண்டான், எல்லாம் தலை

யானுன்" என்ற சிறப்புப் பெயரால் வழங்கின என்றும் காசுகள் "குளிகை" என்ற பெயராலும் குறிக்கப்பட்டன என்றும் சில கல் வெட்டுகள் தெரிவிக்கின்றன.

முடிவுரை: பாண்டியரது கல்வெட்டுகளால் அவர் களது ஆட்சி முறை நாட்டுப் பிரிவு வரிவகை வேளாண்மை கலை பண்பாடு கோயிலின் வழிபாட்டு முறை போன்ற பல்வேறு செய்திகள் தெரிய வரு கின்றன.

12. விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகளைப் பற்றி விவரித்தெழுதுக :

விஜய நகர மன்னர் கல்வெட்டுகள்

விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகள் வடக்கே ஆந்திர நாடு முதல் தெற்கே மதுரை மாவட்டம் வரை காணப்படுகின்றன. இவர்கள் கல்வெட்டுகளில் எழுத் துக்கள் பெரிதாகவும் அழகின்றியும் பிழை மலிந்தும் காணப்படுகின்றன. வட சொற்கள் ஏராளமாகக் கையாளப்பட்டுள்ளன. வட மொழிப் பகுதியும், தமிழ்ப் பகுதியின் இடையேயுள்ள வட சொற்களும் கிரந்த எழுத்தால் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழ்ச் சொற்கள் தமிழ் எழுத்தால் பொறிக்கப்பட்டுள்ளன.

சோழ பாண்டியர்களில் ஒவ்வொரு மன்னர்க்கும் தனிப்பட்ட மெய்க் கீர்த்திகள் இருப்பதுபோல விஜய நகர மன்னர்களுக்குத் தனிப்பட்ட மெய்க் கீர்த்திகள் இல்லை. ஆனுல் எல்லா விஜய நகர மன்னர்களின் கல் வெட்டுகளிலும் "ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமந் மகா மண்டலேஸ் வரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராய ரகண்டன் மூவராயரகண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பூர்வ பச்சிம தக்ஷிண உத்தர சதுஸ் சமுத்திராதிபதி கஜவேட்டை கண் டருளின தேவர் துலுக்கர்தள விபாடன்" என்ற விருதுத் தொடர் காணப்படுகிறது.

விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகளில் ஆட்சி ஆண்டு குறிக்கப்படவில்லை. சக ஆண்டும் பிரபவாதி ஆண்டும் மாதம் திதி நட்சத்திரம் முதலிய கோள் நிலையும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சில கல்வெட்டு களில் கலியாண்டும் குறிக்கப்பட்டிருக்கிறது.

விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகளில் மன்ன ரின் போர் வெற்றியைக் குறிக்கும் கல்வெட்டுகள் மிகச் சிலவே உள்ளன. கிருஷ்ண தேவராயரின் திக் விஜயத்தை ஈங்கோய் மலைக்கல்வெட்டு விவரிக்கிறது. அககல்வெட்டில், "கிருஷ்ண தேவராயர் திக் விஜயம் செய்யும் பொருட்டு விஜய நகரத்திலிருந்து கிழக்குத் திசை நோக்கிப் புறப்பட்டு உதயகிரிக் கோட்டையை இடித்து அதன் தலைவனை திருமலைராகுத்தனைப் பிடித்து, பிறகு வினி கொண்டை, வெல்லம கொண்டை, நாகார்ச்சுன கொண்டை முதலிய இடங்களில் இருந்த கோட்டைகளை இடித்துப் பிரதாபருத்ர கஜபதியைக் கொன்று அவன் மகனை வீரபத்திரனையும் பிரகலாதன் சிரச்சந்திரன் மல்லூகான் உத்தண்டகான் முதலான படைத் தலைவர்களையும் உயிரோடு பிடித்துப் பிறகு சிங்காத்திரிக்குச் சென்று பொட்டுனூரில் வெற்றித் தூண் நிறுவினர்" என்று கூறப்பட்டிருக்கிறது.

விஜய நகரப் பேரரசின் ஆட்சியில் தளவாய், நாயக்கர், சதா சேர்வை என்ற அதிகாரிகள் இடம் பெற் றிருந்தனர். ராட்டிரம் சீர்மை பற்று ஊர் என்ற நாட்டுப் பிரிவுகள் வழங்கின. சோடி, சூலவரி, ஆயம், ஸ்தல ஆதிக்கம், புறவரி, அரசப் பேறு முதலான வரிகள் வசூலிக்கப்பட்டன.

"விஜய நகர மன்னர்கள் திருக்கோயில்களுக்கு நிலமும் பொன்னும் வழங்கினர்கள்; வாகனங்களும் தேரும் செய்தளித்தார்கள்; பெரிய மண்டபங்களைக் கட்டினர்கள்; மிக உயரமான கோபுரங்களைக் கட்டி னர்கள்; விழாக்களும் பூசையும் நடக்க ஏற்பாடுகள் செய்தார்கள்; துலா பாரதானம் கோதானம் முதலியன செய்தார்கள்." என்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

விஜய நகர மன்னர்களின் செப்பேட்டிலும் கல் வெட்டிலும் தொடக்கத்தில் கடவுள் வணக்கமாகச் சில வட மொழிச் சுலோகங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், "நமஸ்துங்க சிரச் சும்பி" "ஹரேர் லீலா வராஹஸ்ய" "கல்யாணு யாஸ்து" என்று தொடங்கும் சுலோகங்கள் பெரு வழக்காக அமைந்துள்ளன.

13. வட மொழிக் கல்வெட்டுகளைப் பற்றி ஒரு குறிப்பு வரைக. (79 Sep.)

வடமொழிக் கல்வெட்டுகள்

தமிழ் நாட்டில் தமிழ்க் கல்வெட்டுகள் மட்டுமின்றி வட மொழிக் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இவற்றில் பல கல்வெட்டுகள் முழுதும் வட மொழியாக உள்ளன. ஒரு சில கல்வெட்டுகள் தமிழக் கல்வெட்டின் ஒரு பகுதியாக அமைந்துள்ளன.

பொதுவாக வட மொழிக் கல்வெட்டுகள் இராஜ கீயம் என்றும் ஜானபதம் என்றும் இருவகைப்படும். இராஜகீயம் என்பது அரசனோ அரசியல் அதிகாரி களோ அளித்த உத்தரவுகளாக இருக்கும். ஜானபதம் என்பது பொது மக்கள தங்களுக்குள் செய்து கொண்ட உடன்படிக்கையாக இருக்கும். இனி இராஜ கீயத்தைச் சாஸனம், செயபத்திரம் ஆக்ஞாபத்ரம் பிரக்ஞாபனம் என நால்வகைப்படுத்துவர். கோயிலுக்கோ அந்தணர்க்கோ நிலம் கொடுத்த உத்தரவாக இருப்பது சாஸனமாகும். வழக்கை விசாரித்து அதற்கு அளித்த தீர்ப்பாக இருப்பது செயபத்திரமாகும். அரசன் அதிகாரிகளுக்கு இட்ட ஆணையாக இருப்பது ஆக்ஞாபத்திரமாகும். அதிகாரிகள் அரசனிடம் விண்ணப்பித்துக் கொண்ட தாக இருப்பது பிரக்ஞாபனமாகும்.

சிவன் வாயில் என்ற இடத்தில் கிடைத்துள்ள சிம்மவர்மனது கல்வெட்டுதான், தமிழகத்தில் கிடைத் துள்ள வடமொழிக் கல்வெட்டுகளில் காலத்தால் முற் பட்டதாகும். இது சிம்மவர்மன் செய்த அஸ்வமேதம், பகுசுவர்ணம் என்ற வேள்விகளைப் பற்றிக் கூறுகிறது.

மகேந்திரன் குடைவித்த குடைவரைகளில் அவனது வடமொழிப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மண்டகப் பட்டுக் குடை வரையில்,

'ஏதத் அனிஷ்டகம் அத்ருமம் அலோஹம்
அஸுதம் விசித்தி சித்தேன
நிரமாபிதம் ந்ருபேண
ப்ரும்மேஸ்வர விஷ்ணு லக்ஷிதாயதனம்'

என்னும் வடமொழிக் கல்வெட்டு இருக்கிறது. இக் கல்வெட்டு, 'நான்முகன் சிவன் திருமால் என்னும் மூவர்க்கும் செங்கலின்றி மரமின்றி உலோகமின்றிச் சுதையுமின்றி விசித்ர சித்தன் என்பவனுல் இக்கோயில் தோற்றுவிக் கப்பட்டது' என்று கூறுகிறது. திச்ருசிக் குடைவரையிலும் மகேந்திரனது வடமொழிக் கல் வெட்டுகள் உள்ளன.

மகாபலிபுரத்தில் கணேசரதத்தில் முதலாம் பரமேஸ்வரன் வெட்டுவித்த வடமொழிக் கல்வெட்டுகள் உள்ளன. அக்கல்வெட்டுகளே முதலாம் பரமேஸ்வரனைச் சிறந்த சிவபக்தன் என்றும் அவனுக்கு அத்யந்த காமன், ரணஜயன் என்ற பெயர்கள்வழங்கின என்றும் தெரிவிக்கின்றன.

காஞ்சிக் கயிலாச நாதர் கோயிலில் இராச சிம்மன் வெட்டுவித்த வடமொழிக் கல்வெட்டுகள் உள்ளன. அவைகள் சிலேடை முதலிய அணிகளுடன் சிறந்த காவியமாகத் திகழ்கின்றன.

ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோயிலில் பராந்தக நெடுஞ்சடையன் காலத்திய வடமொழிக்கல் வெட்டு ஒன்று இருக்கிறது. இது மாறன்காரி என்ற அமைச்சனும் அவன் தம்பியும் செய்த திருப்பணியைக் குறிப்பிடுகிறது.

குடுமியான் மலையில் உள்ள வடமொழிக்கல் வெட்டு சித்தம் நமசிவாய எனத் தொடங்குகிறது. இது ருத்ராசாரியாரின் சீடனும் பரம மாகேஸ்வரனு மாகிய மன்னனுல் வெட்டுவிக்கப்பட்டதெனத் தெரிவிக்

கிறது. மேலும் இசையின் சிறப்பையும், காந்தாரம் கவுசிகம் முதலிய பண்களை இசைக்கும் முறைகளையும் விளக்குகிறது இக்கல்வெட்டு மகேந்திர பல்லவனுல் வெட்டப்பட்டதெனச் சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் பாண்டிய மன்னர்களால் வெட்டப்பட்டது எனக் கூறுகின்றனர்.

கொடும்பாளூரில் பூதி விக்ரமகேசரியால் வெட்டப் பெற்ற வடமொழிக் கல்வெட்டொன்று இருக்கிறது. இது செய்யுள் வடிவில் அமைந்துள்ளது; இருக்குவேள் மன்னரின் 9 தலைமுறையினரையும் அவர்களது அறச் செயல்களையும் விவரிக்கிறது.

முதலாம் இராசராசன் கல்வெட்டுகளில் ஒரு சிலவற்றின் தொடக்கத்தில் வடமொழி சுலோகங்கள் காணப்படுகின்றன. கன்னியாகுமரியில் வீரராசேந்திர சோழன் வெட்டுவித்த வடமொழிக் கல்வெட்டு சோழ மன்னரின் மரபை அறிவிக்கும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. நரலோக வீரனின் திருப்பணிகள் சிதம்பரத்தில் வடமொழிக் கல்வெட்டுகளாகவும் தமிழ்க் கல்வெட்டுகளாகவும் வெட்டப்பட்டுள்ளன. சிதம்பரம் நடராசர் கோயிலின் மேலைக்கோபுர, கீழைக் கோபுர வாசல்களில் நாட்டியச் சிற்பங்களின் கீழே பரத முனிவரின் நாட்டிய நூலின் சூத்திரங்கள் வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளன. திருவாரூர்க் கோயிலில் உள்ள வடமொழிக்கல்வெட்டு, வழக்கு விசாரணையை விவரிப்பதோடு பல வடமொழி நூல்களையும்செய்யுட்களையும் மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறது.

பாண்டியர்கல்வெட்டுகள் சிலவற்றிலும்,விஜயநகர மன்னர் கல்வெட்டுகள் பலவற்றிலும் தொடக்கத்திலும். முடிவிலும் வடமொழிச் சுலோகங்கள் கையாளப்பட்டிருக்கின்றன.

முடிவாகக் கூறுமிடத்துத் தமிழக வரலாற்றை அறிவதற்கும் இசை நாட்டியக் கலைகளை ஆய்வதற்கும்

தமிழக வடமொழிக் கல்வெட்டுகள் பெருந்துணையாக உள்ளன என்று கூறலாம்.

14. செப்பேடுகள் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

செப்பேடுகள்

முன்னுரை : பழங்காலத்தில் கற்களில் எழுத்துக்களைப் பொறித்தது போல உலோகத் தகடுகளிலும் எழுத்துக்களைப் பொறித்திருக்கிறார்கள். பித்தளை செம்பு வெள்ளி போன்ற பலவகையான உலோகத் தகடுகள் பயன்பட்ட போதிலும் செப்புத்தகடுகளே மிகுதியாகக் கையாளப்பட்டிருப்பதால் இவைகள் "செப்பேடுகள்" என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன.

பழமை : உத்தரப்பிரதேசத்தில் கிடைத்த பித்தளைத் தகட்டின் எழுத்துக்கள் கி. மு. 3ம் நூற்றாண்டைச் சார்ந்ததெனக் கூறப்படுகிறது சங்க காலத்தில் இறையனார் செய்த அகப்பொருளின் 60 சூத்திரங்கள் 3 செப்பிதழ்களில் எழுதப்பட்டு ஆலவாய்க் கோயிலில் இருந்தது என்று அந்த நூலின் உரை கூறுகிறது. இவற்றால் செப்பேட்டில் எழுதும் வழக்கம் மிகப் பழங்காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது எனத் தெரிகிறது.

செம்பும் சிலையும் : ஒருசில கல்வெட்டுகளில் "செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்க" என்ற தொடர் காணப்படுகிறது. இதனால் கல்வெட்டின் பிரதிகள் செப்பேட்டிலும் பொறிக்கப்பட்டிருந்தன என்பது தெரிகிறது. ஷெர்கம் என்ற இடத்தில் உள்ள கல்வெட்டும் உதயாதித்தனின் செப்பேடும் ஒன்றாக அமைந்திருப்பதும் இச்செய்தியை உறுதி செய்கிறது.

தென்னிந்தியச் செப்பேடுகள் : மயிதவோலு செப்பேடு, ஹிர ஹத கலலிச் செப்பேடு, குணபதேயச் செப்பேடு, பள்ளன் கோயிற் செப்பேடு, கூரம் செப்பேடு, தண்டம் தோட்டச் செப்பேடு முதலியவை பல்லவர்களால்

அளிக்கப்பட்டனவாகும். சின்னமனூர்ச் செப்பேடு, வேள்விக்குடிச்செப்பேடு, தளவாய்புரச் செப்பேடு, சீவர மங்கலச் செப்பேடு முதலியவை பாண்டியர்களால் அளிக்கப்பட்டவையாகும். லெய்டன் செப்பேடு. திருவாலங்காட்டுச் செப்பேடு, கரந்தைச் செப்பேடு முதலியன சோழர்களால் அளிக்கப்பட்டவையாகும்.

செப்பேட்டின் வடிவம் : செப்பேடுகள் பெரும்பாலும் பனையோலையின் வடிவில் நீண்ட சதுர வடிவில்காணப் படுகின்றன. பனையோலைக ளைக்கோப்ப தற்குத் துளை யிட்டுஇருப்பதுபோலச் செப்பேடுகளின் இடதுபுறத்தில் துளையிட்டு அவை செப்பு வளையத்தில் கோக்கப்பட் டுள்ளன வளையத்தின் பொருதுவாயில் அரசனது முத் திரைஇருக்கிறது.செப்பேட்டின் வரம்புகள் தடித்தும் நடு பாகம் குழிந்தும் உள்ளன.இந்தஅமைப்பு, செப்பேடுகள் ஒன்றோடொன்று உராயும்போது அதன் எழுத்துக்கள் தேய்ந்து போகாமல் இருக்கச் செய்த ஏற்பாடாகும். சில செப்பேடுகளில் பக்க எண்கள்குறிக்கப்பட்டுள்ளன. சில செப்பேடுகள் சதுரமான வடிவிலும் உள்ளன.

பல்லவர் செப்பேடுகள் இரண்டு மூன்று ஏடுகளை மட்டும் பெற்றுச் சிறிதாக உள்ளன. பாண்டியர் செப் பேடுகள் பத்து ஏடுகள் வரை பெற்றுள்ளன. சோழர் செப்பேடுகள்தான் அதிகமானஏடுகளைப் பெற்றுள்ளன. ஆனைமங்கலச் செப்பேடு 21 ஏடுகளைப் பெற்றுள் ளது. திருவாலங்காட்டுச் செப்பேடு 31 ஏடுகளைக் கொண்டிருக்கிறது. கரந்தைச் செப்பேடு 55 ஏடுகளைப் பெற்றிருக்கிறது. கிடைத்துள்ளவற்றில் கரந்தைச் செப்பேடுதான் மிகப் பெரியது.

எழுத்தமைதியும் மொழியும் : கி. பி. 3ஆம் நூற்றாண் டைச் சார்ந்த பல்லவரது செப்பேடுகள் கிரந்த எழுத் தால் பொறிக்கப்பட்டு, பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளாக அமைந்துள்ளன. 6ஆம் நூற் றாண்டைச் சார்ந்த பல்லவரது செப்பேடுகள் ஒரு பகுதி கிரந்த எழுத்தாலும் ஒரு பகுதி தமிழ் எழுத்தாலும் பொறிக்கப்பட்டுள்ளன. பாண்டியரது செப்பேடுகள் வடமொழிப் பகுதி கிரந்த எழுத்தாலும், தமிழ்ப் பகுதி

வட்டெழுத்தாலும் பொறிக்கப்பட்டுள்ளன. சோழர் செப்பேடுகளில் பெரும்பாலும் வடமொழிப் பகுதி கிரந்த எழுத்தாலும் தமிழ்ப் பகுதி தமிழ் எழுத்தாலும் பொறிக்கப்பட்டுள்ளன. சோழரின் திருக்களர் செப்பேடும், வீர பாண்டியனது செப்பேடும், சேதுபதிகளின் செப்பேடும் முற்றும் தமிழ் எழுத்தாலேயே பொறிக்கப்பட்டுள்ளன. விஜயநகர மன்னர்களின்செப்பேடுகள் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூவகை எழுத்தாலும் மூவகை மொழியிலுமாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

செப்பேட்டின் வாசகம் : செப்பேட்டின் வாசகங்களை முன்னுரை, குறிப்புரை, முடிவுரை என மூன்று வகைப் படுத்தலாம். (1) முன்னுரையில் கடவுள் வணக்கமும் கொடை வழங்கிய இடமும் கொடை அளித்தவரின் பெயரும் அவரது பரம்பரையும் குறிக்கப்படும். இப் பகுதி ஸ்வஸ்திஸ்ரீ, ஓம் நமசிவாய, ஜிதம்பகவதா போன்ற மங்கலச் சொல்லால் தொடங்கும். சில செப் பேடுகளில் இப்பகுதியில் மன்னரது பரம்பரை மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. (2) குறிப்புரையில் கொடையாக அளிக்கப்பட்ட பொருள் இன்னது என்பதும் கொடையைப் பெற்றவரது பெயரும் கொடைக்குக் காரணமும் நிலமாயின் அதன் நான்கெல் லைகளும் குறிக்கப்படும். (3)முடிவுரையில் கொடைக்குத் தீங்கு விளைக்கலாகாது என்பதும் ஆணையை நிறை வேற்றிய அதிகாரிகளின் பெயர்களும், கொடையளித்த ஆண்டும் சம்பந்தப்பட்டவர்களின் கையொப்பமும் குறிக் கப்படும்.

முடிவுரை : கல்வெட்டுகளை விடச் செப்பேடுகள் விரி வாகவும் விளக்கமாகவும் அமைந்துள்ளன; மன்னரது பரம்பரையை அறிவிக்கின்றன. அதனால் வரலாற்றை வரைவதற்குச் செப்பேடுகள் பெருந்துணை செய்வன வாக இருக்கின்றன. தற்போது கிடைத்துள்ளவற்றைப் போல முற்காலத்தில் இன்னும் பல செபபேடுகள் வெளி யிடப் பட்டிருக்கக் கூடும். ஆனால் அவற்றின் அருமை யறியாத குறையாலும், செம்பின் மேல கொண்ட

ஆசையாலும் அவைகள் அழிக்கப்பட்டிருக்குமோ என ஐயுற வேண்டியுள்ளது.

15. நடுகற்கள் என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

நடுகற்கள்

முன்னுரை : போரில் தனது வீரங்காட்டி இறந்துபட்ட வீரர்களின் நினைவுக்காக நடப்படும் கல் நடுகல் எனப்படும். நடுகல் நடும் வழக்கம் தமிழகத்தில் மிகப் பழங்காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் புறத்திணை இயலில் நடுகல் நடுவது பற்றிக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்து என ஆறு துறைகள் கூறப்பட்டுள்ளன. இதனுல் நடுகல்லின் பழமை நன்கு புலனுகும்.

நடுகல் நடும் முறை : வீரனுக்குத் தக்கதாகக் கல் உள்ள இடத்துக்குச் சென்று கல்லைத் தேர்ந்தெடுப்பது காட்சி எனப்படும். தேர்ந்த கல்லைப் பூச்சூட்டிப் புகை யூட்டி மணிஒலித்து எடுத்து வருவது கால்கோள் எனப் படும். அக்கல்லுக்குப் புனித நீராட்டுவது நீர்ப்படை எனப்படும், பல்லியம் இயம்ப விழா எடுத்து அக்கல்லை நடுவது நடுதலாகும். நட்ட கல்லிற்கு மூன்று பக்கமும் பலகைக் கற்களை நிறுத்தி அடிக்கல் ஒன்றும் தலைக்கல் ஒன்றுமாகப் பொருத்திக் கோயிலமைப்பது பெரும் படை எனப்படும். பின்னர் ஆண்டுக்கொரு முறையோ நாள்தோறுமோ வழிபாடு செய்வது வாழ்த்து எனப் படும்.

நடுகல்லின் அமைப்பு : நடப்போகும் கல்லில் வீரனின் வடிவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்படும்- வீரன் வடிவம் நின்ற கோலத்தில் இடக்கையில் வில் ஏந்தி இருப்பது போலவும் வலக்கையால் இடுப்பில் உள்ள குறுவாளை உருவுவது போலவும் காணப்படும். இடுப்பில் நீண்ட துணி அணிந்திருப்பது போலத் தோன்றும். மேலாடை இருக்காது. சிற்பத்தின் மேல் பாகத்திலும் பக்கங்களிலும் கல்வெட்டுப் பொறிக்கப் பட்டிருக்கும். வீரனின் வடிவத்தோடு ஆனிரை,

கெண்டி, கண்ணாடி, நாய் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டிருப்பதும் உண்டு.

பெயர்கள் : நடுகற்கள் பல இடங்களில் தெய்வமாகக் கருதி இன்றும் வழிபடப்படுகின்றன. அக்கற்களில் குடி கொண்டிருக்கும் வீரர்களை வேடியப்பன், கிருஷ்ணாரப்பன், மீனாரப்பன், சன்யாசியப்பன், சிறைமீட்டான் போன்ற பெயர்களிட்டு அழைக்கிறார்கள்.

நடுகல் இருக்கும் இடங்கள் : நடுகற்கள் வடார்க்காடு தென்னார்க்காடு, செங்கற்பட்டு, தர்மபுரி, சேலம், கோவை ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இந்த நடுகற்கள் ஊரின் நடுவே இருப்பதில்லை; ஊரின் புறத்தேதான் இருக்கின்றன. ஒரே இடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நடுகற்கள் இருப்பதும் உண்டு. பெரும்பாலான நடுகற்களில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு சில கற்கள் கல்வெட்டு இல்லாமலும் நடப்பட்டுள்ளன. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் இதுகாறும் நடுகற்களினின்று 60 கல்வெட்டுகளைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

காலம் : நடுகற்களில் உள்ள கல்வெட்டுகளிலிருந்து அவைகள் கி. பி. 5 முதல் 16 வரையான நூற்றாண்டுகளைச் சார்ந்தவை எனத் தெரிகிறது. சங்ககால நடுகற் கல்வெட்டுகள் எதுவும் இதுகாறும் கிடைக்கவில்லை.

எழுத்தும் மொழியும் : பல்லவர் கால நடுகற்களில் பெரும்பாலானவை வட்டெழுத்திலும், ஒருசில தமிழ் எழுத்திலும், ஒன்றிரண்டு கனனட எழுத்திலுமாகப் பொறிக்கப்பட்டுள்ளன. சோழர் கால நடுகற்களில் வட்டெழுத்து வடிவம் இல்லை; தமிழ் எழுத்தே காணப்படுகிறது. கிரந்த எழுத்தில் அமைந்த கல்வெட்டு எதுவும் கிடைக்கவில்லை. இக் கல்வெட்டுக்களில் தமிழ் மொழி கன்னடமொழி கையாளப்பட்டிருக்கின்றன; வடமொழி கையாளப்படவில்லை.

கல்வெட்டின் அமைப்பு : நடுநற் கல்வெட்டுகளில் பெரும்பாலும் சுருக்கமாகவே உள்ளன. இவற்றில்

மன்னன் பெயரும் ஆட்சி ஆண்டும் வீரமரணம் எய்திய வனின் பெயரும் அவனது செயல்களும் நிரைகோடல் மீட்டல்களும், போன்றவை கூறப்பட்டிருக்கின்றன. நடுகல்லை நட்டவர் பெயரும், நடுகல்லுக்கு அளித்த நிலக் கொடையும் கூட ஓரிரு கல்வெட்டுகளில் கூறப் பட்டுள்ளன.

யார் யாருக்கு நடுகல் : நிரை கவரும் போதும், நிரை மீட்கும் போதும், கடத்திச் செல்லப்பட்ட பெண்களை மீட்கும் போதும், தன் ஊரை எதிர்த்த பகைவரை விரட்டியடிக்கும் போதும், புலி பன்றி போன்ற கொடிய விலங்குகளை எதிர்த்துக் குத்தும் போதும் வீரமரணம் எய்திய மறவர்க்கு நடுகல் நடப்பட்டது. மற்றும் தன் உடம்பை அரிந்து நவகண்டம் கொடுத்துத் தலையை யும் வெட்டிப்பலி பீடத்தில் வைத்தவனுக்கும் நடுகல் நடப்பட்டது.

அறியப்படும் செய்திகள்: பேரரசர் பெயர்களும், அவர்க்கு அடங்கிய சிற்றரசர் பெயர்களும், அவர்கள் ஆண்ட நாடுகள் ஊர்களின் பெயர்களும், சிற்றரசர்க்கு உற்றுழி உதவி உயிரையும் தியாகம் செய்த மெய் காவலர் பெயர்களும், அறியப்படுகின்றன. மற்றும் நிரைகோடல் மீட்டல் கள்வர் கவரல் பெண்களைக் கவர் தல் ஊரை எதிர்த்தவரோடு போராடல் முதலிய காலங் களில் உயிர்நீத்த வீரர்களைப் பாராட்டி நடுகல் நட்டு வழிபட்டதும், வீரர்க்கு உறுதுணையாக இருந்து போராடிய நாய்க்கும் கூட நடுகல் நடப்பட்டதும், காட்டிலிருந்து நாட்டுக்குள் நுழைந்து நலிவுசெய்த புலி பன்றிகளைக் குத்தி வீரமரணம் எய்தியதும் முதலான செய்திகள் அறியப்படுகின்றன.

முடிவுரை : நடுகற் கல்வெட்டுகள் எல்லாம் சில வீரர்களைப் பற்றிய குறிப்புக்கள் தானே என்று அவற்றைப் புறக்கணித்து விடமுடியாது. அவற்றால் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளும், வீரர்க்குச் செய்யப்பட்ட பாராட்டும், ஒருசில வரலாற்று நுட்பங் களும் புலப்படுகின்றன. எனவே வரலாற்றுத் துறைக்கு நடுகற் கல்வெட்டுகளும் தம்மாலான துணையைச் செய் கின்றன என்று அவைகள் பாராட்டப்படுகின்றன.

(நிறைவு)

ஆசிரியரின் பிற நூல்கள்

மோகன் பதிப்பகம்

4 பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி
சென்னை-600 005.